கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



KALKI • 17.08.2008 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



திருமா
25!

- பள்ளி மாணவர்களின் பஞ்சாயத்து!
- குசேலன் - திரை விமர்சனம்

Dr.Kamakshi Memorial Hospital



Dr. T.G. Govindarajan
President - Founder -
Medical Director

தமிழ்நாட்டிலேயே முதல்முறையாக உடலிலுள்ள புற்றுநோய்
மற்றும் இதர நோய்களை எளிதில் கண்டறிய உதவும்

PET CT Scan

மருத்துவ சேவை நிறுவனத்தில் ஒரு மைல்கல்
தமிழகத்தில் இதுவே முதல் முறை

Dr. காமாட்சி மருத்துவமனை
கேன்சர் இன்ஸ்டிடுட் (wia)
இணைந்து பெருமையுடன்
அறிமுகம் செய்துள்ளது



CANCER INSTITUTE
Canal Bank Road
Gandhi Nagar, Adyar
Chennai - 20
Cell : 93814 36899
93814 36896

10% Special
Discount On Sunday
for Master & Executive
Health Check-up

தமிழ் நாட்டில் முதல் PET CT Scan

இந்தியாவில் 4, 5 இடங்களில் மட்டுமே உள்ள இந்த ஸ்கேனிங் கருவியின் சிறப்பம்சங்கள்:

* பெட் சி.டி.ஸ்கேன் என்பது உடல் அணுக்களின் செயல்திறன் பற்றியும் அணு பெருக்கத்தைப் பற்றியும் முழு தகவல்களைத் தரவல்லது.
* முக்கியமாக பெட் சி.டி.ஸ்கேன், மனிதனின் உச்சந்தலையிலிருந்து, உள்ளங்கால் வரை முழுவதும் பரிசோதிப்பதால், உடலில் எங்கெல்லாம் புற்றுநோய் இருக்கிறது? அது வேறு எங்கெல்லாம் பரவியிருக்கிறது? நோயின் தீவிரம் எந்த அளவு உள்ளது? என்பதை எல்லாம் துல்லியமாகக் கண்டறியப் பயன்படுகிறது.
* அதேபோல், ரேடியோதெரபி, கீமோதெரபி போன்ற சிகிச்சைகளுக்குப் முன் 'பீரியாடிகல் ரிவியூ' மூலம் நோயின் தாக்கம் எவ்வளவு குறைந்துள்ளது என்பதையும் கண்டறியலாம்.
* மூளையில் ஏற்படும் 'அல்ஸேமெர்ஸ்', 'பார்க்கின்சன்ஸ்', புற்றுநோய் போன்ற நோய்களை கண்டறியவும், அவற்றுக்கு எளிய முறையில் கண்டறியவும், 'பெட் சி.டி. ஸ்கேன்' பயன்படுகிறது.
* புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களுக்கு எந்த மாதிரியான சிகிச்சை முறையை பின்பற்ற வேண்டும் என்று தெளிவாக உணர்த்துகிறது. இதயத்தில் உள்ள பிரச்னைகள் மற்றும் தசைகளின் செயல்பாடுகளை அறிய உதவுகிறது.

இலவச ஆலோசனைக்கு: எஸ்.சுபாஷிணி - 93451 20265, 93810 30712

#1, Radial Road, Pallikaranai, Chennai - 600 100.
Tel : +91-44-22469200 (30 Lines), 66300300 (30 Lines), Fax : 22463282
E-mail : info@drkamakshimemorialhospital.org
Website : www.drkamakshimemorialhospital.org


அனைவருக்கும் ஒரே நேர்மையான
விலைக்கொள்கை
கூடுதல் செய்கூலி, சேதாரம், தள்ளுபடி
என எந்தவித தந்திரங்களும் இல்லாமல்,
ஒரு சிறு குழந்தை வந்தால் கூட மிக மிகச் சரியான விலையில்
தரமான நகைகளை நாங்கள் தருகிறோம்.
இந்தியாவின் தன்னிகரற்ற தங்கமாளிகைகள்
ஸ்ரீ குமரன் தங்கமாளிகை
தி சென்னை சில்க்ஸ் ஜுவல்லரி மஹால்
(தி சென்னை சில்க்ஸ் பக்கத்தில்)
கோயம்புத்தூர் • திருப்பூர் • ஈரோடு • திருச்சி • சென்னை
பரந்து விரிந்த கார் பார்க்கிங் வசதி
Shop online at www.sktm.in

கலைஞரோடு கருத்து வேறுபாடா?



திருமாவளவன் பேட்டி



விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன், அரசியலில் நுழைந்து இருபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. இந்த நிகழ்வைக் கலக்கலாகக் கொண்டாடுகிறது விடுதலைச் சிறுத்தைகள் கட்சி. இப்படிப்பட்ட நேரத்தில் அவரது அனுபவங்கள் + இன்றைய அரசியல் சூழல் குறித்து, நம்மோடு பேசினார் திருமாவளவன்.

மறக்கமுடியாத சோகம் : தமிழகத்தில் வளர்ந்த கட்சிகளில் ஒன்றாக, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இருப்பதில் பெரிய திருப்தி. கடந்து வந்த பாதையைப் பார்க்கும்போது, பல சவால்களையும் துரோகங்களையும் சந்தித்தாலும், திருச்சி அருகே திண்ணியம் கிராமத்தில், தாழ்த்தப்பட்டவர்கள் மீது அரங்கேற்றப்பட்ட கொடுஞ்செயல், உயிருள்ளவரை மறக்க முடியாத சோகம்.

இன்ப அதிர்ச்சி : 2006 சட்டமன்றத் தேர்தலில், அ.இ.அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்துச் செயல்பட்டோம். ஆனால், பின்னர் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில், எங்களை நட்டாற்றில் விட்டுவிட்டார் ஜெயலலிதா. உடனே அரவணைத்த கலைஞர், கடைசி சந்தர்ப்பத்திலும் எங்களுக்குச் சில இடங்களைக் கொடுத்தார். இன்று சில உள்ளாட்சிகளில், சிறுத்தைகள் பொறுப்பு வகிக்கின்றனர் என்றால் அதற்குக்



காரணம் கலைஞரே!

எதிரிகள் : தனி மனிதர் யாரையும் எதிரியாகக் கருதுவதில்லை. சாதி, மத ரீதியாக மக்களைத் தவறான பாதையில் வழி நடத்துகிற இயக்கங்கள் அல்லது கூட்டங்களை, முக்கிய எதிரிகளாகக் கருதுகிறோம். அவர்களைக் கடுமையாக எதிர்ப் போம்.

கட்சிக்குத் துரோகம்: எனக்குத் துரோகம் செய்துவிட்டுப் போனவர் களைப் பழிவாங்க வேண்டுமென்று மன தளவில்கூட நினைப் பதில்லை. அவர்களின் அரசியல் அறியாமையை எண்ணி, என்னைச் சமாதானப்படுத்திக் கொள்வேன். மக்களின் நலன் பற்றிக் கவலைப் படாமல், சுயநலம் சார்ந்து செயல்படுகிறார்களே என்று நொந்துகொள்வேன்.



"கலைஞரோடு எங்களுக்குக் கருத்து மோதல் உண்டு. ஆனால், கருத்தியல் மோதல் கிடையாது!"

கலைஞர் : வாழும் தலைவர்களில் என்னைப் பாதித்தவர். பல இழிவுகளையும் வேதனைகளையும், சந்தித்து, இன்றும் சமூகநீதி பிடிப்போடு இருக்கும் கலைஞர், முன்மாதிரி

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்: லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : சீதா ரவி

உதவி ஆசிரியர் : கதிர்பாரதி

வடிவமைப்பு : எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி : 044 - 4343 8888 (30 lines)

தொலைநகல் : 044 - 4343 8899

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு : kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு : marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு : subscription@kalkiweekly.com

பிற தகவல்கள் : info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ.2,700/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

அரசியல்வாதி. அவரோடு எனக்குக் கருத்து மோதல்கள் உண்டு; கருத்தியல் வேறுபாடு கிடையாது.




தி.மு.க. கூட்டணி - பந்தாடப்பட்ட பா.ம.க:

நாங்கள் தி.மு.க. கூட்டணியில் தொடர்கிறோம். அம்மாவுக்குக் குழந்தை; அப்பாவுக்குப் பிள்ளை என்பார்கள். நாங்கள் தி.மு.க.வுக்கும் பா.ம.க.வுக்கும் அப்படித்தான் இருக்கிறோம். தி.மு.க. எங்களை அரவணைக்கிறது. பா.ம.க. எங்களைப் பாசத்தில் கட்டிப்போடுகிறது. இரு கட்சிகளும் நேசிக்கும் அளவில் எங்கள் அணுகுமுறை உள்ளது. ஒரு சார்பு நிலை எடுக்க வேண்டுமென்று, இரு கட்சித் தலைவர்களும் வற்புறுத்தாதது அவர்கள் அரசியல் முதிர்ச்சியைக் காட்டுகிறது. தி.மு.க.- பா.ம.க - விடுதலை சிறுத்தைகள் ஒரே வளையத்தில்தான் இருக்கிறோம் என்றே கருதுகிறேன்.

மீண்டும் உறவு சாத்தியமா?:

காடு வெட்டி குரு கைதுக்குப் பிறகு பா.ம.க.- தி.மு.க. உறவு சாத்தியமா என்று கேட்கிறார்கள். கைது, சிறை, என்பதெல்லாம் அரசியல்வாதிகளின் வாழ்க்கையில் தவிர்க்க முடியாத நிகழ்வுகள். இதன் காரணமாகவே ஒரு கட்சி, மற்றொரு கட்சியுடன் கூட்டு வைத்துக்கொள்ள வாய்ப்பில்லை என்று உறுதியாகவும், இறுதியாகவும் எடுத்துக் கொள்ளக் கூடாது. சமீபத்திய உதாரணம் ம.தி.மு.க. - அ.தி. மு.க. கூட்டு.



தி.மு.க. திணறுகிறதா?

தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. இல்லாததால், அதன் பலம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதே யதார்த்தமான உண்மை. அது தேர்தலில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை யூகங்களால் சொல்லமுடியாது. தேர்தல் கூட்டணியின் கட்டமைப்பைப் பொறுத்தது அது.

அரசு கேபிள் சரிதானா?:

துவங்குவதற்கான காரண - காரியங்கள் எதுவாக இருந்தாலும், பாராட்டத்தக்க முடிவு.

அ.இ.அ.தி.மு.க. தீண்டத்தகாததா?:

தீண்டாமையை ஒழிப்பதுதான் விடுதலைச் சிறுத்தைகளின் பணி. சிலரது கொள்கைகளோடு எங்களுக்குத் தீண்டாமை உண்டு. ஆனால், கட்சிகளோடு தீண்டாமை கடைபிடிக்க மாட்டோம்.


போராடத் தயக்கமா?:

தி.மு.க. கூட்டணியில் இருப்பதால், மக்கள் பிரச்னைகளைக் கையிலெடுத்துப் போராட தயங்கவில்லை. இனியும் அடித்தட்டு மக்களின் குரலை தெருக்களில் எதிரொலிப்போம்.

- ப்ரியன்

டீ.வி.க்கு வந்த ராமானுஜர்

இந்திரா பார்த்தசாரதியின் இராமானுஜர் நாடகம். ஐந்து லட்சம் சன்மானத்தோடு சரஸ்வதி சம்மான் விருது பெற்றது. தற்போது ஆகஸ்ட் 15லிருந்து மாலை 7 மணிக்கு பொதிகையில் வெள்ளிதோறும் ஒளிபரப்பாக இருக்கிறது. அதையொட்டி இந்திரா பார்த்தசாரதியைச் சந்தித்தபோது...



★ இந்திரா பார்த்தசாரதி

உங்கள் படைப்பு காட்சி ஊடகத்துக்கு இடம் பெயர்வது இது முதல்முறையா?

இல்லை, ஏற்கெனவே கல்கியில் வெளிவந்த 'வெந்து தணிந்த காடுகள்' திரைவடிவம் பெற்றிருக்கிறது. இப்போது இராமானுஜர்.

இராமானுஜரை எழுதத் தூண்டியது எது? ஏன் எழுதினீர்கள்? சர்ச்சைகளுக்கு என்ன காரணம்?

இராமானுஜர் பல பரிணாமங்களை உடைய ஞானி. முதல் சமூக சீர்திருத்த வாதி. அவரைப் பழைமைவாதிகள் விஷம் வைத்துக் கொல்லத் துணியும் அளவுக்கு, முற்போக்குவாதியாய் இருந்தவர். சமஸ்கிருதம் ஒலித்த கோயிலில் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை ஓதி, தமிழால் ஆலயத்தை நிரப்பியவர். அதனால் எழுதத் தூண்டியது. நாடகத்தில் ஈ.வே.ரா.பெரியாரைப் போல இராமானுஜரைச் சித்திரிக்கிறார் என்ற எதிர்ப்பும் சர்ச்சையும் கிளம்பின. தங்களுக்கு இசைவாக வரலாற்றை மறு வாசிப்பு செய்து இந்தப் பழைமைவாதி களிடமிருந்து இராமானுஜரை மீட்கவே இந்த நாடகத்தை எழுதினேன்.

அதற்கு நாடக வடிவத்தை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்?

நாடகம் என்பது ஒரு சரியான சமூகச் செயல்.

டீ.வி.க்காக பிரதியை ஏதேனும் மாற்றினீர்களா? இலக்கிய ஊடகத்துக்கும் வெகுஜன காட்சி ஊடகத்துக்குமான ரசனை இடைவெளி எப்படி?

பிரதியில் மாற்றம் எதுவும் செய்ய வில்லை. அந்த இடைவெளி குறைய வேண்டும் என்பதுதான் என்போன்ற எழுத்தாளர்களின் விருப்பம்.

டீ.வி.தொடரில் நாடகத்தின் ஆன்மா சிதையாதா?

அதை இயக்கும் சண்முக சுந்தர பாரதி நாடகத் துறையில் முறையாக படித்து, பயிற்சி பெற்றவர். அவர் ஒரு நாடகக் கலைஞன். ஒரு கலைஞன் ஒருபோதும் கலையின் ஆன்மாவைச் சிதைக்க மாட் டான் என்று நம்புகிறேன்.

– அமிர்தா



கெஸ்ட் டயலாக்!

பார்த்தேன்... ரசித்தேன்...

அப்படியே சாவி கொடுத்த வண்டி மாதிரி போய்க்கிட்டே இருப்போம். அப்ப திடீர்னு சில விஷயங்கள் நம்மைத் திரும்பிப் பார்க்க வைக்கும். சில விஷயங்கள் இன்னும் பார்க்கத் தூண்டும்; ரசிச்சுக்கிட்டே இருக்கச் சொல்லும். அந்த மாதிரியான 'ரசனைவாதிகள்' தான் இவங்க.



* பரிமளா



மோகன்: ஊட்டி பொட்டானிக்கல் கார்டன். வாவ்! அதப் பார்க்கறப்ப என்னோட ஹார்ட் அப்படியே இலேசான மாதிரி ஒரு ஃபீலிங்!

சூப்பர்ப்...ப் ஃப்ளவர் ஒண்ணு. வொய்ட்டும் ரோஸ்ஸூம் கலந்த கலர்னு சொல்லலாம். அது பெரிசாவும் இல்ல, ரொம்ப சிறுசாவும் இல்ல! (எதையுமே உறுதியாச் சொல்லமாட்டீங்க போல!)

நான் அந்த ஃப்ளவர் மட்டும்தான் பார்த்தேன்... ரசிச்சேன்... என் மனசு முழுக்க அது மலர்ந்து நின்ன மாதிரி இருந்துச்சு.

இந்த மாதிரி மணிக்கணக்கா எந்த ஃப்ளவரையும், நான் இவ்வளவு ரசிச்சதில்லை. ஆனா பொறுமை இழந்த என் ஃப்ரெண்ட்ஸ், அந்த இடத்திலிருந்து என்னைத் தூக்கிட்டுப் போயிட்டாங்க. (நல்லவேளை, பூ தப்பிச்சது!)

முத்துக்குமார்: ஒண்ணும் தெரியாதவனையும் ஒரு பக்க அளவு கவிதை எழுத வைக்கிற திறமை, தஞ்சாவூர் பெரிய கோயில் புல்வெளிக்கு உண்டு.

'ஃபுல்'லா அடிச்சாதான் சிலருக்கு வாழ்க்கையே ரச


* முத்துக்குமார்


* மோகன்

ளையா இருக்கும். ஆனா எனக்குப் புல்வெளியை ரசிச்சாலே மனசு இலேசா... இலேசா... ஆகுது.

இதைவிட இன்னும் பசுமையா எவ்வளவோ விஷயங்களைப் பார்த்தாலும், மனசு புல்லா நிறைஞ்சு இருக்கறது, எங்க பெரிய கோயில் புல்வெளி மட்டும்தான்!

('புல்தடுக்கி பயில்வான்'னு சொன்னாக்கூட உங்களுக்குக் கோபமே வராது போல!)

பரிமளா: 'யெல்லோ' என்னோட ஃபேவரிட் கலர். நான் யூஸ் பண்ற எல்லாமே 'யெல்லோ' மயமா இருக்கும்.

புது டிரஸ் எடுக்கப் போனப்ப, அங்க ஜவுளிக் கடை பொம்மை 'யெல்லோ' சுடியில சும்மா 'நச்'னு நின்னுக்கிட்டு இருந்துச்சு. எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு.

(பொம்மைக்கு அந்த டிரஸ் நல்லாத்தான் இருக்கும்; உங்களுக்கு?)

என்ன புண்ணியம்? எனக்கு அந்த டிரஸ் ஃபிட்டாகல. ரசிச்சு... ரசிச்சு... வாங்கியதை அக்காவுக்குத் தானம் பண்ண வேண்டியதாயிடுச்சு!

*(உங்களுக்குப் பிடிச்ச பாட்டு சொல்லவா, **மஞ்சக் காட்டு மைனா, என்னக் கொஞ்சிக் கொஞ்சி போனா'**- சரிதானா?)*

சத்தீஷ்: அந்தளவுக்கு எனக்கு காமெடி பண்ணத் தெரியாது; ஆனா, செமயா ரசிப்பேன்.

வழக்கம்போல ரிமோட் பட்டன் அழாத குறையா, சேனல சேஞ்ச் பண்ணிக்கிட்டே இருந்தேன். அப்ப, 'எவர்கிரீன் வாழைப்பழ காமெடி' வந்துச்சு. ரொம்ப வருஷத்துக்குப் பிறகு அந்தக் காமெடி சீனைப் பாக்கறேன். என்னால சிரிப்பை அடக்கவே முடியல *(ஏன் சதீஷ் அடக்கணும்?)*

நம்ம ஊரு லாரல் - ஹார்டி யாருன்னு கேட்டா, கவுண்டமணி-செந்தில்னு கண்ணை மூடிக்கிட்டுச் சொல்லலாம்.

(பரவாயில்ல, கண்ணைத் திறந்துகிட்டே சொல்லுங்க.)

– எம்.திரவியமுருகன்



ஸ்மார்ட் சோம்நாத்!



ஸ்வீட்டா - ஒரு சபதம்

ஸ்டைலா - ஒரு உ(ந)டை யழகு

ஸ்மார்ட்டா - ஒரு சோம்நாத்னு சூப்பரா கலக்கிட்டீங்க!

- சுகந்தி நாராயணன், வியாசர் காலனி

செம்மங்குடியின் சிஷ்யர்கள் இசை நிகழ்ச்சியைத் தொகுத்தளித்தது, நேரில் பார்த்தது போல் இருந்தது!

- ம.விஸ்வநாதன், ஆண்டிநகர்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு கதை, 'மடை' நல்ல தேர்வு. பனையூர் தலைவருக்குப் புரிந்த மாதிரி இனி யார் யாருக்கோ(!) புரிய வைக்க வேண்டுமே...!

- வானவில் மூர்த்தி, கூத்தப்பாக்கம்

வசிஷ்டர் வாயால் 'பிரம்மரிஷி' பட்டம் பெற்ற பெருமையை, சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜிக்கு 'கல்கி' அளித்து, கௌரவித்தது போல் இருந்தது அவரைப் பற்றிய செய்தி.

- ரேவதிப்ரியன், ஈரோடு

வாரா வாரம் ஆரவாரமாக வந்துகொண்டிருக்கும் காஃபி ஷாப் கல்கியின் கலர்ஃபுல் ஷாப்.

- அ.முரளிதரன், மதுரை - 3

மண்மணம் மாறாத கிராமத்து எகத்தாளத்தை, சினிமாவைப் போல பேட்டியிலும் யதார்த்தம் குன்றாமல் தரும் வடிவேலு, ஸ்பெஷாலிட்டி... சூப்பர் ரியாலிட்டி.

- அ.மல்லிகா, சென்னை - 78

வட்டிக்குத் தடா விதித்திருக்கிற கிராமம் பற்றிய கட்டுரை, வியப்பாகவும் இன்ட்ரஸ்ட்டிங்காகவும் இருந்தது.

- த.சத்தியநாராயணன், அயன்புரம்

புதிய பெருமாள் கார்ட்டூன் பொருள் பொதிந்தது!

- கிருட்டிண வாசு, அசோக் நகர்

'மத ரீதியாக சகிப்புத்தன்மை காட்டி, மக்கள் புரிந்துணர்வுடன் வாழ வழி காட்ட வேண்டும்' என்கிற தலையங்கம் சூப்பர்.

- ஆர்.ஏ.அமுதன், சென்னை -10


அழகின் வடிவே... அருளின் வடிவே... படித்துப் பாதுகாக்க வேண்டிய ஆன்மிகப் பெட்டகம். படங்களும் தகவலும் மிக அருமை.

- பொருநை பாலு, திருநெல்வேலி

'வட்டமேஜை'யில் ஒரு கடிதம் கூடவா தவறைச் சுட்டிக்காட்டி விமர்சிக்கவில்லை? பார்த்து சார்!... இடிப்பாரை இல்லா ஏமரா...' திருக்குறள் நினைவுக்கு வருகிறது.

- இரா.இராஜேந்திரன், மயிலாடுதுறை

வட்டமேஜை


ஆகத்து 17 -
தமிழர் எழுச்சி நாள்
தொல்.திருமாவின்
களப்பணியில்
கால்நூற்றாண்டு
எழுச்சி விழா
தீவுத்திடல், சென்னை 17.08.2008 ஞாயிறு, காலை 11 மணி முதல்
உரைவீச்சு
எழுச்சித் தமிழர்
தொல்.திருமாவளவன்
விடுதலைச்சிறுத்தைகள் கட்சி

உடையழகு... நடையழகு...

வொய்ட்

ஆந்திராவிலும் கேரளத்திலும் மணமகளின் சேலை நிறம் வெண்பட்டு... ஆனால், நம் தமிழ்நாட்டில் வெள்ளையைப் பார்த்து பீதியடைகிறார்கள்.

புகழ் பெற்ற நடிகர் ராஜ்கபூரின் மனைவி கிருஷ்ணா கபூர் இன்றுவரை வெள்ளை தவிர வேறு கலர் புடைவை அணிந்ததேயில்லையாம். யஷ் சோப்ராவின் பிரம்மாண்ட படங்களில், கதாநாயகிகள் கண்டிப்பாக ஒரு சில சீன்களிலேயாவது வொய்ட் ட்ரஸ் போட்டேயாக வேண்டுமாம். பாரதிராஜாவின் ஹீரோயின்களும் வெள்ளை ட்ரஸ்ஸில் என்ட்ரி கொடுப்பார்கள். (படம் சூப்பர் ஹிட்)

வெள்ளை என்பது நிச்சயமாக அபசகுனம் கிடையாது. இப்போதைய லேட்டஸ்ட் கலர் வொய்ட்தான். இதுதான் ஹாட் அண்ட் ஹாப்பனிங் என்கின்றனர் ஃபேஷன் டிஸைனர்கள். புடைவை, டாப்ஸ், ஷர்ட்ஸ், பர்ஸ், ஹேண்ட்பாக், ஸ்லிப்பர், க்ளிப், காதணிகள்... என வெள்ளை நிறத்தில் கண்டிப்பாக கலெக்ஷன் வேண்டும். உங்களிடம் வொய்ட்டில் இருக்க வேண்டிய முக்கியமான ஐட்டம்ஸ் இதோ கீழே...

- **வொய்ட் டாங்க் டாப்:** டாங்க் டாப் (Tank top) என்பது இப்போதைய பெண்களின் ஸ்டைல் ஸ்டேட்மென்ட். இதை ஜீன்ஸ், டெனிம் ஸ்கர்ட், tie and die ஸ்கர்ட்டுடன் போடலாம். இதன் மேல் கழுத்தைச் சுற்றி ஒரு ஸ்டோல் (ஸ்கார்ஃப்) போடலாம். காஷுவல் லுக் கொடுக்கும். கூடவே படு ப்யூட்டியாக இருப்பீர்கள்... ப்ராமிஸ்.

- **வொய்ட் ப்ளேஸர்:** க்ளாஸி லுக் வேண்டுமானால் ப்ளேஸர் (blazer) வொய்ட்டில் போட்டுப் பாருங்கள். டார்க் ப்ளு ஜீன்ஸுடன் போட்டால் அட்டகாச அம்மணி நீங்கதான்! கழுத்தில் மெல்லியதாக சில்வர் செயின், அதில் குட்டியூண்டு டாலர்...

- **வொய்ட் குர்தி:** குர்தி போடாத, பிடிக்காத பெண்ணும் உண்டா எனக் கேட்க வைக்கும் படு ட்ரெண்டியான ட்ரஸ்தான் குர்தி! அதுவும் வொய்ட்டில் போட்டால் பன்மடங்கு அழகாகத் தெரிவீர்கள் என்பது திண்ணம்! கேப்ரீஸ், ஜீன்ஸ், பாட்டியாலா என வெரைட்டியாகப் போடலாம்.



● **வொய்ட் புடைவை:** ஷிஃபான், ஜார்ஜெட், க்ரேப், காட்டன்... என எந்த வகையாக இருந்தாலும் வொய்ட்டில் போட்டால், அதன் அழகே தனிதான். ஒரு தனி கம்பீரத்தையும், நளினத்தையும் வெள்ளை கொடுக்கிறது. ஜர்தோஸி, மிர்ரர் வொர்க், கட் வொர்க் செய்யப்பட்ட வெள்ளைப் புடைவைகள் எப்போதுமே வடநாட்டில் டிமாண்டில் இருந்து வருகின்றன.

● **வொய்ட் ஃபார்மல் ஷர்ட்:** நல்ல ப்ராண்ட் ஃபார்மல் ஷர்ட் வெள்ளையில் இருக்க வேண்டும். ட்ரௌஸர், ஜீன்ஸ், மினி ஸ்கர்ட்... என எதனுடனும் போட்டுப் பின்னி எடுக்கலாம்.

ப்யூட்டி!

● **வொய்ட் ஷூஸ்:** இந்தி நடிகர் ஜிதேந்திராவின் வெள்ளைக் காலணிகள் மிகப் பிரசித்தம். இவரைப் பார்த்துக் கிண்டலடிப்பவர்களும் உண்டு. வெள்ளை ஸ்லிப்பர், பாலரீனா ஷூஸ், ஸ்ட்ராப்பி காலணிகள்... உங்கள் உடையை இன்னும் கார்ஜியஸாகக் காண்பிக்கும். உடை வெள்ளையாக இருந்தால் காலணிகள் சில்வர், ப்ளாக் அல்லது ஸ்ட்ராப்பியாக இருக்கலாம்.

● **அக்ஸஸரிஸ்:** ட்ரஸ்ஸுக்கு மாட்சான அக்ஸஸரிஸ் இன்றைய ட்ரெண்ட்! ஹாண்ட்பேக், க்ளட்ச் (பிடியில்லாத பெரிய மணிபர்ஸ்) வொய்ட்டிலும் இருக்க வேண்டும். முத்து தோடு, கழுத்தில் ஒற்றைச் சர முத்து மாலை என்றுமே ஃபேஷன் தான்! வெள்ளைநிற விக்டோரியாவின் காதணிகள் படு பிரபலம்.

– லதா சேகர்

மயக்கமா...



* பி.ஆனந்தன்.

“பருவ வயதை நெருங்கும் இளம்பெண்களில் சிலருக்கு, தலை சுற்றல், மயக்கம் வரும். கையிலிருப்பதைத் தவறி கீழே போட்டுவிடுவார்கள். அத்தனையும் ஒரே ஒரு நொடி மட்டும்தான். அடுத்த நொடியே இயல்பாகிவிடுவார்கள். இதுகூட வலிப்பு நோயில் ஒருவகைதான்'' என்கிறார் மனநலம் மற்றும் நரம்பியல் மருத்துவர் டாக்டர் பி.ஆனந்தன்.

''பொதுவாக இந்தப் பிரச்னை எல்லாப் பெண்களுக்கும் வருவதில்லை. ஆனால், இதைச் சம்பந்தப்பட்டவர்கள் சீரியஸாகவே எடுத்துக்கொள்வதில்லை. எப்போதாவது வருகிற இந்த மயக்கம், அடிக்கடி வர ஆரம்பித்து, ஒரு நொடியிலிருந்து சில நிமிடங்கள் வரை நீடிக்கக் கூடும்.

அப்போதுதான் பிரச்னை இருப்பதே தெரியவரும். சம்பந்தப்பட்டவர்கள், உடனடியாக மருத்துவரை அணுகி மாத்திரைகள் எடுத்துக்கொண்டால், இந்தப் பிரச்னையை ஆரம்பத்திலேயே தீர்த்துவிட முடியும்.

மொத்தம் முப்பதுக்கும் மேற்பட்ட வலிப்பு நோய்கள் இருக்கின்றன. சிலருக்குச் சில சமயங்களில் எக்கச்சக்கமாகக் கோபம் வரும். அந்த நேரத்தில் கையில் கிடைத்ததை எடுத்துக் கண்டபடி வீசியெறிவார்கள். 'ஏன் இப்படிச் செய்தாய்?' என்று கேட்டால், 'அப்படியா? நானா?' என்று நிஜமாகவே ஆச்சர்யப்படுவார்கள். இது வலிப்பு நோயின் 'டெம்போரல் லோப் எபிலெப்ஸி' என்கிற நிலை'' என்கிறார் டாக்டர்.



வலிப்பு நோய்கள் வருவதற்குக் காரணம்தான் என்ன?

''மூளையில் எலெக்ட்ரிகல் சர்க்யூட், கெமிக்கல் சர்க்யூட் என்று இரண்டு பணிகள் நடக்கின்றன. இதில் மின்சக்தி சுழற்சியில், ஏதாவது பிரச்னை என்றால் வலிப்பு நோய் வரும். வேதிப் பொருட்களில் விபரீதம் என்றால், மனநோய் வரும். இது தவிர மூளை அமைப்பில் கோளாறு காரணமாக ரத்தக்கட்டி, ரத்தநாளங்களில் அடைப்பு போன்றவற்றாலும் இப்பாதிப்புகள் ஏற்படுகின்றன.

—வலிப்பு நோய்ப் பிரச்னை


வலிப்பு நோய் வந்தவர்களுக்கு, அது பாரம்பரிய வழியாகவும் தொடர அறுபது சதவிகிதம் வாய்ப்புகள் இருக்கின்றன.

மனநலப் பிரச்னைகளுக்கு வழங்கப் படும் மருந்து மாத்திரைகளின் பக்க விளைவுகளாலும் வலிப்பு வர வாய்ப்பிருக்கிறது.

யாருக்கு எப்போது வலிப்பு வரும் என்றெல்லாம் சொல்லவே முடியாது. எனவே, 'வருமுன் காப்போம்' என்பதெல்லாம் இதற்குக் கிடையாது.

குழந்தைப் பருவத்தில் மூளைக்காய்ச்சல் வந்தால், பிற்காலத்தில் வலிப்பு வருவதற்கு வாய்ப்புகள் உண்டு.

வலிப்பு வருவதற்கு முன்பே ஒரு சின்ன மயக்கம் வரும், கண்களில் பூச்சி ஊர்வது போல, வித்தியாசமான சப்தங்களைக் கேட்பது போல மனத்தில் தோன்றும். உடனே உஷாராகிவிட வேண்டியதுதான்'' என்றவர், முதலுதவி



கலக்கமா..?

கள், தீர்வுகள் பற்றியும் பேசினார்.

★ மல்லாக்கப் படுக்க வைத்து, தலையை ஒரு பக்கமாக சாய்த்து வையுங்கள். அப்படிச் செய்வதால் வாயில் சுரக்கும் உமிழ்நீர் மூச்சுக்குழலுக்குள் நுழைந்து, திணறல் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

★ பல்லைக் கடிக்கும்போது பல் உடைந்து போனாலும் உணவுக்குழலில் துகள்கள் சென்றுவிட வாய்ப்பாக இருக்கும். இதைத் தவிர்க்க, மருத்துவர் ஆலோசனை பெற்றுக் கடைபிடியுங்கள்.

★ மூன்று வருடங்களுக்கும் மேலாக வலிப்பு வரவில்லையென்றால், கொஞ்சம் கொஞ்சமாக மாத்திரைகளைக் குறைத்துக்கொண்டே வந்து, ஒரு சட்டத்தில் முற்றிலும் நிறுத்திக் கொள்ளலாம்.

★ மனநோய்க்கும் வலிப்புக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது.

★ வலிப்பில் ஸ்டேடஸ் ஆப்சென்ஸ்' என்று ஒரு வகை இருக்கிறது. அது வருபவர்கள், திடீரென்று சில நாட்கள் காணாமல் போய்விடுவார்கள். பிறகு பரிதாபமாகத் திரும்பி வருவார்கள். ஆனால், அது வலிப்பு நோய் மட்டும்தான்; மனநோய் அல்ல.

''வலிப்பு பிரச்னை உள்ளவர்கள் மற்றவர்களைவிட நான்கு மடங்கு அதிகமாக மனச்சோர்வுக்கு ஆளாகிறார்கள். ஆனால், சரியான தருணத்தில் மருத்துவரிடம் காட்டி, முறையான சிகிச்சையை தொடர்ந்து எடுத்துக்கொண்டால், இவர்கள் இயல்பாக வாழலாம்; திருமணம் செய்து கொள்ளலாம்; குழந்தைகள் பெற்றுக் கொள்ளலாம்'' என்கிறார் டாக்டர் ஆனந்தன்.

– எஸ்.பி.என்.



கல்கி



2008 ஆகஸ்ட் 17

ஸர்வதாரி ஆவணி 1

மலர் : 67

இதழ் : 3

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - *பாரதியார்.*


உச்சநீதிமன்றம் வைத்த குட்டு!


நீதிமன்ற அவமதிப்பு இழைத்ததாக, அ.தி.மு.க. சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு, உச்சநீதிமன்றம் தமிழக அரசிடம் விளக்கம் கேட்டது. சென்ற ஆண்டு அக்டோபர் இறுதியில் கோரிய அவ் விளக்கத்தைத் தமிழக அரசும் வழங்கவில்லை; முதல்வரும் தர வில்லை! உச்சநீதிமன்றம் இரண்டு - மூன்று முறை கெடுவை நீடித்தும் பயனில்லை! குற்றம் சாட்டப்பெற்ற அமைச்சர் டி.ஆர். பாலு மற்றும் அதிகாரிகள் யாருமே ஆகஸ்ட் 4, 2008 வரை அசைந்து கொடுக்கவில்லை!

இந்தத் தாமதத்தையும், அலட்சியப் போக்கையும் வன்மையாகக் கண்டித்துள்ள உச்சநீதிமன்றம், முதல்வரையும் அமைச்சர் டி.ஆர். பாலுவையும் கடுமையாக விமர்சித்துள்ளது.

அரசு சார்பாக உச்சநீதிமன்றத்தில் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்டுள்ள தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரிபாதியுடன், தலைநகரப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ள தமிழக அரசு வழக் குரைஞர்கள் இரண்டு பேரும் பலிகடாக்களாக்கப்பட்டிருப்பதாகவே தோன்றுகிறது.

அக்டோபர் 1, 2007 அன்று, அரசே பந்த் நடத்துவது சட்ட விரோதமாகிவிடும் என்கிற உச்சநீதிமன்றத்தின் ஆணையை, பெய ரளவில் மட்டுமே தமிழக அரசு கடைப்பிடித்தது. பந்தை உண்ணா விரதமாக மாற்றியபோதிலும் அரசியல் வன்முறைக்கும் வற்புறுத் தலுக்கும் அஞ்சி, பொது வாகனங்கள் ஓடாதிருந்ததும் மக்கள்





வெளியே நடமாடாமல் முடங்கியிருந்ததும் உண்மை. இந்தச் சம்பவத்திலேயே நீதிமன்ற ஆணைக்குப் பணிய அவசியமில்லை என்கிற மறைமுக சமிக்ஞை, கட்சி மற்றும் ஆட்சி வட்டாரங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கும். ஆட்சித் தலைமைக்கு அஞ்சி, அவர்கள் மனப் போக்குப்படி அதிகாரிகள் நடந்துகொள்ளும் சூழலினால்தான் தொடர்ந்து உச்சநீதிமன்றம் கோரிய விளக்கத்துக்கு பதில் தரப்படாமல் இருந்திருக்கிறது. சட்டம் - நீதிக்குப் பணிவதைக் காட்டிலும், அரசியல் நிர்ப்பந்தத்துக்குப் பணியும் கட்டாயத்தில் பல அதிகாரிகள் இருக் கிறார்கள்.

ஒரு வாதத்துக்காக, அதிகாரிகள் மீதுதான் தவறு, வழக்குரைஞர்கள்தான் தப்பு செய் தார்கள் என்று வைத்துக்கொள்வோமாயினும், அத்தகைய உபயோகமற்ற அதிகாரிகளையும் வழக்குரைஞர்களையும் தேர்ந்தெடுத்து முக்கிய பொறுப்புகளில் நியமித்த ஆட்சித் தலைமைதான் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

நீதிமன்றத்தை அவமதிப்பதும் தீர்ப்பை அலட்சியம் செய்வதும் இது முதல் முறை அல்ல. பல மாநில முதல்வர்கள் இதுவரை பலமுறை செய்துவிட்டார்கள். மத்தியிலும் மாநிலங் களிலும் இந்நிலை மாற வேண்டும். அதோடு, நல்மரபுகளைக் கைவிடாமல் பின்பற்றவும் வேண்டும். ஆனால், ஆட்சியாளர்களோ, உச்சநீதிமன்ற ஆணையிடமிருந்து தப்பிக்க அர சியல் சாசனத்தையே மாற்றத் தயாராகிறார்கள்.

எந்த நிலையிலும் அதிகார துஷ்பிரயோகம் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் ஜனநாயகத்தின் நாடாளுமன்றம், நிர்வாகம், நீதிப் பிரிவுகளைத் தனி அதிகாரங்களுடன் அமைத்தார்கள் நம் முன்னோர்கள். ஆனால், ஆட்சியாளர்கள் இதை மட்டுமின்றி, மக்கள்தான் தங்களை ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள் என்பதையும் மறந்துபோகிறார்கள்!

சட்டத்தின் இறையாண்மையை அரசியல்வாதிகளும் ஆட்சியாளர்களும் மதிக்காமல், தான்தோன்றித்தனமாக தொடர்ந்து நடந்துகொண்டால், தேசத்தின் இறையாண்மைக்கே அச்சுறுத்தல் விளையும்! ○



குசேலன்

● வில்லனோடு நேருக்குநேர் நின்று சவால் விடாத, அரசியல் வசனங்களை அள்ளி வீசாத, ஒரே பாட்டில் வாழ்க்கையின் உச்சத்துக்குச் செல்லாத ரஜினிகாந்தைத் திரையில் பார்ப்பது அத்தனை சுலபமில்லை. ஆனால், அப்படித்தான் குசேலனில் இருக்கிறார் ரஜினி. இயக்குநர் பி.வாசு, இதற்காக கதாசிரியர் சீனிவாசனுக்கு நன்றி சொல்லியே தீர வேண்டும்.

● கதை? கிட்டத்தட்ட கிருஷ்ணர் - குசேலர் கதைதான்! பிரிந்த நண்பர்கள் மீண்டும் இணைவதைக் காட்சிப்படுத்தியிருக்கிறார் இயக்குநர்.

● ஏழை நண்பராக, முடிதிருத்தும் தொழில் செய்யும் பசுபதி, நடிப்பில் நின்று, நிதானமாகவே விளையாடியிருக்கிறார். தன்னுடைய இயலாமையை வெளிப்படுத்தும் போது, அவருடைய அபிநயங்களால் அசத்துகிறார். க்ளைமாக்ஸில் ரஜினிக்காக உருகும் காட்சியில் கலங்கடித்துவிடுகிறார்.

கதையிலும் சூப்பர்ஸ்டாராகவே வரும் ரஜினிகாந்த், தமக்குக் கிடைத்த அத்தனை வாய்ப்புகளையும் சிந்தாமல் சிதறாமல் பயன்படுத்தியிருக்கிறார். ரசிகர்களோடு அளவாக அளவளாவுகிறார். தம்மைச் சந்திக்க வரும் நபர்களுடன் அடக்கமாக உரையாடுகிறார். தம்மிடம் வம்பிழுக்கும் வகையில் கேள்வி கேட்டு இம்சிக்கும் சுந்தர்ராஜனுக்கு, நறுக் பதில்களை அளித்து, கைதட்டல்களை அள்ளுகிறார். க்ளைமாக்ஸில் கண்ணீரைக் கசிய வைத்து, ரசிகர்களை உருக வைத்துவிடுகிறார் 'சூப்பர்' ஸ்டார்.

இத்தனை ஆண்டு காலத்தில் இரண்டு நண்பர்களுக்கும் இடையே குறைந்தபட்சம் கடிதப்போக்குவரத்து கூடவா இருந்திருக்காது?

பசுபதிக்கும் ரஜினிக்கும் இருந்த பால்ய காலத்து நட்பை விளக்குவதற்கு ஒரு காட்சிகூடவா கிடைக்கவில்லை?

'சொல்லம்மா' பாடலிலும் க்ளைமாக்ஸ் ரீ ரெக்கார்டிங்கிலும், இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ் தெரிகிறார். தோட்டாதரணி கை வண்ணத்தில் செட்டிங் கம்பீரம். தொழில் நுட்பத்தில் அரவிந்த் கிருஷ்ணாவின் கேமராவுக்கு முதலிடம்.

படத்தைத் துணிச்சலாக எடுத்து முடித்து பி.வாசுவுக்கு பாராட்டு. ஆனால் காமெடியிலும், கவர்ச்சியிலும் சமரசம் செய்ய முயன்றமைக்கு ஒரு கொட்டு.

- கொம்பன்



சோ எழுதிய மஹாபாரதம் பேசுகிறது



1304 பக்கங்களில் வியாச பாரதத்தின் சுருக்கம். 18 பர்வங்களில் வரும் முக்கிய நிகழ்ச்சிகள். பலரும் கேட்டிராத நுணுக்கமான தகவல்கள். பீஷ்மர் அருளிய பல உபயோகமான தகவல்கள். இவற்றுடன் முக்கிய இடங்களில் பாரத நிகழ்ச்சிகளையும், கதாபாத்திரங்களையும், இன்றைய நிகழ்வுகளோடு ஒப்பிட்டுக் கூறியிருக்கும் விதம் புதுமையானது.

இரண்டு பாகங்கள் ரூ. 600/- 9 வருடங்களில் 9 பதிப்புகள்

வால்மீகி ராமாயணம்



வால்மீகி ராமாயணத்தை சுருக்கமாகவும், எளிமையாகவும் எழுதியுள்ளார். முக்கியமான இடங்களில் வால்மீகி ராமாயணம் – கம்ப ராமாயணம் மற்றும் துளசி ராமாயணங்களுக்கிடையே உள்ள வேறுபாட்டையும் எடுத்துக் காட்டியுள்ளார்.


இரண்டு பாகங்கள் ரூ.600/-

ஹிந்து மஹா சமுத்திரம்



யுகங்களின் கணக்கு, யாகங்கள், தெய்வங்கள், உருவங்கள், மரணத்திற்குப் பின்..., யோக வாசிஷ்டம், ஷடங்கங்கள், சட்ட தத்துவங்கள், இதிஹாஸங்கள், புராணங்கள், நாரதர் பெற்ற உபதேசங்கள் – இப்படி ஏராளமான இந்து சமயத் தகவல்கள்.

பாகம் - 1 ரூ.200/- பாகம் - 2 ரூ.225/- பாகம்-3 ரூ. 175/-



டைரி 1946-1975

நடிகர் சிவகுமார் தமிழகத்தின் சமூக, கலாச்சார, வரலாற்றுப் பதிவுகளைத் தன் டைரியிலிருந்து வழங்கியுள்ளார்.

விலை ரூ.300/-



இப்படிக்கு சூர்யா

நடிகர் சூர்யா

விலை ரூ.250/-

இது ராஜபாட்டை அல்ல...

சிவகுமார்

விலை ரூ.220/-





எஸ். குருமூர்த்தி எழுதிய

தண்ணீர் விட்டோ வளர்த்தோம்

அரசியல், ஆன்மிகம், கலாச்சாரம், தொழில் முன்னேற்றம், மத நம்பிக்கை, மதப் பிரச்சினை, ஹிந்து மதத் தத்துவங்கள், ஜனநாயக தத்துவம், அரசியல்வாதிகள்.... இப்படி ஏராளமான விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன.

(3 - பாகங்கள் - விலை ரூ.525/-)

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
(பு.எண்) 244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மைலாப்பூர் - 600 004
தொலைபேசி: 24641314 www.alliancebook.com
email: srinivasan@alliancebook.com



கொண்டு, ஒரு கையில் புஸ்தகம் ஒன்றை வைத்துக்கொண்டு, இன்னொரு கையால் ஏதோ சைகை காட்டிக் கொண்டிருக்கிறார். வாய் திறந்து ஒன்றும் பேசுவதாகக் காணோம். இது என்ன பாடம்? நமக்குப் பிடிபட வில்லை! மணிக்கணக்கில் ஓயாமல் சொல்லும் விளக்கங்களே நமக்கு மண்டையில் ஏறுவதாயில்லை. இப்படி மௌன மொழியில் பேசுவதைக் கொண்டு என்ன புரிந்துகொள்வது? எதிரில் இருக்கும் மாணாக்கர்களைப் பார்க்கிறோம். ஒருவரிடமும் சந்தேகம் இல்லை. இது என்ன விசித்ரம்?''

ஓர் அழகான சமஸ்கிருத சுலோகத்தின் விளக்கமே நாம் மேலே கண்டது.

மெய்ஞான

“அதோ அந்த ஆலமரத்தின் அடியில் ஒரு விசித்திரமான காட்சியைப் பாருங்கள்! அங்கே ஒரு பள்ளிக்கூடம் நடந்து கொண்டிருக்கிறது. படிக்கும் மாணாக்கர்கள் எல்லாம் தொண்டுக் கிழவர்கள்! பாடம் நடத்தும் ஆசானோ ஒரு கட்டிளம் காளை! (முதியோர் கல்வி என்பது இது தானோ?) என்ன பாடம் நடக்கிறது என்று ஆவலுடன் காதைத் தீட்டிக்கொண்டு கேட்கிறோம். ஒன்றும் காதுக்கு எட்டவில்லை. சற்று கிட்ட நெருங்கி கவனிக்கிறோம். ஆசிரியர் கால்மேல் கால் போட்டுக்

சித்ரம் வட தரோர் மூலே -
(ஆலமரத்தின் அடியில் ஒரு விசித்ரம்.)
விருத்தா: சிஷ்யா; குருர்யுவா'' -
(வயோதிக மாணவர்கள்; இளைஞரான குரு.)
குரோஸ்து மௌனம் வியாக்யானம் -
(குருவின் மௌனமே விளக்கம்.)
சிஷ்யாஸ்து சின் நசம்சய: -
(மாணவர்களுக்கு மனதில் சந்தேகமே இல்லை.)

இந்த சுலோகம் தக்ஷிணாமூர்த்தியைக்

அழகின் வடிவே... அருளின் வடிவே... 3

வடிவம்!

த.கி.நீலகண்டன்

குறித்த சுலோகம். சனகாதி முனிவர்களுக்கு குருவாய் அமர்ந்து சின்முத்திரை காட்டி, செய்த ஞானோபதேசம் பற்றிச் சொல்கிறது. காஞ்சி மகா ஸ்வாமிகளுக்கு மிகவும் பிடித்தமான சுலோகம் இது. மிகவும் அனுபவித்து அனுபவித்து இந்த சுலோகத்துக்கு அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள்.

மெய்ஞானமாகிய தத்துவத்தை உணர்த்தும் சிவ வடிவம் தக்ஷிணாமூர்த்தியின் வடிவம். எல்லையற்ற ஆழ்ந்த அமைதியுடன், தன்னுள் தானே நினைக்கும் சச்சிதானந்த வடிவம். அவரது சன்னிதியில் புற உலகின் களேபரங்கள் நம்மை ஒன்றும் செய்யாது. சாந்தமான அந்த முகத்தைக் கண்டவுடன் சஞ்சலங்கள் அடங்கி, மனம் ஒருமுகமாய்க் குவிந்து ஒரு கணமேனும் நிற்க முடிந்தால் அதுவே பெரும்பேறு! தக்ஷிணாமூர்த்தியின் கோலத்தை மனத்தில் நினைத்த மாத்திரத்திலேயே அந்த நிலை சாத்தியமானால், அதைவிட வேறு என்ன வேண்டும்!



சிவாலயங்களில், தெற்கு நோக்கியவாறு தக்ஷிணாமூர்த்தி காட்சி அளிப்பார். கோயிலுக்குள் இருப்பவர்கள் எது எந்த திசை என்று தெரிந்துகொள்ள வேண்டுமானால், தக்ஷிணாமூர்த்தியின் சன்னிதியை வைத்துத் தெரிந்துகொள்ளலாம். கருவறையைச் சுற்றியுள்ள முதல் பிராகாரத்தில் தெற்கு நோக்கியவாறு கணபதியும் தக்ஷிணாமூர்த்தியும் இருப்பார்கள். வடக்கு நோக்கியவாறு துர்க்கையும் பிரம்மாவும் விளங்குவார்கள்.

கல் ஆலமரத்தின் அடியில், ஒரு மேடையில், இடது காலை மடித்து வலது கால் மேல் போட்டுக்கொண்டு, நிமிர்ந்து அமர்ந்த கோலத்தில் இவர் விளங்குகிறார். விரித்த செஞ்சடை; விழிகள் மூடிய மோன நிலை; நான்கு கரங்கள். மேல் இரண்டு கைகளில் ஜபமாலையும், தீப்பிழம்பும். கீழ் இடது கையில் ஒரு ஓலைச்சுவடி. கீழ் வலது கை சின்முத்திரை காட்டியவாறு அமைந்திருக்கும். சுண்டுவிரல், மோதிர விரல், நடுவிரல் ஆகியவை நீண்டு நிமிர்ந்து இருக்க, ஆள்காட்டி விரல் கட்டை விரலின் அடிப்பாகத்தைத் தொடும்படி அமைந்திருப்பது சின்முத்திரை. காமம், குரோதம், மோகம் ஆகிய மூன்று உணர்வுகளில் இருந்தும் மீண்டு, ஜீவாத்மாவாகிய உயிர்கள் பரமாத்மாவாகிய இறைவனுடன் இணைவதே சின்முத்திரையின் தத்துவம். திருவாயில் ஓர் இளமுறுவல். ஆழம் காணமுடியாத

அமைதி தவழும் முகபாவம். நெற்றிக் கண்ணுக்கு இங்கே வேலையே இல்லை என்பதனால், அதனை இறுக்கமாக மூடிக் கொண்டிருக்கிறார். ஊன்றிய திருவடியின் கீழ் முயலகன் என்ற பெயர்கொண்ட அசுரன். 'அபஸ்மாரம்' என்கிற கொடிய நோயின் வடிவம் முயலகன். அது ஒரு உடல் நோய் மட்டுமல்ல! மனநோயும்கூட. தீய எண்ணங்களின் உருவகமே முயலகன். மெய் ஞானம் வீற்றிருக்கும் இடத்தில் தீய எண்ணங்கள் எழுவதில்லை. இதனை விளக்கும் வண்ணமே முயலகனைத் தன் திருவடியில் அழுத்திக்கொண்டிருக்கிறார். இளஞ்சிவப்புத் திருமேனி எங்கும் திரிபுண்டரமாகத் திருநீறு. ஆபரணமாக உருத்திராட்சச் சரங்கள். சடைக்கற்றையில் இளம்பிறை. மகாகவி பாரதிகூட இந்த ஞானவடிவைப் பாடியிருக்கிறார்.

''ஆத்திசூடி, இளம்பிறை அணிந்து
மோனத்து இருக்கும் முழு வெண் மேனியான்...''

என்று! தாயுமானவர், மாணிக்க வாசகர் போன்ற அடியவர்களுக்கு பெருமான் தந்த திருக்காட்சி, தக்ஷிணாமூர்த்தியின் வடிவத்தில்தான். காஞ்சியை அடுத்த தேனம்பாக்கத்து சிவாஸ்தானத்திலும் மாயூரம் துலா கட்டத்திலும் அருள் பாலிக்கும் தக்ஷிணாமூர்த்தியின் வடிவங்கள் பிரசித்திபெற்றவை!


'தென்முகக் கடவுள்' என்ற தூய தமிழ்ப் பெயரும் இவருக்கு உண்டு. தென்னாட்டு சிற்பக் கலைஞர்கள் தக்ஷிணாமூர்த்தியின் வடிவத்தைச் செதுக்கும்போது, தம் கற்பனைத் திறத்தையும் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். மேலே படர்ந்திருக்கும் ஆல மரத்தில் ஒரு பூக்குடலை தொங்கும். ஒரு பொந்தில் இருந்து ஆந்தை ஒன்று எட்டிப் பார்க்கும். கிளி, குருவி போன்ற பறவைகளும், பல்லி, ஓணான், பாம்பு ஆகிய ஜந்துக்களும் மரக்கிளையில் தொற்றிக்கொண்டிருக்கும். பெருமானின் மேனியில் நாகாபரணங்களும், காதோலை, மகரகுண்டலம், தோடு என்று விதவிதமான அலங்காரங்களும் உண்டு. யோக நிலையில் கால்கள் இரண்டையும் குத்திட்டவாறு (ஐயப்பன் வடிவைப்போல) அமர்ந்த கோலம், வீணை ஏந்திய கோலம், ஒரு காலைக் குத்திட்டவாறு தலையைச் சாய்த்து அமர்ந்த கோலம் என்று வேறு சில தக்ஷிணாமூர்த்தி வடிவங்களும் உண்டு. சமீபத்தில் அர்த்தநாரீசுவரக் கோலத்திலும் ஒரு தக்ஷிணாமூர்த்தியின் சிலையை வார்த்து, காசியில் கொண்டுபோய் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். பத்தினி சம்பந்தமே இல்லாத இவருக்கு ஒரு பத்தினியையும் உருவாக்கி, 'தாம்பத்ய தக்ஷிணாமூர்த்தி' என்று கூட ஏற்படுத்தி விட்டார்கள்! இப்படியும் ஒரு சில வடிவம் மரபு ரீதியாக அனுமதிக்கப்பட்டதா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

(பெருகும்)



மெய்ஞானத்தை உணர்த்தும் சிவ வடிவம்தான் தக்ஷிணாமூர்த்தியின் வடிவம்!

டாக்டரின் விசிறி!





''நடிக்க வரலைன்னா என்ன செஞ்சிருப்பீங்க?''

''எல்லாரும் இதைத்தான் கேட்கறாங்க. அதான் வந்துட்டேனே! வேற ஏதாவது கேளுங்க.''

''சரி, நடிப்புதான் வரலையே... இனிமே என்ன செய்யப் போறீங்க?''

– என். உஷாதேவி



''உன் பிள்ளை தினமும் சராசரியாக எவ்வளவு நேரம் படிக்கிறான்?''

''எவ்வளவு நேரம் படிச்சாலும், சரா சரியாத்தான் படிக்கிறான்!''

– வெ. சீதாராமன்



''நான் வீட்டை விட்டு வெளியே வந்தப்ப, ஒரு காக்கா வலமிருந்து இடமா பறந்து போச்சு. அது நல்ல சகுனமா?''

''உன்னை க்ராஸ் பண்ணித் தானே போச்சு? அப்ப அது கெட்ட சகுனம்தான், காக்காவுக்கு!''

– ராமன்

''ஆபரேஷன் பண்ணும்போது பாதி யிலேயே கரன்ட் நின்னு போனா என்ன செய்வீங்க, டாக்டர்?''

''கவலைப்படாதீங்க! நாங்க ஆளுக்கு ஒரு விசிறி வைச்சிருக்கோம்!''

– தெ. சுந்தரமகாலிங்கம்



சரோஜா = சஸ்பென்ஸ் த்ரில்லர்!

'சரோஜா' பட ரிலீஸில் பரபரப்பாக இருந்தாலும் அமைதியாக, எந்த ஒரு கேள்விக்கும் ஆழ்ந்த யோசனைக்குப் பிறகே பதிலளிக்கிறார் இயக்குநர் வெங்கட் பிரபு.

''சரோஜா' என்னோட ரெண்டாவது படம். 'சென்னை 28'டோட கலர்ல இருந்து டோட்டலா வேறு மாதிரியான படம். இப்படித்தான் இருக்கணும்னு முடிவு பண்ணி எடுத்த படம். மூணு வேறுபட்ட

கோணங்கள், ஒரு புள்ளியில இணையற மாதிரி திரைக்கதை அமைச்சிருக்கோம். பாட்டு, கூத்துன்னு எல்லா துள்ளலும் இருக்கு. இன்னைக்கு அதிகம் படம் பார்க்க வர்றது யங்ஸ்டர்ஸ் தான். அவங்கதான் என் டார்கெட். 'சென்னை 28' அவங்கள ரொம்ப திருப்தி பண்ணுச்சு. 'சரோஜா'வும் என்ஜாய் பண்ண வைக்கும். சஸ் பென்ஸ் த்ரில்லர். யுவன் எனக்கு எப் பவும் கைகொடுப்பவர். இதுல கூடுதலா உழைச்சிருக்கார். முத்து முத்தான பாட்டுங்க, சத்தான பின்னணி இசைன்னு இன்னைக்கு சரோஜா ட்ரைலர், எதிர்பார்ப் பைக் கௌப்பியிருக்கு. தேங்க்ஸ் டு யுவன்.



மக்கள் இந்த மாதிரி படங்களை வரவேற்கணும்ங்கறதுதான் என்னோட ஆசை. ஹாலிவுட் படங்கள் இன்னைக்குத் தமிழ்ல வந்து சக்கைப்போடு போடுது. அதே தரத்துக்குத் தமிழ்லயும் படம் பண்ண ஆரம்பிச்சிட்டோம். அழுத்தமான கதையும் ஆர்ப்பாட்டமான மேகிங்கும் இருந்தா, தமிழ்ப் படங்களை ஹாலிவுட் ரீமேக் பண்ற நாள் வெகு தொலைவில் இல்லை'' என்று சீரியஸாகப் பேசிக்கொண்டே போனவர், சட்டென்று நிறுத்தி ஓடோடிப் போய் 'சரோஜா'வுக்கு ஐந்து நிமிடம் பணிபுரிந்துவிட்டு திரும்ப வந்து, 'யெஸ் பாஸ்' என்று ஆரம்பித்தார்.

''டைரக்டராயிட்டீங்களே, இனி நடிக்க மாட்டீங் களான்னு பல பேர் கேக்க றாங்க. இப்போதைக்கு இந்த வேலை என்னை ரொம்ப ஈர்த்திருக்கு. ரொம்ப ஈடுபாட்டோட செய்றேன். திரும்ப நடிக்கணும்னு தோணும்போது நடிக் கத்தான் போறேன். பவர்ஃபுல்லான கேரக்டரா அமையணும், அவ்வளோ தான்.

கிராமத்து ரசிகர்களுக்கு என் படங்கள் ரீச்சாக மாட்டேங்கு துன்னும் ஒரு பேச்சிருக்கு. என்ன பண் றது? என் சிந்தனை, செயல் எல்லாம் சிட்டியைச் சுத்திச் சுத்தி வருவது.

வார்னர் பிரதர்ஸ், தமிழ்ல சௌந்தர்யா ரஜினிகாந்த்தோட இணைந்து படங்கள் தயாரிக்கப் போறாங்க. முதல் படத்தை இயக்கற வாய்ப்பை, எனக்குத் தந்ததுல ரொம்ப மகிழ்ச்சி. சரோஜா ரிலீஸுக்குப் பிறகு மளமளன்னு வேலைகளை ஆரம் பிச்சிடுவேன்.

அப்பா, அம்மா, மனைவின்னு என்னோட வளர்ச்சியில, பலருக்கும் பங்கிருக்கு. நட்புக்கு அதுல தனி இடம் இருக்கு. இதெல்லாம்தான் என்னைத் தினம் தினம் உயிர்ப்பா வைச்சிருக்கு. அப்பா வோட ஆசீர்வாதம் என்னைக்கும் என்னை உயர்த் தும்.''



வெங்கட்பிரபு பேசிக் கொண்டிருக்கும் போதே, ''ஜீ... ரெடி'' என்று குரல் வர, மீண்டும் பரபரப்பாகி ''சந்திக்கலாம் பாஸ்'' என்று கைகுலுக்குகிறார்.

இயக்குநர் வெங்கட் பிரபு பேட்டி

– மு.மாறன்

விசிறிவீடு என்பது அந்த வீட்டின் பெயர் அல்ல; நான்தான் அந்தப் பெயரை வைத்தேன்.

காரணம் வேறொன்றுமில்லை. அந்த வீட்டில் விசிறி பின்னுவார்கள்.

கோடை விடுமுறையில் பாட்டி வீட்டுக்குப் போவோம். எதிர்வீடு தான் விசிறி வீடு.

விசிறி வீட்டில்தான் எந்நேரமும் பழியாகக் கிடப்பேன்.


''சாப்பிட வாடா... சாப்பிட வாடா'' என்று வாசல்ல நின்றுகொண்டு பாட்டி கூப்பிடும். உள்ளே வரவே வராது. கடைசி வரை இதற்கான காரணம் தெரியவே இல்லை.

விசிறி வீட்டிலேயே சாப்பிடச் சொல்லி வற்புறுத்துவார்கள். எனக்கு மறுக்கவே தோன்றாது.

தையல் இலையில் சாதம். பெரும்பாலும் ரசம், குடமிளகாய். அவ்வளவுதான். மாம்பழ சீசன் என்றால் மாம்பழத் துண்டுகள். சாப்பாடு தேவாமிர்தமாக இருக்கும்.

''உங்க பேரன் இங்கேயே சாப்பிட்டாச்சு'' என்று உள்ளே இருப்பவர்கள் சத்தம் போட்டுச் சொல்லுவார்கள். பாட்டி திரும்பிப் போய்விடும்.

நான் சாப்பிட்டுவிட்டு கூடத்தில் ஊஞ்சல் ஆடுவேன். காலால் எக்கி எக்கி ஒவ்வொரு தடவையும் ஊஞ்சல் எதிர் சுவரின் கூரையைத் தொட்டுக் கீழிறங்கும் போதும், வயிற்றுக்குள் ஜில்வென்று என்னவோ சுருளும்.



விசிறி வீடு

❖ தஞ்சாவூர்க் கவிராயர் ❖


வீட்டின் பின்கட்டில் பெரிய திண்ணை இருக்கும். திண்ணையில் நாலைந்து அக்காக்கள் உட்கார்ந்து, விசிறிக்குப் பூ பின்னிக்கொண்டிருப்பார்கள்.

விசிறியின் விளிம்பில் காவடி மாதிரி வளைத்த ஈர்க்குச்சியில், முக்கோணம் முக்கோணமாகப் பூக்கள் பின்னுவார்கள். நீண்ட, பகமையும் சந்தன நிறமும் பாய்ந்த ஓலைகளை லாகவமாக உள்ளே செலுத்தி இழுத்து பூக்களாகக் கோத்துவிடுவார்கள்.

பச்சை, சிவப்பு, நீலம் என்று பல வர்ணங்களில் விசிறிகள் கிடக்கும். மொட்டையாகக் கிடக்கும் விசிறிகள், பூ பின்னியதும் புதுமணப் பெண் மாதிரி ஜோராகக் காட்சி தரும்.

அந்தத் திண்ணையில் எவ்வளவு கோடையிலும் புழுக்கமாகவே இருக்காது. எப்போது பார்த்தாலும் ஜில்லென்று இருக்கும்.

ஒவ்வொரு விசிறியும் காற்றின் விள்ளல் போலவும்; அவ்வளவு காற்று விள்ளல்கள்



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் ரூ.5,000 மூன்றாம் பரிசு பெறும் சிறுகதை

குவிந்து கிடப்பதால் தான் அங்கே குளிர்ச்சியாக இருப்பதாகவும் தோன்றும்.

நான் அங்கே போனால், ''வாடா கோபாலா'' என்று என் பக்கம் நாலு விசிறிகளைத் தள்ளி விடுவார்கள். நானும் கோணல் மாணலாக பூ பின்னுவேன். ரொம்ப ஈஸியான வேலை மாதிரிதான் இருக்கும். ஆனால், வேகமாகப் பின்னவும், சீராகப் பூக்கள் போடவும் பல வருஷப் பழக்கம் வேண்டும்.

அந்த அக்காக்கள் வேலை செய்வது மாதிரியே தோன்றாது. சிரிப்பு... கும்மாளம்... வேடிக்கை. பெரிய அக்கா முகம் மட்டும் சோகமாக இருக்கும். சில சமயம் முறுவலிப்பாள். அப்போது முகம் பார்க்க அவ்வளவு அழகாக இருக்கும்.

இன்னொரு விசித்திரம்: எவ்வளவு

புழுக்கமானாலும், அந்த விசிறிகளை எடுத்து யாரும் விசிறிக்கொள்ள மாட்டார்கள்.

விசிறினால் போச்சு. அது பழைய விசிறி ஆகிவிடுமாம்!

காசுபோட்டு வாங்குபவர்களுக்கு, புத்தம்புது விசிறிதான் கொடுக்க வேண்டும். அவர்கள் விசிறிக்கொள்ளும் போது தூய்மையான முதல் காற்று(!) அவர்கள் முகத்தைத் தொட வேண்டும் போலும்.

விசிறிக்கொண்டுதான் ஆகவேண்டும் என்றால், அங்கே ஒரு பழைய விசிறி கிடக்கும். ஆனாலும், அந்த அக்காக்கள் யாரும் விசிறியை எடுத்து விசிறிக் கொண்டு நான் பார்த்ததே இல்லை.

அங்கே கிடந்த விசிறிகளால்தான் ஒரு குடும்பமே பிழைத்தது என்பதெல்லாம் அப்போது சிறுவனான எனக்குப் புரிய வில்லை.

எப்போதடா லீவு விடும் என்று இருக்கும். விசிறி வீட்டுக்குப் போகலாம். வர்ண வர்ண விசிறிகள். அழகே உருவான அக்காக்கள். வீடே திருவிழாக் கூட்டம் போல் இருக்கும்.

அக்காக்கள் எல்லாம் விசிறி பூப்போட உட்கார்வதே நேர்த்தியாக இருக்கும். குளித்து, பவுடர்பூசி, கண்மை வைத்துக் கொண்டு விசிறிக்குப் பூப்போட ஆரம்பிப் பார்கள்.

ஒவ்வொரு அக்காவும் அழகாகப் பாடுவார். எல்லாம் சினிமாப் பாட்டுகள்.

அதுவும் அந்த 'கங்கைக் கரைத் தோட்டம்; கன்னிப்பெண்கள் கூட்டம்; கண்ணன் நடுவினிலே...!' என்ற பாட்டு. கடைசியில் பாட்டில் வருவதுபோல பெரிய அக்கா நிஜமாகவே விக்கி விக்கி அழுவார்.

எல்லோரும் விசிறிக்குப் பூப்போடு வதை நிறுத்திவிட்டுக் கண்ணைத் துடைத் துக்கொள்வார்கள்.

பாட்டு. வேலை. ஒரு பக்கம் பாட்டுச் சத்தம். இன்னொரு பக்கம் பூப்போட்ட விசிறிகள் குன்றுபோல் குவிந்துவிடும்.

எனக்கு ஆச்சரியமாக இருக்கும். இந்த அக்காக்கள் எல்லாம் இப்படி ஆயுசுக்கும் பாடிக் கொண்டே விசிறி பின்னிக் கொண்டே இருந்து விடுவார்களா?


'ராமன் தேடிய சீதை' ஸ்டில்ஸ்...

இரவு தூங்கும் போது தூக்கத்தில் கனவு வரும். ஒரு பெரிய பந்தல். அதில் கலர் கலர் விசிறிகளாகத் தொங்கவிட்டிருக்கிறது. புத்தம்புது விசிறிகள். கல்யாணச் சத்திரம் போல் இருக்கிறது. ஒவ்வொரு அக்கா கழுத்திலும் கல்யாண மாலை. அவர்கள் அருகில் மணமகன். ஒவ்வொரு மணமகன் கையிலும் ஒரு விசிறி இருக்கிறது.

ஆனால் நிஜத்தில் அப்படி நடக்க வில்லை. அக்காக்கள் யாருக்குமே கல்யா ணம் ஆகவில்லை.

ஒரு பெண் பார்க்கும் வைபவத்தின் போது நான் விசிறி வீட்டில் இருந்தேன்.

மாப்பிள்ளை அழகாக இருந்தார்.

'பெண்ணுக்குச் சமைக்கத் தெரியுமா, எதுவரை படித்திருக்கிறது?' என்றெல்லாம் கேட்டார்கள்.

'விசிறிக்குப் பூ போடும் வித்தையில் அக்காவை மிஞ்ச யாராலும் முடியாது' என்று சொல்லலாம்போல் இருந்தது எனக்கு.

ஏற்கெனவே என் பெயர் அதிகப் பிரசங்கி. பேசாமல் இருந்துவிட்டேன்.

'பெண்ணுக்குச் சீதனமாக என்ன கொடுப்பீர்கள்?' என்று கேட்டார்கள்.

ஒரு கனத்த மௌனம் அங்கே நிலவியது.

பெண்ணுக்குச் சீதனமாகக் கொடுக்க விசிறியைத் தவிர வேறு எதுவுமே அங்கே



இல்லை.

'அக்காவின் கையில் ஒரு விசிறியைப் பூப்போட கொடுத்துவிட்டு பாடச் சொல்லிக் கேளுங்கள். பசிக்கவே பசிக்காது' என்று மாப்பிள்ளையிடம் சொல்ல வேண்டும்போல் இருந்தது.

மாப்பிள்ளை முகத்தில் ஏதோ நிழல் மாதிரி படிந்தது.

விசிறி வேலை நிற்கவில்லை. ஆனால், பாட்டுச் சத்தம் இல்லை.

ஒரு வேடிக்கை என்னவென்றால், எங்கள் வீட்டில் நான் என்ன தப்பு செய்தாலும் அம்மாவுக்கு ஆயுதம் விசிறி மட்டைதான். ஓலைப் பகுதியை அப்படியே சுருட்டிக்கொண்டு விசிறிக் காம்பால் விளாசுவாள்.

சில சமயம் விசிறி பிய்ந்து பூக்கள் மட்டுமே அப்படியே ஈர்க்குச்சியோடு தொங்கும்.

எனக்கு அடித்ததுகூட வலிக்காது.

''அம்மா! விசிறிய ஏன் பிச்சே?'' என்று கத்துவேன்.

அப்பா கடைத்தெருவில் இருந்து புதுசாக விசிறி வாங்கிக்கொண்டு வருவார். நான் ஒளித்து வைத்துவிடுவேன்.

அப்போதெல்லாம் வீட்டில் ஃபேன் இருக்காது. அம்மாவுக்குத் தூக்கம் வரும்வரை விசிறுவேன்.

காதல் கவிதை

* ஆயிரம் தூக்கங்களுக்குப் பிறகும்
அழியாமல் இருக்கிறது
முதல் காதல் கனவு...

* நீ சுதந்திர மடைந்து
இருபது வருடமான
இளமை தேசம்

* என் ஜன்னலின்
வெளியே இருந்த வானத்தை
உள்ளே அழைத்து வந்த நீ
எப்போது சொல்லப் போகிறாய்
என் காதலை உன்னிடமும்
உன் காதலை என்னிடமும்

* அடித்தல் திருத்தல்
செய்பவர்கள்
ஆசிரியர்கள் மட்டுமல்ல
அழகான பெண்களும்தான்.

விசிறிக்கொண்டே பாடுவேன்.

பழைய சினிமா பாடல்களில் இருந்து ஒருவரி. இரண்டுவரி. அவ்வளவுதான்.

''இந்தப் பாட்டெல்லாம் எங்கேடா கத்துக்கிட்டே?'' என்பாள் அம்மா.

''விசிறி வீட்டு அக்கா கிட்ட.''

ஒவ்வொரு விசிறலுக்கும் ஒரு பாட்டு. தெரிந்த பாட்டெல்லாம் காற்றாக மாறி அம்மாவைத் தூங்க வைக்கும்.

''போதும்டா செல்லம்'' என்பாள் அம்மா.

''நீ தூங்கும்மா'' என்று விசிறுவேன். விசிறியில் தண்ணீர் தெளித்து விசிறியபடி ''இது ஊட்டிக் காத்து'', ''இது கொடைக்கானல் காத்து'' என்பேன்.


அம்மா தூங்கிப் போவாள். நானும் தூங்கி விடுவேன். விசிறியும் தூங்கும்.

பாட்டி இறந்து போனதும் அந்த ஊருக்குப் போவது நின்றுவிட்டது. விசிறி வீடும் மறந்து விட்டது.

கல்லூரி, வேலை, குழந்தைகள்... காலத்தின் மாபெரும் பாய்ச்சல்.

ஒரு நாள் பரணைச் சுத்தம் செய்துகொண்டிருந்தேன். ஒரு பழைய விசிறி கீழே விழுந்தது.

அப்படியே பதினைந்து வருஷம் பின்னோக்கிப் போய்விட்டேன். படபடப்புடன் அம்மாவிடம் கேட்டேன்.



நடுங்கும் விரல்களால் விசிறியின் மேல் இருந்த ஒட்டடையை நீக்கினேன்

''அம்மா... பாட்டி ஊர்ல அந்த விசிறி வீட்டு அக்கா எல்லாம் எங்கே இருக்காங்க? உனக்குத் தெரியுமா?''

அம்மா முகம் சோகமாகிவிட்டது.

''அப்பப்ப காதில் விழறதுதான். கேட்கவே மனசுக்குக் கஷ்டமா இருக்கும். அந்தக் குடும்பமே சிதறிப் போச்சுடா. வரதட்சணை, சீர்செனத்தி இல்லாம அந்த அழகான பெண்களைக் கரையேத்த முடியாம, பெரியவர் செத்துப் போனார். ஒரு பெண் குடிகாரனுக்கு வாழ்க்கைப்பட்டா; இன்னொரு பெண் வாழா வெட்டி; இன்னொருத்திக்கு என்னமோ மன வியாதி...''

''வேண்டாம். போதும் நிறுத்து. மேற் கொண்டு சொல்லாதே'' என்றேன்.

நடுங்கும் விரல்களால் விசிறியின் மேல் இருந்த ஒட்டடையை நீக்கினேன்.

விசிறியின் ஓரத்தில் போட்டிருந்த பூக்களைத் தடவினேன்.

''ஃபேன் வந்தப்புறம் யாரும் இப்ப விசிறியச் சீந்துவது கிடையாது இல்ல...'' என்று சொல்லி விட்டுப் போனாள் அம்மா.

''விசிறியின் அருமை தெரியாதவர்கள்'' என்றேன் குரல் கம்ம.



திவ்யா கிருஷ்ணன்

டீச்சருக்குப் படிச்சு என்ன செய்யப் போறே?

நான் நடந்து வந்த பாதையில் எல்லாமும் இருந்தன. அன்பெனும் ரோஜா இதழ்கள். இலவம் பஞ்சுப் பொதிகள். ஆங்காங்கே நெருஞ்சி முட்கள். சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் வந்த பின்னர், நெருஞ்சி முட்களையெல்லாம் ரோஜா இதழ்களாக ஆக்கிக்கொண்டேன். வீடு, வீதி, கிராமம் தாண்டி, நான் பயணித்தபோது, என் மீது காட்டப்பட்ட ஆதரவுகளை நன்றியுடன் இன்று நினைவு கூர்கிறேன்!''என்று சொல்லும் திவ்யா கிருஷ்ணனின் விழியோரங்களில் கண்ணீர்த் துளிகள்.

யார் இவர்? ஆசிரியர் பயிற்சி பள்ளியில் சேர்ந்து பயிலும் முதல் திருநங்கை. சேலம் மாவட்டம், மடத்தூர் கிராமம், ஏழை விவசாயி வையாபுரியின் மூன்றாவது பிள்ளைதான் கிருஷ்ணன்.

''ஒன்பதாம் வகுப்பு படிக்கும்போதே என் உடலிலும் குரலிலும் சின்னச் சின்ன மாற்றங்கள் தோன்றத் துவங்கின. என் பெற்றோர்கள் மிகவும் அதிர்ச்சியாகிப் போனார்கள். ஆண்கள் மேனிலைப் பள்ளியின் யூனிஃபார்ம் உடையில்தான் வலம் வந்தேன். பள்ளியிலும் எல்லா மாணவர்களும் என்னை 'அக்கா' என்றும், ஆசிரியர்கள் 'கிருஷ்ண வேணி' என்றும் அழைப்பார்கள். மேனிலைப் பள்ளிகளில் பொதுவாக, ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரைக்கும்தான் மதிய நேர சத்துணவு போடுவார்கள். ஆனால், நான் மட்டும் தான் ஒன்று முதல் ப்ளஸ் டூ வரைக்கும் சத்துணவு சாப்பிட்ட நபராக இருந்திருக்க முடியுமென நம்புகிறேன்!'' என்கிறார் திவ்யா கிருஷ்ணன்.

> பள்ளி நாட்களிலிருந்தே டீச்சராக வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் வேர்விட்டிருந்தது!

''**ப்**ளஸ் டூ பொதுத் தேர்வில் 883 மதிப்பெண்கள் வாங்கிய எனக்கு,

பள்ளி நாட்களிலிருந்தே டீச்சராக வேண்டுமென்கிற எண்ணம். "பொம்பளைப் புள்ளையாட்டம் திரியறே... நீ டீச்சருக்குப் படிச்சி என்ன செய்யப் போறே?" என்று முதல் தடைக்கல், அப்பாவிடமிருந்து வந்தது. மனசு தாளவில்லை. விஷச் செடியை அரைத்துக் குடித்துவிட்டேன். மூன்று நாட்களுக்குள் மரணம் நேர்ந்து விடும் என்ற நிலைமையில், டாக்டரின் முயற்சியால் பிழைத்தேன்.

வீட்டிலிருக்கப் பிடிக்காமல் அக்கா வீட்டுக்குப் போய்த் தங்கி ஒரு வருடம் சித்தாள் வேலை. 2006ல் திருநங்கையாக அறுவை சிகிச்சை. விசைத்தறிக் கூடத்துக்கு வேலைக்குப் போன இடத்தில், பெருமாள் என்பவருடன் காதல் மலர்ந்தது. இருதரப்பு வீட்டாரும் இணைந்து திருமணம் செய்து வைத்தனர். ஆனாலும், டீச்சராக வேண்டுமென்கிற எண்ணம் மட்டும் அழியாமல் இருந்தது" என்கிறார்.



"அந்தச் சமயத்தில்தான் நாங்கள் திவ்யா கிருஷ்ணனைச் சந்தித்தோம். அவரது எண்ணங்களும் செயல்பாடுகளும் பிடித்துப்போயின. அவரின் எண்ணத்தைப் பூர்த்தி செய்யும் விதமாக, ஆசிரிய பட்டயப் பயிற்சிக்கு விண்ணப்பித்தோம். பாலின வேறுபாடு அங்கு வினாக் குறியானது. கல்வித்துறை உயரதிகாரிகளை சென்னையில் சந்தித்து, அவருக்கு எப்படியும் இட ஒதுக்கீடு செய்து தர வேண்டுமெனக் கோரினோம். கவுன்சிலிங்கில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. தாரமங்கலம், வெற்றி வேல் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் இரண்டு ஆண்டுகள் பட்டய ஆசிரியப் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார் திருநங்கை திவ்யா கிருஷ்ணன்!" என்கிறார் மக்கள் மேம்பாட்டு விளையக திட்ட ஒருங்கிணைப்பாளர் ஷீலா வின்சென்ட்.

"இரண்டு ஆண்டுகள் முடிந்து ஆசிரியப் பணி ஏற்கும்போது, தமிழ்நாட்டிலேயே முதல் ஆசிரியத் திருநங்கை இவராகத்தான் இருப்பார் என எண்ணுகிறேன்!" என்கிறார் வெற்றிவேல் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் முதல்வர் ராதா ருக்மணி. "இந்தச் சமூகத்துக்குச் சிறந்த ஆசிரியையாகப் பணியாற்ற வேண்டும். நல்ல மாணவ மாணவியரை உருவாக்க வேண்டும். என் போன்ற இளம் திருநங்கைகளுக்குக் கல்வி பயில்வதிலும், வேலை வாய்ப்பிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தி, வழிகாட்ட வேண்டும் என்பதே என்னுடைய முக்கிய குறிக்கோள்!" என்கிறார் திருநங்கை திவ்யா கிருஷ்ணன்

செய்தியும், சித்திரங்களும்:
ஸ்ரீரங்கம் திருநாவு

அஞ்சலி



லண்டன் தோரா சிங்!

● சுர்ஜித்தின் தாத்தா பணக்காரர். ஆனால், அப்பா ஹர்கிஷன் சிங் பாஸி அகாலி கட்சியில் சேர்ந்து அரசியலில் குதித்து, விடுதலைப் போராட்டத்தில், பங்கேற்றதால், தாத்தா அவருக்கு இரண்டு ஏக்கர் நிலம் தவிர வேறு எதுவும் தரவில்லை.

● சுர்ஜித்தின் அம்மா இந்து மதத்தைச் சேர்ந்தவர். அப்பா பணம் தேடும் பொருட்டு, பனாமா நாட்டுக்கு பஸ் டிரைவர் வேலைக்குச் சென்று விட்டார். ஆனால், பணம் அனுப்பவேயில்லை! அம்மா, மிகக் கஷ்டப்பட்டுத்தான் சுர்ஜித்தைப் படிக்க வைத்தார்.

● சுர்ஜித்துக்குப் பதினான்கு வயதிருக்கும். அப்போது உழவர் உழைப்பாளர் கட்சி பிரிட்டிஷ் ஆட்சியால் தடை செய்யப்பட்டிருக்கிறது. அண்டர்கிரவுண்டில் இருந்த அந்தக் கட்சியினர், சுர்ஜித்திடம் கிராமத்தில் கூட்டம் ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டனர். துணிந்து ஏற்பாடு செய்தார். மறுநாள் பள்ளிக்கு போலீஸ் வந்துவிட்டது. மன்னிப்பு கேட்கச் சொன்னது நிர்வாகம். 'முடியாது' என்று சொல்லிவிட்டார் சுர்ஜித். 'போய் வா மகனே' என்று டி.சி. கொடுத்துவிட்டார்கள்.

● காங்கிரஸில் சேர்ந்து விடுதலைப் போராட்டத்தில் குதித்துவிட்டார் சுர்ஜித். நீதிமன்றத்தில் பறந்த பிரிட்டிஷ் கொடியை இறக்கிவிட்டு காங்கிரஸ் கொடியை ஏற்றத் திட்டமிட்டனர். அரசின் கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக அதைக் கைவிட்டது காங்கிரஸ். 'நான் செய்கிறேன்' என்று பாதுகாவலையும் மீறி நீதிமன்ற மாடிக்குச் சென்று யூனியன் ஜாக் கொடியை இறக்கி காங்கிரஸ் கொடியை ஏற்றிவிட்டார் சுர்ஜித். ஒரு வருடம் தண்டனை கொடுத்தபோது, 'அவ்வளவுதானா' என்று கிண்டலாகக் கேட்டார். 'இந்தா பிடி நான்கு வருடம்' என்று லாகூர் ஜெயிலில் போட்டுவிட்டார்கள்.

● விடுதலை போராட்ட சமயத்தில் நீதிமன்றத்தில் 'பெயர் என்ன?' என்று கேட்டார்கள். 'லண்டன் தோராசிங்' என்றார் சுர்ஜித். 'தோரா' என்றால் உடைப்பது என்று பொருள். லண்டனை உடைக்கும் சிங்!

● தமது 18வது வயதில் பொதுவுடைமை இயக்கத்தில் இணைந்தார். பத்து வருடம் சிறைவாசம், பத்து வருடம் தலைமறைவு வாழ்க்கை, பத்து வருடம் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்!


- கௌசி

சைக்கிள் ஜடை

தாண்டவக்கோன்

"இன்னிக்கு சைக்கிள் ஜடை போட்டு விடும்மா..." - சீப்போடு வந்து நின்றாள் ரேணு. ரேணுவின் பள்ளியில் இரட்டை ஜடைக்கு இன்றுதான் அனுமதி.

ரேணுவின் அம்மா அலமுவுக்கும் சிறு வயதில் சைக்கிள் ஜடையென்றால் அத்தனை ஆசை. அந்த ஜடை போட்டுக் கொண்டால் தேவதை மாதிரி இருப்பதாக, பின்னிவிடும் பாட்டி



நெட்டி முறிப்பாள்.

கல்லூரியில் அலமுவோடு படித்த பரத்தும் அப்படிச் சொல்லித்தான் அறிமுகமானான். பிறகு, எட்டாக மடித்த காகிதம் தர ஆரம்பித்தான். ஒவ்வொன்றிலும் அலமுவின் சைக்கிள் ஜடையைச் சிலாகித்திருப்பான்.

கல்லூரியில், காதலித்தால் பரத்தையும் அலமுவையும் போலக் காதலிக்க வேண்டும் என்று மெச்சிக்கொண்டார்கள். காரணம், பரத் மற்றும் அலமுவின் இரு அப்பாக்களும் சொல்லி வைத்தாற்போல ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள்.

ஆனால், அவர்கள் தொழில் வேறு, யதார்த்தம் வேறு என்று ஜகா வாங்கிக்கொண்டனர்.

ஜாதி ஒழிப்பை நமது திருமணத்திலிருந்தே தொடங்கலாம் என்ற முடிவோடு கிளம்பிப் போய் பரத்தை பதிவுத் திருமணத் துக்கு அழைத்தாள் அலமு.

பெற்றோர் சம்மதமில்லாமல் திருமணம் செய்ய முடியா தென்று அழுதான் பரத். கல்யாணத்துக்குத் திராணியில்லாதவ னால் மனமொடிந்து போனாள் அலமு.

சில நாட்களில் அலமுவின் காதலை விட்டு, உறவுப் பெண் ஒருத்தியை மணந்துகொண்டான் பரத்.

அலமுவுக்கும் அவள் சார்ந்த ஜாதிச் சங்கச் செயல் வீரன் ஒருவனே புருஷனாக்கப்பட்டான். அப்ப விட்டதுதான் அந்த சைக்கிள் ஜடை.

"என்னம்மா யோசனை... சைக்கிள் ஜடை போடச் சொன்னா... ரெட்டை ஜடையே போடறியே...?"

"சைக்கிள் ஜடை வேண்டாம்."

"ப்ளீஸ்மா..."

"அறிவுகெட்டவளே... சொன்னாக் கேட்க மாட்டே நீ...?"

எத்தனை முறை கேட்டும் சைக்கிள் ஜடை போட மறுத்து எரிந்து விழும் அம்மாவை, புதிராகப் பார்த்த படியே நகர்ந்தாள் ரேணு.



நடைமுறை நிகழ்வுகளை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். இன்று ரியல் எஸ்டேட் விலைகள் நினைத்துப் பார்க்க முடியாத விதத்தில் அதிகரித்து விட்டன. ஆய்வின் அடிப்படையில் ரியல் எஸ்டேட் நிலவரங்களை வெளியிடும் பத்திரிக்கை கட்டுரைகள் சென்னை புறநகர் பகுதிகளில் அடுக்குமாடி வாங்குவதில் முதலீடு செய்தால் கூட அது உங்களுக்கு பெருஞ்சுமையாக ஆகிவிடுகிறது என்பதை குறிப்பிட்டுள்ளன.

ஆனால், அதிர்ஷ்டவசமாக உங்களுக்கோர் வியப்பூட்டும் தீர்வு இதோ. அதிவேகமாக வளர்ச்சி காணும் பகுதிகளில் அமைந்த BLBயின், அரசு அனுமதி பெற்ற மனை ஒன்றில் முதலீடு செய்வதால் நீங்கள் பல சிறப்பான பலன்களை அதாவது மிகக்குறைந்த முதலீட்டில் குறுகிய காலத்தில் உயர் இலாபம், 5 ஆண்டு பாதுகாப்பு சேவை ஆகியவற்றைப் பெற்று பலனடைகிறீர்கள்.

BLB எஸ்டேட்ஸ் கடந்த 10 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியையும் வளத்தையும் அளித்துள்ளது. ஆகவே, ஒரு BLB மனையில் இப்போது முதலீடு செய்வது சிறந்த முடிவுவாகும்.

ஸ்ரீ நரசிம்மா நகர்

ஆவடி / பட்டாபிராம் / திருநின்றவூர் / பூந்தமல்லி

(CMDA Approval No. 37/2007)

சிறப்பம்சங்கள்:

- ✓ தார் சாலைகள்
- ✓ முழுவதும் வேலியிடப்பட்டது
- ✓ உடனே வீடு கட்டலாம்
- ✓ சுற்றிலும் வீடுகள்
- ✓ சுவையான நிலத்தடி நீர்
- ✓ இரயில் மற்றும் பஸ் வசதியுடன் கூடியது
- ✓ தெளிவான பத்திரங்கள்
- ✓ 5 ஆண்டுகள் பாதுகாப்பு சேவை

மனை | மகிழ்ச்சி | செழிப்பு

இலவசமாக மனையை பார்வையிட அழைக்கவும் :

28345104 / 05 / 06

கடன் வசதி
IDBI Home Finance Ltd.
Sundaram BNP Paribas Home Finance

BLB ESTATES PRIVATE LIMITED

"SREE AUDISESHA BHAVAN", New No. 21, Chinnaiah Street, (Off. G.N. Chetty Road & Thirumalai Pillai Road),
T.Nagar, Chennai - 600 017. E-Mail: blbestmail@vsnl.net Website: www.blbestates.com

நன்மதிப்பில் முதலீடு

'கடவுளோடு தூங்கினேன்!'

ஓவியர் வீரசந்தானத்தின் நவீன ஓவியங்களில் கோயில் சிற்பங்கள், சித்திரங்களின் சாயல் அழுத்தமாகக் காணப்படுவது அவரது தனிச்சிறப்பு.

'எதனால்?' என்று கேட்டால், ''நான் கடவுளோடு தூங்கியவன் ஆச்சே!'' என்று கோயில்கள் தம்மீது ஏற்படுத்திய தாக்கம் குறித்து தஞ்சாவூர் மண்ணுக்கே உரிய ரசனையுடன் விவரித்தார் வீரசந்தானம்.

''ஒரு வருஷம் இரண்டு வருஷம் இல்லை; 18 வருஷங்கள் கோயிலுக்குள் படுத்துத் தூங்கியவன் நான். கும்பகோணத்துக்குப் பக்கமிருக்கும் உப்பிலியப்பன் கோயிலில், என் அப்பா மெய்க்காவலராக இருந்தார். கோடைக்காலத்தில் கோயிலின் வெளிமண்டபத்தில் படுத்துக்குவேன். குளிர்காலத்தில் உள்மண்டபத்துல - சன்னிதிக்கு நேராதான் என் படுக்கை. 'ராத்திரில சாமி நடந்து வரும் பாதைடா... நடுவுல படுக்காதே'ன்னு எல்லாரும் திட்டுவாங்க... 'சாமி வந்து மிதிச்சா மிதிச்சுட்டுப் போவட்டும்' என்பேன்.

அதிகாலை 3.30 மணிக்கெல்லாம் முக்காடு போட்ட பிராமண மூதாட்டி ஒருவர், ஒரு கையில் விளக்குமாறும் மறு கையில் தண்ணீர் சொம்புமாக வந்து, 'டேய் சந்தானம் எழுந்திருடா, எழுந்திரு' என்று எழுப்பிவிடுவார். நான் எழுந்தால்தான் கோலம் போட முடியும்! அந்த வேளையில் கோயிலுக்கு வெளியே ஆந்தைகளும் கோட்டான்களும் மரக்கிளையிலிருந்து என்னை உற்றுப் பார்க்கும்; வெளவால்கள் குறுக்கும் நெடுக்குமாகப் பறக்கும்; 3.30 மணிக்கே எழுப்பிவிட்டதும் வசதியாப் போச்சு. பாடங்களை எடுத்து வைத்துக் கொண்டு படிப்பேன்!'' என்றவர், அவ்வளவு பெரிய கோயிலில் தனியே படுத்திருந்த அனுபவத்தையும் பகிர்ந்துகொண்டார்.

''நான் எங்கே தனியே படுத்திருந்தேன்? நள்ளிரவில் விழித்துப் பார்த்தால் துவார பாலகர்கள்... அப்படியே கண்களை உருட்டி என்னைப் பாக்கறாப் போலவே இருக்கும்; அங்கே இருக்கற குதிரை வாகனம், கருட வாகனம் எல்லாம் என்னைச் சுற்றி உயிரோடு நடமாடுவது போல இருக்கும். கோயில் சிற்பங்களும், சித்திரங்களும்

✱ வீரசந்தானம்





என்னுள் ஏற்படுத்திய பிரமிப்பும், சிலிர்ப்பும்தான் பின்னாளில் ஓவியத்தின் மீது ஈடுபாடு ஏற்படக் காரணம்.

எங்க ஊர்ல நூறுக்கு மேற்பட்ட நாதஸ்வர வித்வான்கள் இருந்தார்கள். கோயிலில் மட்டுமல்ல ஊர் பூராவும் நாதஸ்வர ஒலியும், தவில் ஓசையும் கேட்டுக்கிட்டே இருக்கும். காளிமுத்து வேளார்னு ஒருத்தர், மேளக் கச்சேரி கேட்க பானை



அந்தக் களிமண் உருட்டி பானை தட்டுவார் பாருங்க... அப்படியே அவர் ரசிச்ச தவில் சத்தம் அதில் கேட்கும்!



செய்யும் வேலையைப் பாதியில் விட்டுட்டு வந்துடுவார். கச்சேரி கேட்டுக்கிட்டே நாலு வீதியும் சுத்தி வந்ததும் திரும்பப் போய் உக்காந்து, அந்தக் களிமண் உருட்டி பானை தட்டுவார் பாருங்க... அப்படியே அவர் ரசிச்ச தவில் சத்தம் அதில் கேட்கும்!

கும்பகோணம் ஓவியக் கல்லூரியில் படித்தபோது அங்கு முதல்வராக இருந்த தனபால், கோயில் சுவர் ஓவியங்களில் எனக்கு இருந்த ஈடுபாட்டைப் பார்த்துவிட்டு, தம் சொந்தச் செலவில் Fresco சுவர் ஓவியங்கள் பயிற்சிக்காக, ராஜஸ்தான் அனுப்பி வைத்தார்.

பயிற்சியின்போது அங்கே நான் வரைந்த தஞ்சாவூர் பொய்க்கால் குதிரை ஆட்டம் சுவர் ஓவியத்தைப் பார்த்துவிட்டுப் பாராட்டினார்கள்'' என்கிறார்.

அறுபதுகளில் ஏற்பட்ட நவீன ஓவிய அலையால், வீரசந்தானத்தின் வேர்களை அசைக்க முடியவில்லை.

''எவ்வளவோ இஸங்கள்... மேல்நாட்டு abstract ஓவியங்கள் என்று வரைந்தாலும், கடைசியில் நான் வந்து நிற்பது கோயில்களிடமும் வயல்களிடமும்தான்'' என்கிறார் வீரசந்தானம்.

– தஞ்சாவூர்க் கோபாலி



* வாக்களிக்கும்...



* காளியப்பன்

போடுங்கம்மா வோட்டு... புத்தகம் சின்னத்தைப் பார்த்து!... போடுங்கம்மா வோட்டு... புத்தகம் சின்னத்தைப் பார்த்து!'' என கூவியபடி பத்துப் பதினைந்து வாண்டுகள், வலம்வந்து கொண்டிருந்த னர் அந்தக் கிராமத்து வீதிகளில்.

''அவை ஒன்றும் வெற்றுக் கோஷங்கள் அல்ல. நிஜமான

பட்டையைக் கிளப்பும் பாலர் பஞ்சாயத்து!

கோஷங்கள். கிராமப்புறங்களில் செயல் பட்டுக் கொண்டிருக்கும் 'பாலர் பஞ் சாயத்துத் தேர்தலுக்கான கோஷங்கள் அவை!'' என்கிறார் பெண்மணி.

அதென்ன... பாலர் பஞ்சாயத்து?

''எங்களுடைய 'மக்கள் கல்வி பொரு ளாதார மேம்பாட்டுச் சங்கம்' விருதுநகர் மாவட்ட கிராமங்கள் பலவற்றில் 'பாலர் பஞ்சாயத்து'களை உருவாக்கித் திறம்பட செயல்படுத்தி வருகிறது. ஒரு கிராமத்தில் பதிமூன்று வயதுக்கு மேற்பட்டு, பதி னேழு வயதுக்குட்பட்ட அனைவருமே இதில் வாக்காளர்கள். அரசாங்கம் நடத்தும் பொதுத் தேர்தல் போலவே, இந்த 'பாலர்



...பாலர்கள்

பஞ்சாயத்து'த் தேர்தலையும் நாங்கள் நடத்தி முடிக்கிறோம். அந்தந்தக் கிராமத்தின் ஊராட்சி மன்றத் தலைவர்தான், பாலர் பஞ்சாயத்துத் தேர்தல் ஆணையத்தின் ஆணையர்!''என்கிறார் ஸ்பீச் தொண்டு நிறுவனத்தின் சமுதாய ஒருங்கிணைப்பாளர் எஸ்.கவிதா.

சிவகாசி தாலுகா. ஊராம்பட்டி, திருவேங்கிடபுரம், பெரிய பொட்டல் பட்டி, ரெங்க சமுத்திரப்பட்டி, ஆ.லெட்சுமியாபுரம்... கிராமங்களில் பாலர் பஞ்சாயத்துச் செயல்பட்டு வருகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பாலர் பஞ்சாயத்து தேர்தல் வரும். இதில் ஊராம்பட்டி கிராம பாலர் பஞ்சாயத்து, மூன்று தேர்தல்களைச் சந்தித்துள்ளது. இதுதவிர, திருச்சுழி வட்டாரத்தில் பெண்கள் மட்டுமே பங்கேற்கும் 'பெண் குழந்தைகள் பஞ்சாயத்து' ஒன்பது கிராமங்களில் இயங்கி வருகிறது.

திருச்சுழி வட்டாரத்தில் பெண்கள் மட்டும் பங்கேற்கும், 'பெண் குழந்தைகள் பஞ்சாயத்து' ஒன்பது கிராமங்களில் இயங்கி வருகிறது.

அதெல்லாம் சரி. இவர்கள் சாதித்தது என்ன என்று கேட்டால், ''சிறுமியர் பாலியல் பலாத்காரம் எங்கள் பகுதியில் வெகு அதிகம். அதுபோன்ற ஒரு நிகழ்வினை, காவல் நிலையம் வரை சென்று நீதி கேட்டுப் போராடி, வழக்குப் பதிவு செய்தோம். குறிப்பிட்ட சிறுமிக்கு மருத்துவப் பரிசோதனை வாயிலாக அந்தப் பாலியல் வன்செயல் நிரூபணமாகி, அந்த வயோதிகருக்கு ஆறுமாத சிறைத் தண்டனை பெற்றுத் தந்துள்ளது எங்களின் பெண் குழந்தைகள் பஞ்சாயத்து!'' என ஆவேசமாகப் பேசுகிறார்



* சீர்திருத்தும் சிறுவர்கள்

திருச்சுழி வட்டாரக் கிராமத்தின் பெண் குழந்தைகள் பஞ்சாயத்துத் தலைவிகளில் ஒருவர்.

மாதத்தின் முதல் சனிக்கிழமை பாலர் பஞ்சாயத்துக் கூட்டம். ஊராட்சி மன்றம் சார்பா நடக்கிற கிராம சபைக் கூட்டத்துக்கு ஒரு வாரத்துக்கு முந்தியே நாங்க நடத்தி விடுவோம். அதுல நாங்க நிறைவேத்துற தீர்மானங்களைக் கொண்டுபோய், ஊராட்சி மன்றம் சார்பா நடக்குற கிராம சபைக் கூட்டத்துல சமர்ப்பிப்போம். எங்கள் ஊருக்கு சிறுவர் பூங்கா வேணும்னு தீர்மானம் போட்டுக் கொடுத்திருக்கோம்!'' என்கிறார் ப்ளஸ் டூ மாணவரான ஊராம்பட்டி பாலர் பஞ்சாயத்து உபதலைவர் ராஜ்குமார்.

''**ஊ**ராம்பட்டியில் கடந்த ஐந்தாண்டுகளாக சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது பாலர் பஞ்சாயத்து. ஊரைச் சுற்றிலும் நூறுக்கும் மேற்பட்ட வேப்பமரக் கன்றுகளை நட்டு, பராமரித்து வருகின்றனர். சிறுவர் பூங்கா வேண்டுமெனக் கோரியிருந்த அவர்களது தீர்மானம், ஊராட்சி ஒன்றிய அலுவலரின் மேற்பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளது. கூடிய விரைவில் சிறுவர் பூங்கா அமைத்திட ஆணையும், நிதியுதவியும் கிடைத்திடும்!'' என்கிறார் ஊராட்சி மன்றத் தலைவர் வேளாங் கண்ணன்.

''**ஆ**ரம்பத்துல பாலர் பஞ்சாயத்தைப் பார்த்துக் கேலி செஞ்சாங்க. நூத்துல ரெண்டு பேரு அப்படித்தானே! இப்ப எங்க செயல்பாடுகளைப் பார்த்துட்டு, ஒத்தாசையா நடந்துக்கிறாங்க!'' என்கிறார் பத்தாம் வகுப்பு மாணவரான, ரெங்க சமுத்திரபட்டி பாலர் பஞ்சாயத்துத் தலைவர் காளிராஜ்.



* வேளாங்கண்ணன்



* அமுதன்

இந்தியாவில் கிராமப்புறங்களில் இது போன்ற 'பாலர் பஞ்சாயத்து'கள் இயங்கி வருவது சிவகாசி பகுதியில்தான். பதிமூன்றிலிருந்து பதினெட்டு வயதுக்கு உட்பட்டவர்களை, கிராமப்புற ஜனநாயகபடி நெறிமுறைப்படுத்தவும், லஞ்ச லாவண்ய சீர்கேடுகளற்ற உள்ளாட்சிப் பிரதிநிதிகளாகப் பின் வரும் காலங்களில் தயார்ப்படுத்தவும், கிராமப்புற வளர்ச்சிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவும் ஒரு பயிற்சிப் பட்டறையாக இயங்கி வருவதே பாலர் பஞ்சாயத்துகள்!''என்கிறார் ஸ்பீச் தொண்டு நிறுவனத்தின் திட்ட மேலாளர் அமுதன்.

செய்தியும், சித்திரங்களும்:

திருவரசு

செய்யும் இடத்திலே...



காலைக் கதிர்கள்
உடலை இயக்க
நினைவெல்லாம் செயலெல்லாம்
அவசரம்... அவசரம்...

மூடிய அறைக்குள்ளும்
அலுவலகத் தளங்களிலும்
மக்கள்... காகிதங்கள்...
நேர்மையைக் கழற்றும்
உடல்கள் கூட்டத்தில்
பொழுதெல்லாம்
ஆன்மாவை
உறிஞ்சுகின்ற
அசுரக் கட்டளைகள்

நள்ளிரவு காண்பதற்காய்
மிஞ்சியிருக்கும்
ஒரு சில
மணித்துளிகளும்
கைபேசிக் கனவான்களால்
களவாடப்படும்

அந்தி நேரத்துச்
சிவப்புச் சூரியனும்
நல்ல புத்தகமும்
நேசிக்கும் நண்பர்களும்
பொய்யாய் பழங்கதையாய்ப்
புகைந்துபோக
காற்றும் கனவுகளுமே
உயிரைத் தக்கவைக்கும்

இரவிலும் இதயம்
அலுவலகத் திசை நோக்கி
ஒருக்களித்துச் சாய்ந்திருக்க...
காகிதங்களின் நடுவே
கரைகிறது வாழ்க்கை

வைகைச் செல்வி

'பல்வலி வராம பாத்துக்காங்க!'



"யார் எதைச் சொன்னாலும் ரெண்டாவது தடவையா சொன்னாத்தான், என் மண்டைலயே ஏறுது!"

"என்ன சொன்னீங்க, இன்னொரு தடவை சொல்லுங்க!"

- வெ.சீதாராமன்



"அந்த ரவுடிகிட்டே 'மல்லு' கட்டாதேடான்னு சொன்னா, அவன் கேட்டால் தானே!"

"என்? என்ன ஆச்சு?"

"இப்ப 'பல்லு' கட்ட வேண்டியதா போச்சு!"


- சம்பத் குமாரி



"வெயிட்டர்... சாதத்துல பார் எவ்வளவு பெரிய கல்..."

"நல்லவேளை, அதை எடுத்து அப்பளத்து மேல வைங்க சார், ஃபேன் காத்துல பறக்காம இருக்கும்..."

- பூ.மகுடபதி



"என்னைப் பற்றிய உண்மைகளை மட்டும் சொல்லி, இந்தப் புலவரைப் பாடச் சொல்லுங்கள் அமைச்சரே..."

"இத்தனை பேர் மத்தியில் தங்கள் மானம் போகுமே... பரவாயில்லையா மன்னா...?"

- கே.ஆனந்தன்

கம்ப்யூட்டருக்குப்




சொல்லிக் கொடுப்பது எப்போதுமே சுவாரசியமானதுதான். சொல்லிப் புரிய வைக்க நிறையத் திறமையும் உழைப்பும் தேவை. மற்ற கல்வியைவிட மருத்துவக் கல்வி இன்னும் சிரமம். இதயம் இப்படி இருக்கும் என்று, வகுப்பில் படம் போட்டு விளக்கலாம். சோதனைச் சாலையில் கிடத்திய உடம்பைக் கூறுபோட்டுக் காட்டலாம். ஆனால் நோய்? தனக்கு வந்தால் தானே தலைவலி தெரியும். தெரியாவிட்டால்? கம்ப்யூட்டரைக் கேட்கலாம். 'உடம்புக்கு என்ன செய்யுதுங்க?'

பல் வலியை எடுத்துக் கொள்வோம். ஏதோ காரணத்தால் பல் வலி வர டாக்டரிடம் போகிறார் நோயாளி. அவர் என்ன சாப்பிட்டார்; எதைக் குடித்தார்; எப்போது பல் துலக்கினார்? டாக்டர் ஏகப்பட்ட கேள்விகளைக் கேட்டு, உயிர் போகிற பல் வலிக்கு இடையே தகவலைப் பிடுங்கி விட்டு, அப்புறம் நிதானமாக பல்லைப் பிடுங்க ஏற்பாடு செய்யலாம். இதை வகுப்பில் எப்படிச் சொல்லிக் கொடுப்பது? ஈசி.

கம்ப்யூட்டர் நோயாளியாக அவதாரம் எடுக்கும். எழுதிய ஆணைத் தொடரான மென்பொருளும், மெமரியிலிருந்து ஸ்பீக்கர் வரையான சகல வன்பொருளும் சேர்ந்து படைக்கும் மாயச் சூழல் இது. கம்ப்யூட்டரின் நோயாளி வேடத்துக்கு ஒரு பெயரும் வைக்கப்படும். உதாரணமாக, பல்லவி. பல்லவிக்குப் பல்வலி. சரியா?

பல் மருத்துவம் படிக்கும் மாணவர்கள், கம்ப்யூட்டரோடு பேசுகிறார்கள்; அதாவது பல்வலியோடு உட்கார்ந்திருக்கும் பல்லவியோடு. 'எப்போ இருந்து பல் வலிக்குது. நீங்க டுத் ப்ரஷ் எப்ப வாங்கினீங்க?'



பல் வலி!

-இரா.முருகன்

பல்லவி சொல்கிறாள்: 'அது எனக்கு ஐந்து வயசானபோது அப்பா வாங்கிக் கொடுத்தது. சென்டிமெண்டலா இன்னும் விடாம அதை வைச்சு பல் தேச்சுக்கிட்டிருக்கேன்.' 'அப்படியா? இன்னும் நாலு வருஷம் அதாலேயே தேச்சுப் பாருங்க. பிரஷ்ஷும் மொட்டையாயிடும். வாயிலும் பல்லு போய் பொக்கையாயிடும்.' கேள்வியும் பதிலுமாக இந்த டாக்டர் - நோயாளி உரையாடல் தொடரும். கல்வியும்தான்.

டிஜிட்டல் கல்வியில் இன்னொரு நன்மை. ஒன்றோடு நிறுத்துவானேன்? ஐந்து கம்ப்யூட்டர்களை வலைப் பின்னலில் இணைத்து, அரை வட்டமாகச் சுற்றி இருத்திவிடலாம். பல் மருத்துவம் படிக்கும் மாணவன், அவற்றுக்கு நடுவே உட்கார்ந்து உரையாடுவது ஒரு பல்லவியோடு மட்டும் இல்லை; ஐந்து பல்லவிகளோடு. நாலு வயது பல்லவி, பத்து வயதில் அவள், முந்தா நாள் சாயந்திர பல்லவி, நேற்றையவள், வலி போயிந்தி என்று கவிட்ச் போட்டதுபோல் நாளைக்குச் சிரிக்கப் போகிறவள். இந்த கம்ப்யூட்டர் புனைவுகளுக்கு 'அவதார்' என்று பரிபாஷையில் பெயர் வைத்திருக்கிறார்கள்.

பல்லவியோடு கதைப்பதை வைத்தே, படிக்க வந்த மாணவன் புத்தியில் நுழைந்த அறிவை, கம்ப்யூட்டர் எடை போட்டு விடும். கேள்வி கேட்பதின் அடிப்படையில் புத்திசாலித்தனம் நிர்ணயிக்கப்படும். 'இந்தியாவுக்கு 1947 ஆகஸ்ட் 15-ம் தேதி சுதந்திரம் கிடைத்ததே, அன்றைக்கு என்ன கிழமை?' என்று கம்ப்யூட்டரை ஒரு மாணவி கேட்பதாக வைத்துக்கொள்வோம். 'இந்தப் பெண்ணுக்குச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி நடந்த நாள் எதுவென்று தெரிந்திருக்கிறது. இந்தக் கேள்விக்குப் பத்து மதிப்பெண் கொடுக்கலாம்' என்று கம்ப்யூட்டர் கணக்குப் போடுவதோடு - 'இரவிலே வாங்கிய சுதந்திரம் புதிதாக விடிந்த நாள் வெள்ளிக் கிழமை' என்று விடையும் சொல்லும்.

கல்வி புகட்டுவது மட்டுமில்லை.



மாணவ டாக்டர், நோயாளியோடோ மாணவ வழக்கறிஞர் கட்சிக் காரரோடோ அல்லது நீதிமன்றத்திலோ திறமையாகப் பேசி தொழிலில் வெற்றிபெற கம்ப்யூட்டர் பல்லவிகள் உதவி செய்வார்கள்.

தினம் இரண்டு பாக்கெட் சிகரெட் புகைக்கும் நபரோடு விடாமல் பேசி, அந்தக் கெட்ட பழக்கத்தைக் கைவிடச் செய்ய மனைவியால் முடியுமோ என்னமோ. 'செயின் ஸ்மோக்கர்' அவதாரம் எடுத்த கம்ப்யூட்டரோடு பேசிப் பழகிய டாக்டரால் முடியும்!

ஒலிம்பிக்ஸில் பார்வையாளர்களின் விசேஷ கவனத்தைப் பெறுவதில் எப்போதுமே 100 மீ. ஓட்டப்பந்தயதுக்குத்தான் முதலிடம். ஒலிம்பிக்கில் 100 மீ. பந்தயத்தில் வெற்றி பெறுபவருக்கு, 'உலகின் அதி வேக ஓட்டக்காரர்' என்கிற பட்டம் சூட்டப்படுவதும் இதன்மீதான ஈர்ப்புக்குக் காரணமாக இருக்கலாம்.

பீஜிங் ஒலிம்பிக்ஸில் உசைன் போல்ட், டைசன் கே, அசஃபா பவல் ஆகிய மூவருக்குமிடையேதான் கடும்போட்டி. சென்ற மே மாதம், 9.72 விநாடி களில் 100 மீட்டர் தூரத்தைக் கடந்து, உலக சாதனை படைத்தார் ஜமைக்காவைச் சேர்ந்த உசைன் போல்ட். அதற்கு முன்னர் 9.74 விநாடிகளில் அசஃபா பவல் ஓடியதுதான் உலக சாதனை. இப்போதுதான் இத்தனை குறைந்த கால அவகாசத்தில் போட்டி போடுகிறார்கள். ஏதென்ஸில் நடந்த முதல் ஒலிம்பிக் போட்டியில் (1896) சாவகாசமாக 12 நொடியில் இத்தூரத்தைக் கடந்து முதல் சாம்பியன் ஆனார், அமெரிக்க வீரரான டாம் பர்கே. அதன்பிறகு 1968 மெக்ஸிகோ ஒலிம்பிக்ஸில்தான் முதல்முறையாக 10 விநாடிகளுக்குக் குறைவாக ஓடி, ஒருவர் (ஜிம் ஹைன்ஸ்) தங்கம் வென்றார். அமெரிக்காவைச் சேர்ந்த கார்ல்லூயிஸ் 84, 88 வருடங்களில் நடந்த இரு ஒலிம்பிக்ஸிலும் 100 மீ. பந்தயத்தில் தங்கம் வென்று, தன்னிகரற்ற நட்சத்திரமாக விளங்கினார். இதுவரை நடந்த 100 மீ. ஒலிம்பிக்ஸ் போட்டிகளில், அமெரிக்கர்கள் பதினாறு முறை தங்கம் வென்று ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

வேகத்தைத் துல்லியமாகக் கணிக்கக்கூடிய உபகரணங்களால், 100 மீ. போட்டி மேலும் சுவாரசியமானது. பொதுவாக எதிர்காற்றில் யாராலும் வேகமாக ஓட முடியாது. ஆனால், காற்று வீசும் திசையோடு சேர்ந்து ஓடும்போது வேகமாக ஓட முடியும். 100 மீ. ஓட்டப்பந்தயத்தில் இவை அனைத்தும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். இரு மாதங்களுக்கு முன்பு அமெரிக்க வீரரான டைசன் கே 9.68 விநாடிகளில் தூரத்தைக் கடந்தாலும், காற்றின் உதவியோடு அவர் ஓடியதால், அவருடைய சாதனை, உலக சாதனையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

நூறு மீட்டர் ஓட்டப்பந்தயத்துக்குத் தவறான வகையில் புத்துயிர் தந்தவர் கனடா நாட்டைச் சேர்ந்த பென் ஜான்சன். 1988 சியோல் ஒலிம்பிக்ஸில் அதிரடியாக நடப்பு சாம்பியன் கார்ல் லூயிஸை வென்று, 9.70 விநாடிகளில் ஓடி முதல் இடத்தைப் பிடித்ததோடு உலக சாதனையையும் படைத்தார் அவர். ஆனால், பென் ஜான்சன் போதை மருந்து

* டைசன் கே



ச. ந. கண்ணன்

100 மீட்டர் அற்புதம்!

உட்கொண்டதாக பிறகு கண்டுபிடிக்கப்பட்டு, மெடலும் சாதனையும் அவரிடமிருந்து பறிக்கப்பட்டன. 9.92 விநாடிகளில் ஓடிய கார்ல் லூயிஸ் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார்.

டைசன் கே, பவல் ஆகியோரின் சமகாலத்தவராக இருந்தா லும் உத்திகளின் உசைன் போல்ட், அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவர் போலத் தெரிகிறார். சமீபத்தில் நடந்த பத்து 100 மீ. போட்டிகளில், ஒன்பதில் உசைன் வென்றுள்ளார். மீதமுள்ள ஒரு போட்டியில் பவலிடம் 0.01 விநாடி வித்தியாசத்தில் தோல்வி கண்டார். சென்ற ஏதென்ஸ் ஒலிம்பிக்ஸ் 100 மீ. போட்டியில் தீப்பொறி பறந்தது. முதல்முறையாக ஐந்து பேர் பத்து விநாடிகளுக்குக் குறைவாக ஓடியிருந்தார்கள். இந்த ஒலிம்பிக்ஸுக்கான 100 மீ. இறுதிப்போட்டி ஆகஸ்ட் 16ஆம் தேதி இந்திய நேரம் இரவு 8 மணிக்கு (சீனாவில் இரவு 10.30) நடக்க இருக்கிறது. ஒருவிநாடி கூட கண் சிமிட்டிவிடாதீர்கள். உசைன், பவல், டைசன் ஆகிய மூவரும் காற்றைக் கிழித்துக்கொண்டு, சிறுத்தை வேகத்தில் ஒருவரையொருவர் முந்திக்கொண்டு ஓடுவது, வாழ்க்கையில் கட்டாயம் காண வேண்டிய அதி அற்புதக் காட்சி. ○



* உசைன் போல்ட்



* அசஃபா பவல்

மேற்கு வங்கத்தில் 'தேள்'...

இந்தியாவிலேயே அதிகளவில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அனுமதிக்கப்பட்டுள்ள மாநிலம் ஆந்திரப் பிரதேசம்தான். மொத்தம் 91. அதில் 61 மண்டலங்களுக்கு ஏற்கெனவே வேலைகள் ஆரம்பித்துவிட்டதாகச் சொல்லியிருக்கிறார் தொழிற்சாலைத் துறை அமைச்சர் கீதாரெட்டி.

இருந்தாலும், மாநில அரசு ரொம்பவும் உஷாராகத்தான் இருக்கிறது. நந்திகிராம் மாதிரி ஏதாவது ஏடாகூடமாக நடந்துவிடக் கூடாதே.

'அரசு நிலங்களையும் ஒரு போகம் விளையும் நிலங்களையும் மட்டும்தான் மண்டலங்களுக்குக் கொடுக்கிறோம். விவசாயிகளுக்கு மாற்று நிலம் வழங்கப்படுகிறது' என்றெல்லாம் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள்.

மேற்கு வங்கத்தில் தேள்கொட்டினால், ஆந்திராவில் நெரி கட்டுகிறது.


ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டியின் மகன் ஜெகன்மோகன் ரெட்டி, 'சாக்ஷி' என்ற ஒரு பத்திரிகையை நடத்திக்கொண்டிருக்கிறார்.

சமீபத்தில் இயேசுகிறிஸ்துவின் படமொன்றை சாக்ஷி வெளியிட்டது. அதைப் பார்த்த ஆந்திரத்தில் உள்ள அத்தனை கிறிஸ்தவர்களும் கொதித்துப்போனார்கள். ஒரு கையில் சிகரெட்டும், மறுகையில் பீர்பாட்டிலுமாக இயேசு போஸ் கொடுப்பது போல படம்போட்டதுதான் அவர்களின் கோபத்துக்குக் காரணம்.

மொத்த மாநிலமும் ரணகளப்பட்டது. சாக்ஷியின் பொறுப்பாசிரியர்கள் டி.வி.யில் தோன்றிப் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டார்கள். அதையடுத்து உதவியாசிரியர் சமீரா, 'இன்டர்நெட்டில் அந்தப் படத்தை நான்தான் டவுன்லோட் செய்தேன். ஆனால், முழுப்படத்தையும் கவனிக்காததால் தவறு நேர்ந்துவிட்டது' என்று கண் கலங்கினார். அவர் ஒரு கிறிஸ்தவப் பெண்

(பிதாவே இவர்களை மன்னியும்...!)

கால்பந்து என்றாலே ஹைதராபாத் நினைவு வரும் காலமொன்று இருந்தது. ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொண்ட



* சிரஞ்சீவி

செல்வபுவியரசன்

ஆந்திராவில் 'நெறி'..!



ராஜசேகர ரெட்டி



ராஜசேகர்

இந்திய கால்பந்து வீரர்களில், ஏறக்குறைய முக்கால்வாசிப்பேர் ஆந்திரா.

ஒலிம்பிக் போட்டி நடக்கும் வேளையில் இப்போது ஏமாற்றம்தான்.

சையது அப்துல் ரஹீம், ஹைதராபாத் ஃபுட்பால் அசோசியேஷனின் பொருப்பாளராக இருந்த ஐம்பதுகளில், ஹெல்சின்கி, மெல்போர்ன், ரோம் என்று அடுத்தடுத்து நடந்த மூன்று ஒலிம்பிக் போட்டிகளிலும் கலந்துகொண்டு, மூக்கின் மேல் விரல்வைத்து வியக்குமாறு விளையாடினார்கள் ஆந்திர வீரர்கள்.

ரஹீமுக்குப் பிறகு ஹைதராபாத் கால்பந்தாட்டக் கழகம் உட்பூசலில் சீரழிந்தது. இப்போது கிரிக்கெட் பக்கம் திரும்பி விட்டார்கள்.

ஆந்திர அணியைப் பார்த்து, ஒரு காலத்தில் அலறிக்கொண்டிருந்த அகில இந்திய கால்பந்துக்கழகம், தானே மனமிரங்கி வந்து சிறப்புக் கமிட்டிகளை நியமனம் செய்தது.

(ம்ஹூம்... கோமாவில் கிடப்பவனுக்கு குளுக்கோஸ் கொடுத்த கதைதான்.)



★ ரோஜா

ஆந்திராவில் சட்டமன்றத் தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கிறது. அரசியல் தலைவர்கள் தயாராகும் முன்பாகவே, சினிமா நட்சத்திரங்கள் 'ஸ்டார் ஆக்ஷ'னுக்கு ரெடியாகிவிட்டார்கள்.

புதிதாக அரசியலில் குதித்திருக்கும் சிரஞ்சீவி, திருப்பதியிலோ ராயலசீமாவிலோ போட்டியிடப் போவது உறுதியாகிவிட்டது. அவரை எதிர்த்து தெலுங்கு தேசம் கட்சியின் மகளிர் அணித் தலைவி ரோஜா, நிற்க வாய்ப்பிருக்கிறது. சமீபத்தில், குடும்ப சகிதமாக காங்கிரஸில் இணைந்திருக்கும் ராஜசேகர் 'நானும் சிரஞ்சீவியை எதிர்த்து நிற்பேன்' என்று சபதம் செய்து வருகிறார்.

ஆந்திரா பக்கம்



22 மணி நேர
திக் திக்!



அப்பா, அம்மாவைச் சுற்றிவரும் செல்லப்பிள்ளையாக இருந்தாலும், உலகையும் மூன்று முறை சுற்றி வந்துவிட்டார் இருபத்திரண்டு வயதான ஸ்ரீ லெட்சுமி ப்ரியா. அதுவும் தமிழகத்தின் முதல் பெண் மரைன் இன்ஜினீயர் என்ற பெருமையுடன். அவரோடு பேசினோம்...

கப்பல் பணியில் சேர ஆர்வம் வந்தது எப்போது?

''திருச்சி செயின்ட் ஜோசப் ஆங்கிலோ இந்தியன் ஸ்கூல்ல படிக்கும்போதே முடிவு பண்ணிட்டேன். கப்பல் பத்தி எதுவுமே அப்ப எனக்குத் தெரியாது. இருந்தாலும், ஏதோ ஓர் ஆர்வம் கப்பலோடு இணைச்சது.

வொர்க் பண்ற இடத்துல இன்கன்வினியன்ஸ், அட்வென்சர் இருக்கணும்கறது என்னோடு ஆசை. கப்பலில் அவை அதிகம். அதனால ஆர்வமும் அலை மாதிரி அடிச்சுக்கிட்டே இருந்தது.''

முதன்முதல்ல கப்பலைப் பார்த்ததும் எப்படி இருந்தது?

''ரொம்பப் பிரமிச்சுப் போனேன். சின்னக் குழந்தையா இருக்கும்போது, கப்பல்னா ஏதோ குட்டியூண்டு 'போட்' மாதிரி இருக்கும்னு நினைச்சிருந்தேன். நேர்ல பார்த்த பிறகு அது கடலில் மிதக்கும் குட்டி உலகம்னு புரிஞ்சது.''

எப்படிக் கிடைச்சது இந்த வாய்ப்பு?

''புனே டூலான் மெரிடைம் இன்ஸ்டிடியூட்டில், மரைன் இன்ஜினியரிங் மூணாவது வருஷம் படிச்சுக்கிட்டு இருக்கும்போது, கேம்பஸ் இன்டர்வியூவில் செலக்ட் ஆனேன். என்னை செலக்ட் பண்ணின 'ஆங்கிலோ ஈஸ்டர்ன் ஷிப் மேனேஜ்மென்ட்' நெம்பர் ஒன் கம்பெனியா



★ ஸ்ரீ லட்சுமி ப்ரியா

இருந்தாகூட, அந்தச் சரக்குக் கப்பல் கம்பெனியில கேர்ள்ஸ் யாருமே கிடையாது. அவங்க செலக்ட் பண்ணின முதல் பெண் நான்தான்.''

அப்ப, இன்டர்வியூ ரொம்ப 'டஃப்'ஆக இருந்திருக்குமே?

''நிச்சயமா. மெடிக்கல் டெஸ்ட் உட்பட நிறைய டெஸ்ட் இருக்கு. பொண்ணுங்கறதால என்னை செலக்ட் பண்ண ரொம்ப யோசிச்சாங்க. ஆனா, இன்டர்வியூவில் என்னோட 'பெர்ஃபாமென்ஸ்' நல்லா இருந்ததால செலக்ட் ஆயிட்டேன்.''

எப்படி இருந்துச்சு அந்தக் கப்பல் சூழல்?

''மொத்தத்துல வித்யாசமான அனுபவம்தான். எப்பவும் சத்தம், ஏகப்பட்ட மெஷின்கள்னு இருக்கும். ஆரம்பத்துல அங்க இருக்கறவங்க யாருமே அவ்வளவா பேச மாட்டாங்க. அதுக்கு அப்புறம் சகஜமா பழகிட்டாங்க.''

இந்தச் சூழல்ல உங்க திறமையை நிரூபிக்க முடிஞ்சதா?

''பெஸ்ட் ஸ்பிரிட்டடு பெர்சனாலிட்டி'னு அவார்டு வாங்கி இருக்கேன். இன்னொரு விஷயம், எனக்குப் பிறகு எங்க கம்பெனியில இப்ப நிறைய கேர்ள்ஸை வேலைக்கு எடுக்க ஆரம்பிச்சிருக்காங்க.''

மறக்க முடியாத அனுபவங்கள்?

''ம்... நிறைய! பசிபிக் கடலைக் கடந்து போகும்போது, புயலில் மாட்டிக்கிட்டு 22 மணி நேரம் தவிச்சிருக்கோம்.

டென்மார்க்ல எரிபொருள் நிரப்பறது மாதிரி நிறைய வேலைக்காக நிறுத்தி வைச்சிருக்கும்போது, 36லிருந்து 40 மணி நேரம் கண்மூடாம விழிச்சுக்கிட்டே இருந்தோம். நான் அப்ப ட்ரெயினிதான். இருந்தாலும் ஆஃபிஸர்ஸ் எல்லாம் விழிச்சுக்கிட்டு இருக்கும்போது, நான் மட்டும் தூங்க முடியுமா என்ன?''

நீங்க பொழச்சுக்குவீங்க அம்மணி

- எம்.எம். திரவியம்

நடக்குமென்பார்; நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

மேஷம்: துணிச்சலோடு செயல்படும் மேஷ ராசிக்காரர்களே... வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வந்து சேருமுங்க. பூர்வீக சொத்து பிரச்னை தீர்ந்து போகும். தொழில் செய்ய உதவிங்க கிடைக்குமுங்க. அடிக்கடி மன உளைச்சல் ஏற்பட்டாலும் நன்மைக்குக் குறைவு இருக்காதுங்க. ராகு / கேது / குரு வழிபாடு நல்ல பலன்களை அளிக்குமுங்க.

ரிஷபம்: பேச்சுவன்மை மிக்க ரிஷபராசிக்காரர்களே... அதிக மதிப்பெண்கள் பெறுவீங்க. வருவாய் பெருகுமுங்க. புதிய வேலைவாய்ப்புங்க தேடி வரும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். புதிய தொழில் தொடங்கப் போறீங்க. நாணயமாக நடந்துக்குவீங்க. ராகு / கேது / சனி வழிபாடு நன்மையளிக்குமுங்க.

மிதுனம்: பழகுவதற்கு இனிமையான மிதுன ராசிக்காரர்களே... வாழ்க்கை இனிமையாக இருக்கும். வசதிவாய்ப்புகள் பெருகப்போவுது. வேலையில் சுமை இருக்காது. வியாபாரம் சூடுபிடிக்கும். குரு / சனி வழி பாடு நன்மையை அதிகப் படுத்தும்.


கடகம்: கண்டிப்பும் பாசமும் சரிவிகித கலவையான கடக ராசிக்காரர்களே...சுபகாரியங்கள் தடையில்லாம நடைபெறப் போகுது. வாக்கு மேன்மையை அடையும். வேலையும் கொஞ்சம் அதிகரிக்குமுங்க. கைப் பொருள் மீது கவனமா இருங்க. ராகு / கேது வழிபாடு நன்மையளிக்குமுங்க.

சிம்மம்: தளராத மனமுதிர்ச்சியும் நம்பிக்கையும் கொண்ட சிம்மராசிக்காரர்களே... வேலையில சுமை அதிகமாகும். குடும்ப வாழ்க்கையில விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. உடல் ஆரோக்கியம் நல்ல நிலையில் இருக்கும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு நன்மை தரும்.

கன்னி: கண்ணியமிக்க கன்னிராசிக்காரர்களே... இந்த வாரம் சிறப்பாக அமையுமுங்க. வியாபாரம் ஜோரா இருக்கும். குடும்பத்துல மகிழ்ச்சி பொங்குமுங்க. ஆடை ஆபரணங்கள் வாங்கிக் குவிப்பீங்க. வெளிநாடு போற வாய்ப்பு வரும்ங்க. ஆஞ்சநேயர் வழிபாடு நன்மையைத் தருமுங்க.

துலாம்: விவேகம் நிறைந்த துலா ராசிக்காரர்களே... குடும்பச் சொத்துல இருந்து வந்த பிரச்னைங்க முடிவுக்கு வரும். சுபச்செலவுகள் உண்டுங்க. கடன்





தொல்லைங்க முடிவுக்கு வருமுங்க. வியாபாரம் நல்லபடியா போகும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு நன்மையைத் தருமுங்க.

விருச்சிகம்: நகைச்சுவையுடன் பேசும் விருச்சிக ராசிக்காரர்களே... உத்தியோக இடமாற்றம் உண்டுங்க. குடும்பத்துல பிரச்னைகள் இருகாது. கல்வியில் நல்ல முன்னேற்றம் காணலாம். வேலைப்பளு அதிகமாகும். திருமண பாக்கியம் உண்டாகப் போகுது. நண்பர்கள் தேடி வந்து உதவுவாங்க.

தனுசு: புண்ணியப் பயணம் மேற்கொள்வதில் மிகுந்த ஆர்வம்கொண்ட தனுசு ராசிக்காரர்களே... தடைப்பட்ட காரியங்கள் மளமளன்னு நடக்கப் போவுது. குடும்பத்துல மகிழ்ச்சி பொங்குமுங்க. உல்லாசப் பயணம் போவீங்க. கடன் தொல்லைங்க இருக்காது. பணம் பல வகையில வருமுங்க. ஆஞ்சநேயர் வழிபாடு நன்மையை அதிகப்படுத்துமுங்க.

மகரம்: தெய்வ நம்பிக்கையோடு காரியங்களில் ஈடுபடும் மகர ராசிக்காரர்களே... உத்தியோகத்துல நல்ல பெயர் வாங்குவீங்க. கடன் பாக்கிகள் வசூலாகும். நண்பர்கள் உதவி செய்வாங்க. சாப்பாட்டு விஷயத்துல கவனமா இருங்க. ராகு / கேது / குரு வழிபாடு நன்மையைத் தருமுங்க.

கும்பம்: விரைந்து முடிவெடுக்கும் கும்பராசிக் காரர்களே... மனத்தில் இருந்த குழப்பங்கள் தீருமுங்க. ஆரோக்கியம் நல்ல படியாக இருக்கும். பிரிந்த குடும்பம் ஒண்ணு சேரும். தொழில்ல நல்ல ஏற்றம் இருக்குமுங்க. ராகு / கேது /குரு வழிபாடு நன்மையைத் தருமுங்க.



மீனம்: எதிரிகளையும் நண்பர்களாக்கும் மீனராசிக் காரர்களே... ரொம்ப அருமையான வாரமுங்க. நீங்க தொட்டால் மண்கூடப் பொன்னாகுமுங்க. வியாபாரத்துல நல்ல முன்னேற்றம் இருக்குமுங்க! சனீஸ்வர வழிபாடு நன்மை யளிக்குமுங்க.

10.08.2008 முதல் 16.08.2008 வரை



பேச்சு பலவிதம்

சில நாட்களுக்கு முன், பிராட்வே முனையில், சற்று நேரம் நான் நின்று கொண்டிருக்க நேரிட்டது. அங்கே என்னை ஒருவரும் உட்காரச் சொல்ல வில்லை யாதலாலும், வண்ணாரப் பேட்டை டிராம் வண்டியை நான் பிடிக்க வேண்டியிருந்ததாலும், அவ்வாறு நின்று கொண்டிருந்தேன். அங்கே என்னருகில் இன்னும் இரண்டு பேரும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் பின் வரும் சம்பாஷணை நடந்தது.

முதல் மனிதர்: ஏன் ஸார்! நீங்கள் எழும்பூர் டிராமுக்காகக் காத்துக் கொண் டிருக்கிறீர்களோ?

இரண்டாம் மனிதர்: ஆமாம்; அரை மணியாய்க் காத்துக்கொண்டிருக்கிறேன். அம்பட்டன் வாராவதிக்கு நூறு டிராம் போய்விட்டது; லஸ்ஸுக்கு ஒருவண்டி கூட வரவில்லை.

மு.மனிதர்: என்ன சொல்கிறீர்கள்? பஸ்காரன் அம்பட்டனைத் தேடிக் கொண்டா போயிருக்கிறான்? அவனுக்கு என்ன இன்றைக்கு க்ஷவரக் கல்யாணம் பண்ணிக்க உத்தேசமோ?

இ.மனிதர்: என் பொண்ணுக்குத்தான் கல்யாணம்; டாக்டர் குருநாதனின் பிள் ளைகள் நிச்சயம் செய்திருக்கிறது. அப்பா! என்ன சத்தம் இங்கே? தலைவலி வந்து விடும் போலிருக்கிறது.

மு.மனிதர்: டாக்டருக்கே தலைவலி வந்துவிட்டால் ஆபத்துதான். ஏதாவது மருந்து வாங்கிப் போட்டுப் பார்க்கிறது தானே?

இ.மனிதர்: பார்க் காமலென்ன? அதுதான் அவ்வளவு ஸ்பஷ்டமாய் எழுதியிருக்கிறதே; "காங்கிரஸுக்கே வோட்டுக் கொடுங்கள்; சாதிக்கட்சியை ஒழியுங்கள்" என்று.

மு.மனிதர்: நான் ஒன்றும் சாதிக் கட்சி பேசவில்லை. மாசிலாமணிதான், "நாங்கள் எப்படியும் உங்களைவிட ஒசத்தி; தொண்டை மண்டலம் முதலியார் அல் லவா?" என்றான். எனக்குக் கோபம் வந்துவிட்டது.

இ.மனிதர்: தொண்டையிலே புண்ணி ருந்தால், கோபித்துக்கொண்டு என்ன செய்வது? ஆஸ்பத்திரிக்குப் போய் மருந்து தடவிக்கொள்ள வேண்டும்.

மு.மனிதர்: ஆஸ்பத்திரியில்தான் என் சம்சாரத்தை விட்டிருக்கிறேன். அவளைப் பார்க்கத்தான் அவ்சரமாய்ப் போக வேண் டும். இந்த 'நர்ஸு'கள் இருக்கிறார்களே, அவர்கள் சரியாய்க் கவனிப்பதேயில்லை.

இ.மனிதர்: நர்ஸுக்கென்ன கவலை? அவளா பிரசவிக்கப் போகிறாள்? இதை உத்தேசிக்கும்போதுதான் கர்ப்பத்தடை அவசியம் என்று தோன்றுகிறது. ரமேஷும் கூட அதுதான் சொல்கிறார்.

மு.மனிதர்: ஆமாம், ராமேசுவரம் போனால் குழந்தை பிறக்குமென்பதுதான் பிரசித்தியாயிற்றே. போன வருஷத்தில் எங்கள் அடுத்த வீட்டுச் சின்னசாமியும் அவர் சம்சாரமும் போய்வந்தார்கள். இந்த வருஷம் குழந்தை பிறந்தது.

இதற்குள் வண்ணாரப்பேட்டை டிராம் வந்துவிட்டபடியால், மேற்படி ரஸமான சம்பாஷணையை நடுவில் விட்டு நான் போக வேண்டியதாயிற்று.


மேற்படி சம்பா ஷணை முறை எனக்கு

அமரர் கல்கி

மிகவும் பிடித்திருந்தது. அந்த முறையில், ஒருவர் சொல்வதை இன்னொருவர் கவனிக்க வேண்டிய அவசியமேயில்லை. ஒருவர் சொல்வதில் ஏதாவது ஒரு வார்த்தையை எடுத்துக்கொண்டு இன்னொருவர் தனக்கிஷ்டமானதைப் பேச வேண்டியது. இந்த முறையில் மூளைக்குக் கொஞ்சம் கூட சிரமம் கிடையாதல்லவா?

ஆனால், வேறு சிலர் இருக்கிறார்கள். அவர்கள் பேசும்போது இடையிடையே, 'விளங்கிற்றா?', 'புரிந்ததா?', 'நான் சொல்றது அர்த்தமாச்சா?' என்று கேட்டுக்கொண்டுதான் மேலே போவார். இது மட்டுமல்ல, 'இந்த விஷயம் வேறே யாராவது சொல்லியிருக்கிறார்களா?' என்றும் கேட்டுக்கொள்வார்.

அடிக்கடி சந்தேகப்பட்டு, 'தெரிந்ததா?', 'என்ன நான் சொல்கிறது?' என்று கேட்டுக்





மனைவி: ஞாபக மறதிக்கு 15 நாளா ட்ரீட்மெண்ட் எடுத்துக்கறீங்களே, இப்ப ஏதாவது முன்னேற்றம் தெரியுதா உங்களுக்கு?''

கணவன்: இவ்வளவு அக்கறையோட விசாரிக்கறீங்களே, நீங்க யாரு?''

- சீர்காழி வி. ரேவதி

கொண்டு பேசுகிறவர்களிடம் எனக்கு ரொம்பப் பயம். அவர்களைக் கண்டால், ஓட்டம் பிடிக்கக்கூடத் தயங்கமாட்டேன்.

இடைவிடாமல் பேசுகிறவர்களிலும் இரண்டு ரகம் உண்டு. சின்ன வாக்கியக்காரர், பெரிய வாக்கியக்காரர் என்பதாக அவர்களைப் பிரிக்கலாம். பெரிய வாக்கியக்காரர்கள் இருக்கிறார்களே, அவர்கள் பிரசங்க முறை வருமாறு:

'அதாவது, ஸ்வாமி விவேகானந்தர், அமெரிக்காவிலே சிகாகோ நகரிலே கூடிய சர்வ மத சமரச மகா சபையிலே உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெற்றெனச் சொன்னது என்னவென்றால், 'எவனுடைய இருதயமானது ஏழைகளுக்காகப் படீரென்று வெடித்துச் சுக்கு நூறாகிறதோ, அவனே மகாத்மா; மற்றவர்கள் எல்லாம் துராத்மா' என்று கூறியிருப்பதுபோல, நாம் நம்முடைய ஏழை ஜனங்களுக்கு வயிற்றுக்கு உணவும், உடுத்துவதற்குத் துணியும் கொடுக்க வேண்டியது அவசியமாயிருக்கிறபடியினால், 'உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம்' என்று நமது ஔவை மூதாட்டியார் கூறியிருப்பதைப் பசுமரத்தாணி போல் மனத்தில் பதியவைத்துக்கொண்டு ஒரே பிடிவாதமாய் நின்று உழைத்து...'

இப்படியே அரை மணி ஒரு மணி நேரம் வரையில்கூட, முதலில் ஆரம்பித்த வாக்கியத்தை முடிக்காமலே போய்க்கொண்டிருப்பார்.

ஒரு வாக்கியத்தைப் பிடித்துக்கொண்டால், கிர்ரென்று கீழே இறங்கிவிடலாமே?

இத்தகைய நீள வாக்கியக்காரர்களுடன் பேசுவதில் சிரமம் எதுவும் கிடையாது. அவர்கள் பேசத் தொடங்கிவிட்டால், நாம் பாட்டுக்கு நம்முடைய காரியங்களைப் பற்றி யோசித்துக்கொண்டிருக்கலாம்.

சின்ன வாக்கியக்காரர்கள் ஒவ்வொரு வாக்கியத்தை முடிக்கும்போதும் பேசி முடித்துவிட்டதாகவே நமக்குத் தோன்றும். ஆனால், பின்னோடு அடுத்த வாக்கியம் தொடர்ந்து வந்துவிடும். இவர்கள் சம்பாஷணை முறையை ஆந்திரத் தலைவர் ஸ்ரீமான் சாம்பமூர்த்தியின் பிரசங்க முறையுடன் ஒப்பிடலாம். ஸ்ரீமான் சாம்பமூர்த்திகாரு,

'ஜஸ்டிஸ் கட்சியை ஐம்பது அடி ஆழத்தில் புதைக்க வேண்டுமென்று நான் தான் முதலில் சொன்னேன்; புதைத்தாய் விட்டது!'

என்று கர்ஜிப்பார். சரி, நாம் வீட்டுக்குப் போகலாம் என்று தீர்மானித்துக்கொண்டு எழுந்திருக்க யத்தனிப்போம். உடனே அவர்,

'புதைத்தால் மட்டும் போதாது. மேலே சமாதி எழுப்ப வேண்டும்' என்று இடி முழக்கம் செய்வார். பிறகு தொடர்ந்து,

'ஆ! தேசத்துக்காக உயிரை விட்ட எத்தனை யுவர்களுக்கும் யுவதிகளுக்கும் நாம் சமாதி எழுப்பியிருக்கிறோம்? அவர்களுடைய தியாகங்களெல்லாம் வீண் போகலாமா? நண்பர்களே! இந்த ஜஸ்டிஸ் கட்சியை வெட்டி ஐந்நூறு அடி ஆழத்தில் புதைத்தே தீர வேண்டும்!' என்பார்.

இதென்னடா வம்பு? புதைத்த ஜஸ்டிஸ் கட்சியை மறுபடியும் எடுத்து வெட்ட வேண்டுமா என்று நாம் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கையில், மேலும் தொடங்குவார்:

'ஆ! இந்த ஜஸ்டிஸ் கட்சி என்னவெல்லாம் அக்கிரமங்கள் செய்திருக்கிறது? இவ்வளவும் அந்த அதிகார வர்க்கத்தின் ஒத்தாசையுடனே யல்லவா? அப்படிப்பட்ட அதிகார வர்க்க ஆட்சியை ஒழித்து, நாம் சுதந்திரம் அடைந்தே தீர வேண்டும்.'

சரி, முடிந்துவிட்டது போலிருக்கிறது என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கையில் மறுபடியும்,

'சுதந்திரம் என்றால் வாழைப்பழம் அல்ல; கஷ்டப்பட்டுத்தான் பெற வேண்டும்...' என்று ஆரம்பிப்பார். இவ்வாறு அவர் சொல்லும் ஒவ்வொரு வாக்கியத்திலிருந்தும் ஒரு வார்த்தையை எடுத்துக் கொண்டு அடுத்த வாக்கியத்தைச் சிருஷ்டித்துக்கொண்டே போவார்.

சின்ன வாக்கியமாகப் பேசுவதில் மற்றொரு விதமுண்டு. மேற்கண்ட ரகங்களில் எதிலும் சேராத எனது சிநேகிதர் ஒருவர் இருக்கிறார். அவருடன் பேசுவதென்றால், கொஞ்சம் பிரயாசையான விஷயமே. அவர் ஏதாவது நாலு வார்த்தை சொன்னால், பதிலுக்கு நானும் மூன்று வார்த்தையாவது சொல்ல வேண்டுமென்று எதிர்பார்ப்பார்.

அவர் சொல்வதையும் நான் நன்றாய்க் கவனித்தாக வேண்டும். 'விளங்கிற்றா?', 'புரிந்ததா?' என்று அவர் கேட்காவிட்டாலும், முகத்தோற்றத்திலிருந்தே கவனிக்கிறேனா, இல்லையா என்று கண்டுபிடித்து விடுவார். கவனிக்கவில்லையென்று தெரிந்தால், பேச்சை நிறுத்திவிடுவார்.

அப்பா! இப்படிப்பட்டவருடன் பேசிச் சமாளிப்பது மிகவும் சிரமமான காரியம்தான். ஆனாலும் பேதை மனது அவருடன் சம்பாஷிப்பதில் ஏன் இவ்வளவு பிரியம் கொண்டிருக்கிறதென்பதுதான் விளங்குவதில்லை.

உண்மையில், இவருடனும் இவரைப் போன்ற இன்னும் சில சிநேகிதர்களுடனும் பேசும்போதுதான், சம்பாஷணையிலும் ரஸம் இருக்கக் கூடுமென்று எனக்கு நிச்சயம் ஏற்படுகிறது. ○



''தலைவலின்னு ஒருநாள் லீவு எடுத்தீங்க சரி. கால்வலிக்கு ஏன் இரண்டு நாள் லீவு?''

''தலை ஒண்ணுதான் இருக்கு. கால் ரெண்டு இருக்கே சார்.''

''சரி, சரி, பல்வலி வராம பாத்துக்குங்க!''

- பி.கணபதி

நியூஸ் ஸ்டேஷன்

'வாழும் தேவதை' என்று இந்து மதத்தினரும் புத்த சமயத்தினரும் போற்றி வழிபட்ட, நேபாளத்தின் குமாரி சாஜனி சாக்யா ஓய்வுபெற்றுவிட்டார். புத்த சமயத்தைப் பின்பற்றும் நேவார் குடும்பத்தினர் ஒரு பெண் குழந்தையை 'குமாரி' என்று அறிவிப்பார்கள். அந்தச் சிறுமி பூப்பெய்தியவுடன் குமாரி ஸ்தானத்தை இழந்துவிடுவார். பிறகு அடுத்த குமாரியை அறிவிப்பார்கள்.

ஒன்பது வருடங்களாக குமாரியாக வணங்கப்பட்டு வந்தார் சாஜனி. பெற்றோரின் வேண்டுகோளை அடுத்து, இப்போது புனித அந்தஸ்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்ட குமாரிகளால் எந்தப் பிரச்னைகளும் இல்லை. சாஜனி மட்டும்தான் சர்ச்சையில் சிக்கிக்கொண்டார். இந்துமத நடைமுறைகள் பற்றி, பிரிட்டிஷ் கம்பெனி தயாரித்த படத்தைப் பிரபலப்படுத்துவதற்காக, அவர் அமெரிக்காவுக்கு அடித்த விசிட் மரபை

சீன அழகியும்...

ட்ரிபிள் சிக்ஸ்:

லித்துவேனியா நாட்டின் விமானம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட 'இன்டர்நேஷனல் செக்யூரிட்டீஸ் ஐடென்டிஃபையிங் நம்பர்' (ISIN), அந்நாட்டில் பெரும் பூதாகரமான சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது. 'LT0000126666 என்ற அந்த விமான எண்ணின் கடைசி மூன்று எண்களான '666' என்பது, சாத்தானின் நம்பர்; கிறிஸ்துவுக்கு எதிரானது. எனவே, அந்த நம்பரை மாற்றுங்கள்' என்று கற்றோரும் மற்றோரும் எதிர்ப்புத் தெரிவிக்க, எண்ணை மாற்றியாகிவிட்டது.

கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் லித்துவேனியா நாட்டில் எந்த விமானத்திலும் பதிமூன்றாவது நம்பர் இருக்கை கிடையாது! அந்த எண் கிறிஸ்தவ நம்பிக்கைப்படி அபசகுனமானது. அப்படியென்றால், சுபசகுனமான எண் எது?

* ட்ரிபிள் சிக்ஸ் ஃப்ளைட்





மீறிவிட்டதாக எதிர்க்குரல்கள் எழுந்தன. அவரின் 'குமாரி' பட்டம் பறிபோகுமோ என்ற நிலையில், கடைசியில் எதிர்ப்பை வாபஸ் வாங்கிவிட்டார்கள்.

காளியின் உருவமாக வணங்கப்பெறும் குமாரியாக அடுத்து யாரைத் தேர்ந்தெடுப்பது என்று யோசித்துக்கொண்டிருக்கும் வேளையில், புதுப் பிரச்னை ஒன்று கிளம்பியிருக்கிறது.

குமாரி நடைமுறையைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று, மனித உரிமை அமைப்புகள், நேபாள நாட்டின் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கின்றன. குமாரியாக்கப்படும் சிறுமிகளின் இயல்பான வாழ்க்கை மறுக்கப்படுவதாக அவ்வமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன.

காளி தேவதை Vs சமூக நீதி தேவதை!

சர்ச்சை குமாரியும்..!

இங்கிலாந்து பிரதமரின் செய்தி தொடர்பாளர் ஒருவர், சில மாதங்களுக்கு முன்பு சீனாவுக்கு வந்தபோது, ஷாங்காயில் உள்ள ஹோட்டல் டிஸ்கோவில் தங்கி, ஆட்டம் பாட்டம் கொண்டாட்டத்துடன் ஜாலியாக இருந்திருக்கிறார். ஊருக்குத் திரும்பும் போதுதான் தனது செல்ஃபோன் காணாமல் போனதை உணர்ந்திருக்கிறார்.



அதை எடுத்தது தன்னோடு ஆடிப்பாடிய அந்த அழகான சீனப் பெண்தான் என்று, பெயர் குறிப்பிடாமல் அறிக்கையும் விட்டுவிட்டார். செல்ஃபோன் காணாமல் போனதற்கும் அந்த அழகிக்கும் சீனாவின் உளவுத்துறைக்கும் சம்பந்தம் இருக்குமோ என்று பிரதமர் அலுவலகமும் சந்தேகப்பட ஆரம்பித்தது.

ரொம்ப நாட்களாகப் புகைந்துகொண்டிருந்த இப்பிரச்னைக்கு, 'அது ஒரு கட்டுக்கதை' என்று முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார் சீன வெளியுறவுத்துறை அமைச்சர் லியூ ஜியான்சோ.

இங்கிலாந்து பிரதமர் அலுவலகமும் தமது முணுமுணுப்பை நிறுத்திக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்த அதிகாரி யாரென்று இங்கிலாந்தும் சொல்லவில்லை; சம்பந்தப்பட்ட அழகி யாரென்று சீனாவும் சொல்லவில்லை.

செய்தி தொடர்பாளரா? இருட்டடிப்பாளரா!

– ஸாந்த்

ஆணுக்கு ஆப்பிள்... பெண்ணுக்குப் பேரிக்காய்..!

ஹரியின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர் அருணாவும் ஸ்வேதாவும். ஒன்பது மணிவாக்கில் வீடு வந்து சேர்ந்தான். சோர்ந்து வந்தவனை விசாரித்தாள்.

''என்ன ப்ராப்ளம்ங்க?''

''டாக்டர் என்ன சொன்னார்... மூட்டு ஜவ்வு சிதைஞ்சு இருக்கலாம்னு சொல்றாரு. எடைதான் காரணமாம். அப்புறம் ஆணுக்கும் பெண்ணுக்கும் உடம்புல எந்தெந்த இடத்துல கொழுப்பு சேரும்; அதனால எந்த மாதிரியான பாதிப்புகள் ஏற்படும்னு அழகா விளக்கினார்'' என்றான்.

''எப்படி எப்படி?'' என்று ஆர்வமானாள் அருணா.

''ஆண்களுக்கு உடம்பின் மத்தியப் பிரதேசமான வயிற்றில்தான், முதல்ல கொழுப்பு சேர ஆரம்பிக்குமாம். அது கொஞ்சம்கொஞ்சமா சேர்ந்து, ஆப்பிள் ஷேப்புக்கு வந்துருமாம். பெண்களுக்கு உபரிக் கொழுப்பு தொடை, வயிறு, இடுப்புப் பகுதிகளில் தேங்கி பேரிக்காய் வடிவில் இருக்குமாம்.

ஆரம்பத்துலயே குறைக்க ட்ரை பண்ணாட்டா கஷ்டம்தானாம். இல்லாட்டா, நிரந்தரமா தங்கிடும்னு சொன்னாரு. ஆனாலும் தைராய்டு டெஸ்ட்டுக்கும் எழுதிக் கொடுத்துருக்காரு'' என்று முடித்தான்.

''நான் ஒரு முடிவு பண்ணிட்டேன் அருணா...''


''என்னங்க?''

''நாளையிலருந்து ஸ்ட்ரிக்ட் டயட்.''

''நிஜமாவா?''

'ஹாய் ஹரி, நாளைக்கு லன்ச் கொண்டு வர வேண்டாம். நம்ப ஜூனியர் அக்கவுண்டன்ட் சுந்தருக்கு பர்த்டே.' வேண்டாம் என்று சொல்ல மனம் வரவில்லை. 'சரி, கடைசியாக நாளைக்கு ட்ரீட் முடித்து விட்டு டயட் ஆரம்பிக்கலாம்' என்று கணக்குப் போட்டது மனம்.

லன்ச் நன்கு வெட்டியாகிவிட்டது. நாளை முதல் டயட் என்ற வாசகம், அடிக்கடி ஹரியின் மனத்தில் வந்து சென்றதனாலேயோ என்னவோ, இரண்டு வாய் அதிகமாகவே சாப்பிட்டு விட்டான்.



3

50 Kg தாஜ்மஹால்!

லக்ஷ்மி மோகன்

அவர்கள் சாப்பிட்ட ஹோட்டலின் கீழ் தளத்தில் உயர் ரக ப்ராண்டு பேண்ட், ஷர்ட்டுகள் 50% தள்ளுபடியில் விற்றுக்கொண்டிருந்தார்கள். எல்லா சைஸையும் போட்டுப் பார்த்தான். ஒன்றாவது மேலே ஏற வேண்டுமே. ம்ஹூம்... அழிச்சாட்டியம் செய்தது.

வீட்டுக்குச் சென்றவுடன் விஷயத்தைச் சொன்னான். "ஐயோ, அது சூப்பர் பிராண்டாச்சே. 50%க்குக் கிடைச்சிருந்தா அள்ளிருக்கலாமே" என்று அவளும் சந்தடி சாக்கில் சிந்து பாடினாள். பிறகுதான் நிலைமையின் விபரீதம் புரிந்தது.

ச்ச....இப்படி அவேர்னஸ் இல்லாமல் இருந்துவிட்டோமே. ஆனாலும் ஒண்ணும் குடி முழுகி விடவில்லை. இருவரையும் பாடாய்ப்படுத்தும் கொழுப்பைக் கரைத்து 50 கே.ஜி. தாஜ்மஹாலாய் வலம் வரும் ஆசை, இல்லை இல்லை வெறி, அவள் மனத்தில் விஸ்வரூபமாய் வளரத் தொடங்கியது.



கொலஸ்ட்ரால் எனும் கொழுப்புப் பொருள் பற்றித் தெரிந்துகொள்வோம். 100 மி.லி. இரத்தத்தில் 150-200 மி.லி. கிராம் வரை கொலஸ்ட்ரால் இருக்கலாம். ஜீரணித்து உட்கிரகிக்கப்பட்ட மிக மிக சிறு கொழுப்புத் துளிகளில், அடர்த்தி மிகுந்த கொழுப்புப் புரதங்கள் (ஹை டென்ஸிடி லிபோ ப்ரோடீன்), அடர்த்தி குறைந்த கொழுப்புப் புரதங்கள் (லோ டென்ஸிடி லிபோ ப்ரோட்டீன்), மிகவும் அடர்த்தி குறைந்த கொழுப்புப் புரதங்கள் (வெரிலோ டென்ஸிடி லிபோ ப்ரோட்டீன்) ஆகிய புரதங்கள் உள்ளன. இவற்றின் வேலை என்ன? கொலஸ்ட்ராலை இரத்தத்தின் வழியே உடலின் பல பாகங்களுக்கும் கொண்டு செல்வதுதான்.

இவ்வாறு நீக்கமற நிறைந்திருக்கும் கொலஸ்ட்ராலின் அளவு எப்படி இருக்க வேண்டும்? அதாவது ஹை டென்ஸிடி லிபோ ப்ரோடீனில் கொலஸ்ட்ராலின் அளவு அதிகரித்தால் பரவாயில்லை. ஆனால், வெரி லோ டென்ஸிடி லிபோ ப்ரோடீனில் கொலஸ்ட்ராலின் அளவு அதிகமானால் பிரச்னைதான். என்ன ஆகும்? இரத்தக் குழாயின் உட்சுவர்களில் கொழுப்பு படியத் தொடங்கும். விளைவு, மாரடைப்பு.

சமையலுக்கு மிகக் குறைவாகவே எண்ணெய் உபயோகிக்க வேண்டும். அவ்வாறு உபயோகிக்கும் எண்ணெயும் ஒரே வகையாக இருக்கக்கூடாது. ஆண்டாண்டு காலமாய் நம் பெரியவர்கள் சொல்லி வரும் நல்லெண்ணெய், சூரிய காந்தி எண்ணெய், முடிந்தால், ஆலிவ் எண்ணெய் ஆகியவற்றில் அரை லிட்டர் வாங்கி, எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாக ஒரே கேனில் ஊற்றிக் கலந்து உபயோகிக்கவும். (தொடரும்)

வலி. டூ வீலரை ஸ்டாண்ட்கூடப் போட முடியாத அளவுக்கு வலித்தது. அடிவயிறு கனத்துக்கொண்டு கடுக்கிற்று. இந்த இடத்தில் என்று கூற முடியாத அளவுக்கு வலி, வயிற்றைச் சுற்றி சுற்றி வந்தது. வீட்டை விட்டுக் கிளம்பும்போதே, இலேசாக வலி இருந்தது. வெயில் நேரம், சூடாக இருக்கும் என்று நினைத்தேன். சிறிது வெந்தயத்தை வாயில் போட்டுக்கொண்டு, வலி நிவாரண மாத்திரை ஒன்றையும் போட்டுக் கொண்டேன். ஆனால், கோயம்பேடு ஜங்ஷன் திரும்பும்போது வலி கடுமையானது. சாதாரண வலி இல்லை என்று உணர்ந்தேன். உடனே டாக்டரிடம் காட்ட வேண்டிய நிர்ப்பந்தமும் புரிந்தது. இப்படியே அலுவலகத்துக்குப் போனால், அது விபரீதத்தில் முடியும்! டூ வீலரை அந்தத் தனியார் மருத்துவமனை நோக்கித் திருப்பினேன். மருத்துவமனை வாசலில் வண்டியை நிறுத்த முடியாமல் தடுமாறினேன்.

என் நிலை புரிந்து ஒருவர் ஓடிவந்து பைக்கை ஸ்டாண்ட் போட்டார். இப்போது வலி தாங்க முடியாமல் கண்கள் கலங்கின. ரிசப்ஷனில் கிடந்த நாற்காலியில் அமர்ந்துகொண்டேன். கைகளால் வயிற்றை அழுந்தப் பிடித்துக்கொண்டேன். என்னையுமறியாமல் கண்களில் தண்ணீர் கொட்ட... ஒரு நர்ஸ் ஓடி வந்தார்.

''வயித்து வலியா?'' கேட்டார். தலையை ஆட்டினேன்.

''எந்த இடத்துல?'' என்றார்.

அடிவயிற்றைக் காட்டினேன்.

''எமர்ஜென்ஸி போகணும். நடக்க முடியுமா?'' நான் முடியாது என்பதாய்த் தலையாட்டினேன்.

வீல் சேர் கொண்டு வரப்பட்டது. நர்ஸ் உதவியுடன் ஏறி அமர்ந்தேன். வீல் சேர் வேகமாக ஓடியது.

டூட்டி டாக்டருக்கு, நான் கையைப் பொத்திக் கொண்டு துடித்த விதமே இவனுக்கு எங்கே வலி, என்ன காரணம் என்பதை உணர்த்தியிருக்க வேண்டும். படுக்க வைத்து சோதனை செய்து விட்டு,

''வலிக்கு ஊசி போடச் சொல்றேன். உடனே ஸ்கேன் பண்ணிடுங்க. ஐ திங்க் ஸ்டோன் ப்ராப்ளம்'' என்றார்.


நர்ஸ் ஊசி போட்டும் வலி குறையவில்லை.



அடுத்த அரை மணி நேரத்தில் 'இரண்டு கிட்னி மற்றும் பிளாடரில் கற்கள் இருக்கின்றன. கற்களின் அதிகபட்ச அளவு 8 மில்லி மீட்டர். மூன்று நாட்கள் பிளாஷ் தெரபி கொடுக்க வேண்டும். கற்கள் இறங்கி வந்தால் பேஷன்டை வீட்டுக்கு அனுப்பிவிடலாம். இல்லாவிட்டால், கற்களை லேசர் மூலம் சிதறடிக்க வேண்டும்' என ஸ்கேன் ரிப்போர்ட்டும் டாக்டரின் அட்வைஸும் வந்தன.

மனைவி மாலதி கோடைவிடுமுறையைக் கழிக்க அம்மா வீட்டுக்குச் சென்றிருந்தாள். அக்கா வீட்டுக்கு ஃபோன் செய்து விவரத்தைச் சொன்னேன். அங்கே இருந்த அம்மா உடனே புறப்பட்டு வருவதாகக் கூறினார். நெருங்கிய நண்பர்களுக்கு விவரம் சொன்னேன். கையில் பணமில்லை என்றேன்.

ஜெனரல் வார்டுதான். ஒரு பெஞ்சில் படுக்க வைத்தார்கள்.



திருவாரூர் பாபு

ஒரு நர்ஸ் கையில் நரம்பு தேடி டிரிப்ஸ் செலுத்த ஊசி குத்தினாள். தூக்கம் கண்களை இழுக்க... தூங்க விடாமல் ஏதேதோ நினைவுகள்; கனவுகள்.

முப்பத்தைந்து வயதில், இதுதான் மருத்துவ மனையில் படுத்துக் கிடப்பது முதன்முறை.

''ஏங்க, என்ன சாப்பாடு சாப்பிடறீங்க...? எதுவுமே முறையா இல்ல. உரப்பு இவ்வளவு கூடாது. நிறைய அசைவம் எடுத்துக் கறீங்க. குடிக்கற தண்ணி போதாதுங்க.'' அடிக்கடி மாலதி சொல்லிக்கொண்டிருப்பாள்.

''இத பாரு, நல்லா பசிக்குது. இது போதும். என் உடம்பு ஆரோக்யமா இருக்குதுன்னு புரியுது. நீ ஜாக்கிரதையா இரு. உன் குடும்பத்துலதான் எல்லாருக்கும் சுகர் கம்ப்ளெயின்ட் இருக்குது'' என்பேன்.

''வெளியில அதிகம் சாப்பிடாதீங்க. மாவு அஞ்சு நாளைக்கு வரும். மிளகாய்ப் பொடி இருக்கு. முட்டை வைச்சிருக்கேன். ஆம்லேட் போட்டுக்குங்க. ஹோட்டல் சாப்பாடு வேணாம். பத்து நாள்தான். ஓடி வந்திடுவேன்'' என்று சொல்லி

விட்டுப் போனாள்.

செல் ஒலிக்க... தூக்கம் கலைந்தது. எடுத்துப் பேசினேன். மறுமுனையில் மாலதி. கட்டிக்கொண்ட தொண்டையில் பேசினாள்.

''அண்ணி சொன்னாங்க. என்னங்க ஆச்சு? நான் கிளம்பிட்டேன். காலைல அங்க இருப்பேன். ஏங்க, பயப்படறதுக்கு ஒண்ணும் இல்லையே...'' என்றாள். அழுதிருக்கிறாள். குரலில் புரிந்தது.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. நீ இருந்துட்டு வா.''

''என்னால இருக்க முடியலிங்க. வந்துடறேன். நீங்க நல்லா தூங்குங்க. அலட்டிக்காதீங்க. நேரம் சரியில்ல. துர்கைக்கு விளக்கு போடணுங்க'' என்றாள்.

மாலையில் நண்பர்கள் வந்து குவிந்துவிட்டார்கள்.

''என்னடா மாப்புள... வீடு கட்டற அளவு கல்லு வைச்சிருக்கியாமே...'' சிரித்தார்கள். எனக்கும் சிரிப்பு வந்தது. வலி குறைந்து போனதன் சந்தோஷம் அது.

''தாங்க முடியலடா. இது மாதிரி வலிய நான் இதுவரைக்கும் அனுபவிச்சது இல்லடா...'' என்றேன்.

'' இனிமே தினசரி காலைல வெறும் வயித்துல அரை லிட்டர் வாழைத்தண்டு ஜூஸ் குடி. நிறைய தண்ணி குடி. டாக்டர் சொன்னாரா?'' குமார் கேட்டான்.

''ஆஸ்பத்திரிக்கே வந்திருக்க வேணாம். வலி இல்லாம இருக்க ஊசி போட்டுட்டு வீட்லயே ரெஸ்ட் எடுக்கலாண்டா. ரெண்டு வாரம் தொடர்ச்சியா வாழைத்தண்டு ஜூஸ் குடிச்சா... கல்லு கரைஞ்சு வந்துடும், இப்ப பில்லு தீட்டிடுவாங்கடா'' என்றான் பரமேஷ்.

''வலி உனக்கு வந்திருக்கணும். வீட்ல படுக்கற வலி இல்லடா அது. கொடுமை'' என்றேன்.

''ஏய் மாப்புள... இங்க இருக்கற நர்ஸுங்களப் பார்த்தா... எனக்குக்கூட ஸ்டோன் ப்ராப்ளம் வந்தா தேவலாம் போல இருக்குடா'' என்றான் ரவி.

''டேய்...'' என்றேன்.



அரைமணி நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு அனைவரும் புறப்பட்டார்கள்.

அவர்கள் போன பிறகு அம்மா வந்தாள். பெட்டில் படுத்திருந்த என்னைப் பார்த்ததும் கலங்கிப் போனாள்.

சட்டென எழுந்து அமர்ந்தேன். படுத்திருந்தால், மனதளவில் பாதிக்கப்படுவாள்.

''அப்பன்டிசைடிஸ்ஸா இருக்கும்னு நெனைச்சேன். உன் ஃபோன் வந்ததும் அதைத்தான் அக்காவும் சொன்னா... கிட்னில கல்லு இருக்காமே... கரைஞ்சு வந்திடுமாம். டாக்டர் சொன்னார். இது எல்லாருக்கும் வரும்டா. நம்ம பானு கொழுந்தனாருக்குக்கூட இருந்துச்சு. ரெண்டு நாள் ஆஸ்பத்திரில இருந்தாரு. சரியாப் போயிடும். மாலதிக்குத் தகவல் சொல்லிட்டேன். புறப்பட்டு வந்துக்கிட்டிருக்கா'' என்றாள் அம்மா.

ஓரமாகக் கிடந்த பேன்ட் சட்டையை மடித்து வைத்தாள்.

அடுத்த பெட்டில் இருந்த ஒரு அம்மாவோடு பேச்சுக் கொடுத்தாள்.

கடற்கரையில் அரண்மனை

படத்தின் பெயர்தான் கி.மு; அம்சங்கள் அத்தனையும் இனிமேல் பூக்கப் போகும் பூ அளவுக்கு ஃப்ரெஷ்! ''ஹீரோ, ஹீரோயின் முதல், பாடல் எழுதுபவர்கள், இசையமைப்பாளர் வரை புதுமுகங்களை அறிமுகப்படுத்தியிருக்கிறேன்'' என்கிறார் டைரக்டர் ஏ. மஜீத்.



''சமீபத்தில் கடற்கரை ஓரமாக ஒரு அரண்மனை செட் போட்டு, ஒரு பாடல் காட்சியைப் படமாக்கினோம். அந்தப் பாடலையும், அந்த அரண்மனை காட்சிகளையும் பார்க்காதவர்களுக்குக் கதை புரியாது'' என்கிறார்.

ஏற்கெனவே, விஜய், ப்ரியங்கா சோப்ரா இருவரையும் வைத்து 'தமிழன்' படத்தை எடுத்த இவர், கி.மு. படத்தில் ஒரு குணசித்திர வேடத்தில் நடிக்கிறார். ஹீரோ ஆவதற்கு ஒத்திகையோ?

– ஜான் மதி

நான் அங்கே இருந்த அனைவரையும் வேடிக்கை பார்த்தேன். யாராவது ஆஸ்பத்திரியில படுத்திருக்கும்போது பார்க்க வந்தால், அந்தச் சூழ்நிலை என்னவோ போல இருக்கும்.

நேற்று இந்நேரம், இங்கே இப்படிப் படுத்துக் கிடப்பேன் என்பதை எதிர்பார்க்கவில்லை. இருபத்திநான்கு மணி நேரத்தில் எதுவெல்லாம் சாத்தியமாகிப் போகிறது? இப்படி பெட்டில் படுத்துக் கிடப்பதை மாலதி எப்படி எடுத்துக்கொள்ளப் போகிறாள்? பயந்து போவாளோ?

காலையில் வீட்டிலிருந்து புறப்பட்ட போது அடிவயிற்றில் புறப்பட்ட வலி முதல், ஒரே நேரத்தில் டிரிப்ஸ் ஊசியையும் இடுப்பில் இன்ஜெக்ஷனையும் நர்ஸ்கள் செலுத்தியது வரை, எல்லாவற்றையும் மனசுக்குள் வரிசைப்படுத்திக்கொண்டேன். மாலதி வந்ததும், அவள் கையைப் பிடித்துக்கொண்டு வரிசையாகச் சொல்ல வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன்.

ஒன்பது மணிக்குக் கண் விழித்த போது, நர்ஸ்கள் மறுபடி ஊசி போட, தயாராக இருந்தார்கள். கைலியை ஒரு நர்ஸ் விலக்கி இடுப்புக்குக் கீழே கொண்டு வந்தாள். இன்னொருத்தி ஊசியைக் குத்தினாள். வலித்தது. உதட்டைக் கடித்து பொறுத்துக்கொண்டேன்.

அவர்கள் நகர்ந்ததும் மாலதி கண்களில் பட்டாள். கண்களில் கண்ணீர் தளும்பி நிற்க... அவசரமாக என்னிடம் வந்தாள்.

''ஏங்க, தனி ரூம் கிடைக்கலியா? நேத்திலேந்து இங்கதான் இருக்கீங்களா? நர்ஸுங்க ஊசி போடறப்ப அப்படியே பின் பக்கம் தெரியுதுங்க. எல்லாரும் உங்களையே பார்க்கறாங்க...'' நா தழுதழுக்கப் பேசியவள், கைலியை இழுத்து ஒழுங்காகக் கட்டிவிட்டாள், அவசரமாக போர்வையை இழுத்துப் போர்த்திவிட்டாள்.○

அருள்வாக்கு

வாழ்க்கைத் தொல்லைகளிடையே கொஞ்சம் உல்லாசமாகப் பொழுது போக்குவது ஒரு தப்பா என்று கேட்பீர்கள். உங்களுக்குச் சொல்கிறேன். பரோபகாரமாகச் சேவை செய்தால் அதுவே பெரிய உல்லாசம் என்று தெரியும். அதுவே விளையாட்டு, அதுவே இன்பம்.

கிருஷ்ண பரமாத்மா இப்படித்தான் வெளியிலே விளையாடுவதாகத் தெரிந்தாலும், உள்ளே அத்தனையும் பரோபகார சேவைதான் செய்தான். எத்தனை பேருடைய, எத்தனை எத்தனை கஷ்டங்களை விளையாட்டாகவே போக்கடித்தான்? குன்றைத் தூக்கிப் பிடித்தது விளையாட்டு மாதிரி இருக்கும். ஆனால், கோபர்களைக் காப்பதற்கே அவ்வளவு பெரிய மலையை பாலகிருஷ்ணன் தூக்கினான். சின்னக் குழந்தை, விஷம் கக்கும் காளிங்கனின் படத்திலே நர்த்தனம் செய்தது வெளியிலே பார்த்தால் விளையாட்டு; உண்மையில், அதுவும் ஜனங்களைக் காத்து, அவர்களுக்கு நீர் நிலையை மீட்டுத் தருவதற்காகச் செய்த சேவைதான். இப்படித்தான் எத்தனையோ விளையாட்டுகள் செய்தான். அத்தனையும் சேவை. எவனைப்போல் விளையாடினவன் இல்லையோ அவனைப்போல் சேவை செய்தவனும் இல்லை என்று, கிருஷ்ண பரமாத்மாவின் உதாரணத்தில் பார்க்கிறோம். லௌகிக சேவை மட்டும் இல்லை, ஞான சேவையும் நிறையச் செய்தான். அர்ஜுனன், உத்தவர் போன்றவர்களுக்கு மகா உபதேசங்கள் செய்தான். சேவை, ஞானம், விளையாட்டு எல்லாம் அவனிடம் ஒன்றாக இருந்தன. துளி கூடப் பற்றுதல் இன்றியே இத்தனையும் செய்தான். சிரித்துக்கொண்டே சாந்தமாக இவ்வளவையும் செய்தான். அதனாலேயே அநாயாசமாகச் செய்ய முடிந்தது. நம்மிலும் சேவை செய்கிறவர்களுக்கெல்லாம் இந்தச் சிரிப்பும் சாந்தமும் எப்போதும் இருக்க வேண்டும் - தைரியம் ஊக்கம் இவற்றோடு.

- ஜகத்குரு
காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



இன்பம்

இயந்திரங்கள் இயங்குவது எப்படி? - வாண்டுமாமா, கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.200/-

நாம் அன்றாடம் பயன்படுத்தும் பல கருவிகள் எப்படி இயங்குகின்றன என்ற ரகசியங்கள் கொண்ட தொகுப்பு. பெரியோர், சிறியோர் என எவரும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் விளக்கியுள்ளார் நூலாசிரியர். பயனுள்ள தகவல்கள், விளக்கப் படங்களுடன் அமைந்திருப்பது நூலின் சிறப்பு.

சிவன்- ப.முத்துக்குமாரசுவாமி, பழனியப்பா பிரதர்ஸ், 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14. விலை ரூ.250/-

சிவன் பற்றியும் சைவ சமயம் பற்றியும் விளக்கும் நூல். சிவனின் பல வடிவங்கள், புராணக் கூறுகள், பிரதோஷ வழிபாடு, சிவத் தலங்கள், 'லிங்கம்' என்பதன் பொருள் என்ன, லிங்கத்தின் பரிணாம வளர்ச்சி, சைவ சமயத்தின் போதகர்கள்... என தெரிந்து கொள்ள வேண்டிய அரிய செய்திகள் வழங்கப்பட்டுள்ளன.



ஞான ஒளி!

உழவுக்கும் உண்டு வரலாறு! - டாக்டர் கோ.நம்மாழ்வார், விகடன் பிரசுரம், 757, அண்ணாசாலை, சென்னை - 02. விலை ரூ.45/-

பிரபல இதழில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு. இயற்கை வழி வேளாண்மையே நீடித்த வேளாண்மைக்கு அடிகோலும் எனும் தம் ஆய்வுக் கருத்தை ஆணித்தரமாகப் பதிவு செய்துள்ளார் நூலாசிரியர். இயற்கை, சமூகம், வரலாறு, பொருளாதாரம்... என அனைத்து துறைகளிலும் நுழைந்து, ஆச்சர்யமூட்டும் பல விஷயங்களை எடுத்துரைக்கிறார். வருங்கால சந்ததிக்காக இவர் சமர்ப்பிக்கும் ஞான ஒளி விளக்கு இந்நூல்!

கவிதை என்னும் களம் - சோலை. இசைக்குயில், உதயகண்ணன், பு.எண்.10, கல்யாணசுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை - 11. விலை ரூ.30/-

ஹைக்கூவில் வண்ணத்துப்பூச்சி, அழகியல், சூரியன், தலித்தியல்... என பல தலைப்புகளில் தொகுக்கப்பட்டுள்ளன ஹைக்கூ கவிதைகள். ஓஷோ, அறிவுமதி, நா.முத்துக்குமார், அமுதபாரதி... என பல கவிஞர்களின் கருத்துகளையும் எடுத்துக் காட்டியுள்ளார் நூலாசிரியர்.

- மித்ரா



சினிமாவுல புதுப் புது முயற்சியெல்லாம் பண்றவங்க இருக்காங்க. அடையாளமே தெரியாத அளவுக்குத் தோற்றத்தை மாற்றி நடிக்கறவங்களும் இருக்காங்க. ஆனா, விஜய் அப்படி எதுவும் முயற்சி பண்றது இல்ல. 'விஜய் ஏன் கெட்டப்பை மாத்தாம நடிக்கறார்?'ன்னு நிறையபேர் என்கிட்ட கேட்டிருக்காங்க. அதுக்குக் காரணம் இருக்கு.

விஜய், ஃபிலிம் இண்டஸ்ட்ரீக்கு வர்றப்போவே, அவனை ஒரு கமர்ஷியல் ஹீரோவா அறிமுகப்படுத்தியிருந்தார் என் கணவர். அதை மாத்த முடியல. விஜய்யை நம்பி இருக்கற புரொட்யூசர், டிஸ்ட்ரிபியூட்டர், தியேட்டர் உரிமையாளர்கள் எல்லாருக்கும் லாபம் கிடைக்கணும்; நல்லா இருக்கணுங்கற ஒரே நோக்கத்துலதான் விஜய் கமர்ஷியல் ஹீரோவாவே நடிச்சுக்கிட்டு இருக்கான்.

ஆரம்பத்துல பத்துப் படங்கள்ல நடிச்சதுக்கு அப்புறம், விஜய் தன்னோட ரோல் மாடலா எடுத்துக்கிட்டது நடிகர் ரஜினி சாரைதான். வாழ்க்கையிலயும் ரஜினி சார்தான் அவனுக்கு முன்மாதிரி. ரொம்ப அடக்கமா, பணிவா இருக்கறது, நேரத்துக்கு ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு வர்றது, போறது எல்லாத்துலயும் அவன் ரஜினி சாரைத் தான் ஃபாலோ பண்ணினான்.



ஷோபா சந்திரசேகர்

ரஜினி சார் தன்னோட படங்கள்ல பெரும்

பாலும் கெட்டப்பை மாத்தறதில்ல. வயசான வேஷத்துல அவர் வந்தாக் கூட அதுலயும் அவரோட முத்திரை பளிச்சுன்னு தெரியும். அவர் எந்த வேஷம் போட்டாலும் ரஜினி, ரஜினியாத்தான் இருப்பாரு. அதுதான் அவரோட ரசிகர்களுக்குப் பிடிக்கும். என் கணவர், விஜய்யை தமிழ் சினிமாவுல அறிமுகப் படுத்தினப்போவே இதை மனசுல வைச்சு கிட்டுதான் அறிமுகப்படுத்தினார்.



அதனாலதான் முதல்ல விஜய் சினிமா ஃபீல்டுக்கு வரட்டும், அதுவும் கமர்ஷியல் ஹீரோவாவே இருக்கட்டும்னு தனியா ஒரு ரோடு போட்டுக் கொடுத்தார்.

சின்ன வயசுலருந்தே ரஜினி சாரோட படம் எப்போ ரிலீஸ் ஆனாலும், முதல் நாள் முதல் ஷோ பாத்துடுவான். இப்பக் கூட என்னதான் பிரிவ்யூல ரஜினி படத்தைப் பாத்துட்டாலும், ஏதாவது ஒரு தியேட்டர்ல போய், ரசிகர்களோட ரசிகனா உக்காந்து, முதல் ஷோ பாத்தாதான் அவனுக்குத் திருப்தியா இருக்கும்.

அது மட்டுமில்ல. ரஜினிபத்தி எந்தப் பத்திரிகையில் நியூஸ் வந்தாலும் படிச்சுடு வான். அவரோட வாழ்க்கை வரலாறு ஒரு தினசரில வெளிவந்தது. காலையில எழுந்து முதல் காரியமா அதைப் படிச்சுட்டுதான் வேற வேலை பாப்பான். அவர் மேல அவனுக்கு அப்படி ஒரு ஈடுபாடு. இப்போ சமீபத்துல அவரோட வாழ்க்கை வரலாறு ஒரு புத்தகமா வெளிவந்தது. அந்த புக் ரிலீஸ் ஃபங்ஷனுக்கு அவனால வர முடியல; நான் போயிருந்தேன். 'மறக்காம அந்தப் புத்தகத்தை வாங்கிட்டு வந்துடும்மா'ன்னு பத்துத் தடவை சொல்லிட்டான். நான் அந்தப் புத்தகத்தை வாங்கிட்டு வந்து குடுத்தேன். அதை ஒரே நாள்ல படிச்சு முடிச்சுட்டான்.

'**வி**ஜய் - அஜித் உறவு எப்படி?' இந்தக் கேள்வியும் என்கிட்ட நிறைய பேர் கேக்கறாங்க. உண்மையிலேயே அவங்க ரெண்டு பேரும் ரொம்ப நெருக்கமான நண்பர்கள். ஆரம்ப நாட்கள்ல இருந்து, இப்போ வரைக்கும். அவங்களுக்குள்ள பிரச்னைன்னு சொல்றதெல்லாம் உண்மையில்லை.

அஜித்தையும் விஜய்யையும் வைச்சு டைரக்ட் பண்ணின இயக்குநர்கள் அவங்களோட ஆதாயத்துக்காக, ஏதோ சில வசனங்களையும் பாடல் வரிகளையும் படத்துல போட்டு, அதை ரெண்டு பேருமே தெரியாத்தனமாப் பேசி, அதை ரசிகர்கள் தவறாப் புரிஞ்சுகிட்டு பிரச்னையாயிடுச்சு.

'ராஜாவின் பார்வையிலே' படத்துல ரெண்டு பேரும் சேந்து நடிச்ச அத்தனை நாள்லயும், ரெண்டு பேருக்குமே நான்தான் சாப்பாடு கொண்டு போய்க் குடுப்பேன். சாப்பிட்டுட்டு, ரொம்ப நல்லாருந்துச்சு ஆன்ட்டி'ன்னு ஒவ்வொரு உணவு வகையையும் சொல்லிச் சொல்லிப் பாராட்டுவார் அஜித்.

அதுக்கு அப்புறம் என்னை எங்க பாத்

விஜய்யின் காதல்

தாலும், 'அந்தச் சாப்பாட்டை மறக்கவே முடியாது'ன்னு சொல்லுவாரு. இதை 'குஷி' படத்தோட ஆடியோ ரிலீஸ் ஃபங்ஷன் மேடையில ரொம்ப

என்ன பரிசு?

- சரியான விடைகளுடன் வரும் முதல் 10 கூப்பன்களுக்கு விஜய் படம் பொறித்த டி-ஷர்ட்...
- குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 100 அதிர்ஷ்டசாலிகளுக்கு விஜய் கையெழுத்திட்ட ஸ்டில்ஸ்...



நெகிழ்ச்சியா குறிப்பிட்டார். அது இன்னிக்கும் என் மனசுல நிறைவா இருக்கு.

விஜய்யோட முதல் குழந்தை ஜேசன் சஞ்சய். அப்போ சங்கீதா டெலிவரிக்காக லண்டன் போயிருந்தது. சஞ்சய் பிறக்கறப்போ, விஜய், நான், என் கணவர் எல்லாருமே லண்டன்லதான் இருந்தோம். சஞ்சய் பிறந்த செய்தி கேட்டதும் விஜய்யோட முகத்தைப் பாக்கணுமே! யப்பா! அவ்வளவு சந்தோஷமா இருந்து நான் பாத்ததே கிடையாது. அப்போ மட்டும் இல்ல. அவனுக்குப் பிள்ளைங்களை நினைச்சாலே முகம் பூ மாதிரி மலர்ந்துடும்.

விஜய் இன்னிக்கு ரொம்பப் பிரபலமான ஹீரோ. ஆனாலும் ஷூட்டிங் முடிஞ்சு வீட்ல கால் வைச்ச உடனே, தான் ஒரு நடிகன்ங்கறதையே மறந்துடுவான். பிள்ளைங்களைத் தேடித்தான் ஓடுவான். தோள்லருந்து அவங்களை இறக்கவே மாட்டான்.

ஷூட்டிங் இல்லாத நேரத்துல அவனோட இன்னொரு முக்கியமான பொழுது போக்கு, சினிமா பாக்கறது. ஆங்கிலம், தமிழ், தெலுங்குன்னு ஒரு படத்தை விடமாட்டான். சினிமா மேல அவனுக்கு அப்படி ஒரு காதல்.

(தொடரும்)

எழுத்து வடிவம்:

பாலு சத்யா



ஹலோ வாசகர்களே!

ஷோபா சந்திரசேகர் எழுதற, 'என் செல்ல தளபதி' தொடர் அசத்தலா இருக்கு தானே? நீங்களும் சும்மா அசத்தறீங்க இல்ல. போன வாரப் போட்டிக்கு மளமளன்னு என்ட்ரீஸ் குவியுது!

- விஜய் வின்னர்ஸ் - 12 தொடர் சங்கிலிப் போட்டிக்கான முடிவும், இந்த வார கூப்பனும் பக்கம்-70ல் உள்ளன.
- அடுத்த வாரம் பம்பர் பரிசுப் போட்டியோட அதிரடிப் போட்டி முடியப் போகுது. வியப்பான மெகா பரிசுகள் காத்திருக்கு!
- நீங்க செய்ய வேண்டியது ரொம்ப சிம்பிள்! ஒவ்வொரு வாரமும் ஐந்து கேள்விகள் கேட்போம். அதுல ஒண்ணு தொடரிலிருந்து வரும். சரியான விடைகளை 'டிக்' அடிச்சு கூப்பனையும் நிரப்பி, அந்தப் பக்கத்தைக் கத்தரிச்சு அனுப்பணும்.
- ஒருவரே எத்தனை கூப்பன் வேணும்னாலும் அனுப்பலாம். ஆனா ஜெராக்ஸ் கூடாது. எவ்வளவு வேகமா அனுப்பறீங்களோ அந்த அளவுக்குப் பரிசு பெற சான்ஸ் இருக்கு!
- வெய்ட்! பதினாறாவது வார பம்பர் போட்டியில நீங்க கலந்துக்கணும்னா 'விஜய்' ஸ்டில் போட்ட 'தொடர் சங்கிலி கூப்பனை' பத்திரமா சேகரிக்கணும். (இந்த வாரம்-69ஆம் பக்கம் இருக்கு)
- பதினாறாவது வார பம்பர் பரிசு போட்டியோடு முதல் 15 போட்டிகளுக்கான தொடர் சங்கிலி கூப்பன்கள் அனைத்தையும் இணைச்சு அனுப்பணும். ஒரு கூப்பனை 'மிஸ்' பண்ணினாலும், நீங்க அந்த வியப்பான பரிசுகளை 'மிஸ்' பண்ணிடுவீங்க.
- போட்டி நீட்டிக்கப்படும்னு தெரியாம சிலர் முன்கூட்டியே 13 வார கூப்பன்களை அனுப்பியிருக்கீங்க. பத்திரமா வைச்சிருக்கோம். 14 முதல் 16 வரையிலான கூப்பன்களை தனியா அனுப்புங்க, சேர்த்துக்கறோம்.
- போட்டி குறித்த முடிவுகளில் ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.



விஜய் வின்னர்ஸ் - 12

தொடர் சங்கிலிப் போட்டி பரிசு பெற்றோர் விவரம்...

1. வே.தனசேகர், கும்மிடிப்பூண்டி 2. ச.இல.சுந்தரி, அவிநாசி 3. எம்.கலைவாணி, திருவண்ணாமலை 4. ஏ.ஆர்.வலம்புரிநாகராஜன், ஈரோடு 5. சி.பி.செந்தில்குமார், ஈரோடு 6. வ.விக்னேஷ், திருச்சி 7. எஸ்.மணிவண்ணன், கும்பகோணம் 8. கே.மாதேஸ் வரன், தர்மபுரி 9. கோ.நாராயணன், காஞ்சிபுரம் 10. பி.மினி, விருதுநகர்

* முதல் பத்து கூப்பன்களை அனுப்பிய மேற்கண்டோருக்கு விஜய் படம் பொறித்த டி-ஷர்ட் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.
* குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 அதிர்ஷ்டசாலிகளுக்கு விஜய் கையெழுத்திட்ட ஸ்டில்ஸ் அனுப்பி வைக்கப்படும்.

இந்த வாரக் கேள்விகள்!

கடைசி தேதி : 28.08.2008

1. அஜித் கலந்து கொண்ட கேசட் ரிலீஸ் ஃபங்க்ஷன் எந்தப் படத்துக்குரியது?
   ☐ வாலி ☐ குஷி
2. 'ப்ரியமானவளே' படத்தில் விஜய்யின் ஜோடி?
   ☐ சிம்ரன் ☐ த்ரிஷா
3. சிவகாசி படத்தின் இயக்குநர்?
   ☐ ரமணா ☐ பேரரசு
4. 'என்னைத் தாலாட்ட வருவாளா' பாடலில் நடித்த நடிகை?
   ☐ ஷாலினி ☐ ரம்பா
5. 'நினைத்தேன் வந்தாய்' படத்தில் விஜய் பாத்திரம்?
   ☐ ஸ்கூல் டீச்சர் ☐ மியூசிக் டீச்சர்

பெயர் : .... வயது : ....

முகவரி : ....

....

செல் : .... இ.மெயில் : ....

போட்டி கூப்பன் அனுப்ப வேண்டிய முகவரி :

விஜய் வின்னர்ஸ் போட்டி - 15,

கல்கி, 47-NP, ஜவாஹர்லால் நேரு ரோடு,

ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032



“குண்டூசியைப் பத்திரப்படுத்து!”

காந்திஜியிடம் காரியதரிசியாகப் பணிபுரிந்த கல்யாணம், தேனாம்பேட்டையில் வசிக்கிறார்.

வாகனங்களின் இரைச்சலும் கார்ப் புகையும் மண்டிய தேனாம்பேட்டையில், அமைதித் தீவாகக் காட்சியளிக்கிறது அவரது வீடு.

அழைப்பு மணியை அழுத்தினால் உள்ளே 'அல்லாஹோ அக்பர்!' என்று மணியோசை ஒலிக்கிறது.

கல்யாணம் நமது ஆச்சர்யத்தைப் பார்த்துவிட்டு, ''காந்திஜியிடம் பணி புரிந்தேன் என்பதற்கு ஓர் அர்த்தம் வேண்டாமா?'' என்கிறார் புன்னகையுடன்.

காலையில் மூன்றரை மணிக்கே எழுந்துகொள்ளும் கல்யாணம், வீட்டுக்கு முன்புள்ள சாலையைப் பெருக்கிச் சுத்தப் படுத்துகிறார். பிறகு தோட்டத்தைப் பெருக்குகிறார். வீட்டைப் பெருக்குகிறார். வீடு முழுவதும் அப்படி ஒரு சுத்தம்.

''கடவுளுக்கு அடுத்தபடியாக சுத்தம் என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. சுத்தத்துக்கு அடுத்தபடிதான் கடவுள்!'' என்கிறார்.

கல்யாணத்தின் வீடு ஒரு 'மினி காந்தி மியூசியம்' போல் இருக்கிறது. காந்திஜி சுடப்பட்டு இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னால், தமது மன ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்த வரிகளை, பிரம்மாண்டமான டிஜிட்டல் பேனரில் அச்சிட்டு, பார்வைக்கு வைத்திருக்கிறார்!

''காந்திஜியிடம் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்தது யார் தெரியுமோ? அவரது மகன் தேவதாஸ் காந்திதான். நான் சமூக சேவையில் காட்டிய ஆர்வத்தைப் பார்த்துவிட்டு அவராகவே, 'காந்தி

- காந்திஜி பி.ஏ., கல்யாணம்

ஆசிரமத்தில் பணிபுரிய விருப்பமா?' என்று கேட்டார்; நானும் சம்மதித்தேன்.

சேவா கிராம ஆசிரமத்துக்கு நான் வந்து சேர்ந்தபோது, காந்தி அங்கே இல்லை. அவரை ஆகாகான் மாளிகையில் சிறை வைத்திருப்பதாகச் சொன்னார்கள். ஆசிரமத்தில் வேலைக்காரர்கள் கிடையாது. யாரையும் சார்ந்திருக்கக்கூடாது என்பது ஆசிரமத்தில் விதி. இன்றளவும் அதைப் பின்பற்றுகிறேன்'' என்கிறார்.


நீங்கள் பார்த்த சேவா கிராம ஆசிரமம் எப்படி இருந்தது?

''எல்லாம் மண்குடிசைகள்தான் மின்சாரம் கிடையாது; போதுமான தண்ணீர் வசதி கிடையாது. இந்தியா முழுவதற்குமான மாதிரி கிராமமாக அதை காந்திஜி உருவாக்கினார். காந்திஜி கனவு கண்ட பஞ்சாயத் ராஜ் இதுதான். முதல்நாள் ஆசிரமத்துக்குப் போனதே ஒரு விசித்திரமான அனுபவம்.

ஆசிரமத்தில் எனக்காக ஒதுக்கியிருந்த மண் குடிசைக்கு அழைத்துப் போனார் ஒருவர். கதவைத் திறந்தேன். உள்ளே மண் தரையில் பூரான். ஓடிப்போய் செருப்பை எடுத்து வந்து, ஒரு போடு போட்டு அதை எறிந்துவிட்டு வந்தேன். கூடவந்த ஆசிரமவாசி, 'ஐயோ! ஆசிரமத்தில் அஹிம்சைதான் கடைப்பிடிக்க வேண்டும்! பூரான், தேள் எல்லாம் பிடிச்சு வெளியே விட்டுடணும்! என்றார்.''

ஆசிரமத்தில் என்ன வேலை செய்தீர்கள்?

''காந்திஜிக்கு உலகம் பூராவிலிருந்தும் பல மொழிகளில் கடிதங்கள் வரும். அவற்றையெல்லாம் மொழிவாரியாகப் பிரித்துக் கட்டிவைத்து, பதில் போட வேண்டிய கடிதங்களைத் தனியாக எடுத்து வைப்பேன். காந்திஜியை விடுதலை செய்துவிட்டார்கள் என்ற செய்தி கிடைத்தது. அவர் இயற்கை வைத்திய சிகிச்சைக்காக பம்பாயில் சாந்தகுமார் மொரார்ஜி என்பவர் வீட்டில் தங்கியிருந்தார். ஆசிரமத்திலிருந்து நாங்கள் சில பேர் பம்பாய்க்குப் போனோம். முதல் தடவையாக காந்திஜியைப் பார்த்தேன். இடுப்பில் துண்டைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். குளிக்கப் போகிறார் போலிருக்கே; அப்புறம் வந்திருக்கலாமோ என்று நினைத்தேன். யாரோ காந்திஜியிடம் என்னை அறிமுகப்படுத்தினார்கள். மெல்லப் பேசினார். என்னமோ தஸ்புஸ்னு... எனக்கு ஒண்ணுமே புரியலே...



''டைப்பிங் தெரியுமா?'' என்று கேட்டார் காந்திஜி.

''ஒரு விரலால்தான் டைப் அடிப்பேன்.''

''சரி, இப்போ எவ்வளவு சம்பளம் வாங்குகிறாய்?''

''250 ரூபாய்.''

''ஓ! அவ்வளவு கொடுக்க என்னால் முடியாது; 60 ரூபாய்தான்!''

''அதுகூட வேண்டாம்!''

நான்கு மாதம் கழித்துதான் சேவா கிராமத்துக்கு காந்திஜி வந்தார். வந்த உடனே கடிதங்களை 'டிக்டேட்' பண்ண ஆரம்பித்


சுட்டார். அவர் பேசுவதும் புரியவில்லை. நிறைய தப்பு பண்ணினேன். அவருக்குக் கோபமே வராதது, ஆச்சர்யமாக இருந்தது. பல்லைக் கடித்தால் அதுகூட 'வயலன்ஸ்'தான் என்பார் காந்திஜி.''

காந்திஜி மறைவுக்குப் பின் ராஜாஜியிடம் சிறிது காலம் பணிபுரிந்திருக்கிறார் கல்யாணம். அதைப் பற்றி ஒரு சுவையான நினைவு.

''ராஜாஜி அப்போது முதலமைச்சர். சலுகை கோரும் கடிதங்கள் ஏராளமாக வரும். 'இதையெல்லாம் என்ன செய்வது?' என்று கேட்டேன். 'இவற்றின் மீது ஒரு நடவடிக்கையும் வேண்டாம். தூரப் போடு. அந்தக் கடிதங்களில் ஒரு குண்டூசி இருக்கும். அதை மட்டும் பத்திரப் படுத்தி வை; பயன்படும்' என்றார்.''

கல்யாணத்தின் பேச்சில் ஒரே ஒரு முறைதான் கோபம் எட்டிப் பார்த்தது.

''இந்த எம்.எல்.ஏ., எம்.பி.க்கள், அமைச்சர்கள் சம்பளத்தை, சலுகைகளை எல்லாம் உயர்த்தாதீர்கள். மக்களின் பிரதிநிதிகளான இவர்கள், வந்திருப்பது மக்கள் சேவைக்கு. இவர்களுக்கு ஏன் இவ்வளவு சம்பளம்?'' என்று கேட்கிறார் காந்திஜி. ''கிரிக்கெட் வீரர்களுக்கும் லட்சம் லட்சமாய்க் கொடுப்பதை நிறுத்துங்கள். ஏழை மக்களின் வரிப் பணத்தை இப்படியெல்லாம் வீணாக்கக் கூடாது'' என்று சொல்லும் கல்யாணம், சுதந்திரப் போராட்ட தியாகி பென்ஷனை வேண்டாமென்று சொல்லிவிட்டார்.



காந்திஜி, தாம் இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னால், தம் மன ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்த வரிகள் இவை.



✱ காந்திஜியுடன்...



✱ சுத்தப்படுத்தும் கல்யாணம்

''சுதந்திரம் பெற்ற சமயத்தில் இளைஞர்களாக இருந்தவர்களுக்கு ஏன் பென்ஷன் கொடுக்க வேண்டும்? அவர்கள் வேலைக்குப் போயிருக்கலாமே!'' என்கிறார் கல்யாணம்.

– கிருஷ்ண காந்தன்

படங்கள்: **அருண் சுதாதரன்**



17

கண்ணனைத் தேடி...

வைணவத் திருத்தலங்கள் 108ல், திருக்கோட்டியூர் ஒரு முக்கியமான திவ்ய தேசம். ஆழ்வார்களுடைய நாலாயிர திவ்யப் பிரபந்தங்கள் இருக்கின்றன அல்லவா, அவற்றுள் முதலில் ஓதப்படுவது திருப்பல்லாண்டு என்கிற திவ்ய பிரபந்தம்தான் - பெரியாழ்வார் -

பல்லாண்டு பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டு
பல கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள்
மணிவண்ணா! உன்
சேவடி செவ்வி திருக்காப்பு

என்று எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடி வாழ்த்தும் பிரபந்தம் இது. இவரே பெரியாழ்வார் திருமொழி என்ற திவ்யப் பிரபந்தத்தையும் பாடியுள்ளார். இந்தப் பெரியாழ்வார் திருமொழியினுடைய முதல் பாசுரமே,

வண்ண மாடங்கள் சூழ்
திருக்கோட்டியூர்
கண்ணன் கேசவன் நம்பி
பிறந்தினில்,
எண்ணெய் சுண்ணம் எதிரெதிர்
தூவிடக்
கண்ணன் முற்றம் கலந்து அளறு
ஆயிற்றே!

என்று அழகாக விளங்குகிறது. கண்ணன் பிறந்த நாளைக் கொண்டாடும் வர்ணனையான இந்தக் காட்சி, திருக்கோட்டியூர் என்கிற திவ்யதேசத்தில் நடைபெறுவதை விவரிக்கிறார் பெரியாழ்வார். அதுவும் எப்படிப்பட்ட திருக்கோட்டியூர்...? 'வண்ணமாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்'! பெருமாள் எழுந்தருளும் திவ்யதேசம் வளம் சூழ்ந்த

தாகத்தானே இருக்கும்? அப்படித் திருக்கோஷ்டியூரும் வண்ணமாடங்கள் சூழ்ந்ததாக இருக்கிறது. அந்தத் திருக்கோட்டியூர் அல்லது திருக்கோஷ்டியூர் என்கிற திவ்ய தேசத்துக்குத்தான் நாம் இப்போது செல்கிறோம். மதுரையிலிருந்து சிவகங்கை செல்லும் சாலையில் திருப்பத்தூருக்கு 8 கி.மீ.தென்மேற்கே உள்ளது திருக்கோட்டியூர்.

திருக்கோஷ்டியூரில், பெரியாழ்வார் பாடிய அதே வண்ணமாடங்கள் இன்று இல்லாவிட்டாலும் அதிசயமான 'கூட கோபுரம்' இன்றும் இருக்கிறது. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்று

நம்பியின் நிபந்தனை!

சொல்வதுண்டு; ஆனால், திருக்கோட்டியூர் கோபுரத்துக்கு அந்தச் சிறப்புக்கும் மேலான ஒரு வரலாற்றுச் சிறப்பும் இருக்கிறது. அதை அறியும் முன் இந்த திவ்ய தேசத்துக்குத் திருக்கோட்டியூர் என்கிற பெயர் எவ்வாறு அமைந்தது என்றும் இதர சிறப்புகளையும் பார்ப்போம்.

பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும் ஒரு சமயம் கூடி, விரோதிகளை எப்படியெப்படியெல்லாம் ஒழித்து அடியார்களைக் காக்கலாம் என்று ஆலோசனை செய்தார்கள். அப்படி அவர்கள் கோஷ்டியாகக் கூடி ஆலோசனை செய்த இடம் என்பதாலே இந்த திவ்ய தேசத்துக்குத் திருக்கோஷ்டியூர் என்று பெயர்.

இந்த திவ்ய தேசத்து எம்பெருமான் சயனத் திருக்கோலத்தில் ஸேவை சாதிக்கிறார். ஸௌம்ய நாராயண பெருமாள், ஸௌம்ய தாமோதர பெருமாள் என்றும் திருநாமம். **ஸௌம்யன்** என்று நாம் வைத்துக் கொள்வோம். அதே எம்பெருமானுக்கு மாதவன் என்றும் திருநாமம்.

இதைப் பற்றி ஆழ்வார், தமது பாசுரத்தில் சொல்கிறபோது,

திருக்கோட்டியூர் நரகநாசனை
நாவிற்கொண்டு அழையாத
மானிட சாதியர்
பருகு நீரும் உடுக்கும் கூறையும்
பாவம் செய்தன

என்று தெரிவிக்கிறார்! திருக்கோட்டியூர் ஸௌம்யனின்



வேளுக்குடி ஸ்ரீ க்ருஷ்ணன் சுவாமிகள்


நாமத்தைச் சொல்லாதவர்கள் பாவம் செய்தவர்களாம்! அவர்கள் உடுத்தும் உடுப்பு, வஸ்திரம் பாவம் செய்ததாகிறதாம்! இந்தத் திருத்தலத்தின் ஏற்றத்தையும், இப் பெருமானின் ஏற்றத்தையும் இதைவிட அழுத்தந்திருத்தமாகச் சொல்ல முடியாது!

கதம்ப மஹரிஷி என்பவருக்காக இந்த திவ்ய தேசத்தில் ஸேவை சாதித்தார் எம்பெருமான்.

தாயார் பெயர் திருமாமகள் நாச்சியார்.

இப்போது கோபுரத்தின் சிறப்புக்கு வருவோம். நமது நாட்டில் அவதரித்த மஹா புருஷர்கள் மூவர் - ஆதிசங்கர பகவத் பாதர், ராமானுஜர், மத்வாச்சார்யர். இந்த மூவருமே ஸநாதன தர்ம நெறிகளை ஸ்தாபித்தார்கள்; பகவத் கீதைக்கு இம் மூவருமே உரை எழுதினார்கள். இவர்களுள் ஸ்ரீமத் ராமானுஜர் பிறந்தது 1017 ஆம் ஆண்டு. அவர் 1137 வரை, 120 ஆண்டுகள் இப் பூவுலகில் வாழ்ந்தார். இந்த ஸ்வாமிக்கு, கீதையினுடைய செம்மைப் பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற பேராவல் ஏற்பட்டது.

கீதையின் 18வது அத்தியாயம் 66வது ச்லோகம் 'ஸர்வதர்மான் பரித்யஜ்ய' என்று ஆரம்பிக்கிறது. 'என் திருவடிகளைப் பற்றுபவர்களுக்கு ஒரு கவலையும் இராது' என்று கண்ணன் உறுதியளிக்கக்கூடிய ச்லோகம். இதனை சரம ச்லோகம் என்று கொண்டாடுவார்கள். சரமம் என்றால் இறுதி. பகவானை அடைய இறுதியான வழி சரணாகதி என்று உணர்த்துகிறபடியால் இது சரம ச்லோகம் என்று போற்றப்படுகிறது. ராமானுஜருக்கு, இந்த ச்லோகத்தின் அர்த்தத்தையும் நாராயண மந்திரத்தின் பொருளையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆசை வந்தது. இவற்றைச் சொல்லக்கூடியவர் திருக்கோட்டியூர் நம்பிகள் தான் என்று கேள்விப்பட்டார். திருவரங்கத்திலிருந்து கால்நடையாகவே திருக்கோட்டியூருக்கு வந்து சேர்ந்தார். இவ்வூர் எல்





லையை அடைந்ததும், ''திருக்கோட்டியூர் நம்பிகளுடைய திருமாளிகை எங்கே இருக்கிறது?'' என்று விசாரித்தார். ''அதோ இருக்கிறது பாருங்கள்'' என்று ஊர்க்காரர்கள் கைகாட்டினார்கள். அவ்வளவுதான், எந்த இடத்திலே வாசலில் நின்று கேட்டாரோ, அந்த இடத்திலேயே கீழே விழுந்து நமஸ்கரித்தார். அப்படி நமஸ்கரித்தபோது, தம் தலை எவ்விடத்தில் பட்டதோ அவ்விடத்தில் நின்று மீண்டும் நம்பியின் வீட்டை நோக்கி நமஸ்கரித்தார். - இப்படியே ஊர்க்கோடியிலிருந்து திருக்கோட்டியூர் நம்பியினுடைய இல்லம் வரை ஸேவித்து ஸேவித்து, தண்டம் சமர்ப்பித்துக்கொண்டே சென்றார்!

இதிலிருந்து இரண்டு விஷயங்களை நாம் தெரிந்துகொள்ள வேண்டும் - திருக்கோட்டியூர் நம்பியுடைய பெருமையையும் தெரிந்துகொள்ள வேண்டும், அவரைக் காண வந்த ராமானுஜருடைய பெருமையையும் தெரிந்துகொள்ள வேண்டும்!

இவற்றோடு திருக்கோட்டியூர் பெருமையும் நமக்குப் புலனாகிறது - நம்பி போன்றவர் வாழ்ந்த ஊர் என்பதோடு ராமானுஜர் திருமேனி பட்டுப்பட்டு பெருமையுற்ற ஸ்தலம்!

சரி, ராமானுஜர், நம்பியைச் சந்தித்த பிறகு என்னவாயிற்று? ''அடியேன் வந்திருக்கிறேன். சரம ச்லோகத்தின் பொருளை எனக்கு உரைக்க வேண்டும். மேலும் நாராயண மந்திர உபதேசமும் செய்விக்க வேண்டும்'' என்று நம்பியிடம் கேட்டுக் கொண்டார் ராமானுஜர்.

''நீர் பக்குவம் அடைந்தால்தான் சொல்ல முடியும்; உமக்கு இன்னின்ன குணங்கள் இன்னும் ஏற்படவில்லை. நீர் இன்னும் உம்மை உயர்த்திக் கொண்டு வாரும்.''

ஆனால், நம்பியோ உடனடியாக இசைவதாக இல்லை. ''நீர் பக்குவம் அடைந்தால்தான் சொல்ல முடியும்; உமக்கு இன்னின்ன குணங்கள் இன்னும் ஏற்படவில்லை. நீர் இன்னும் உம்மை உயர்த்திக்கொண்டு வாரும்'' என்று கூறி, ராமானுஜரைத் திருப்பியனுப்பி விட்டார்!

ஒரு தடவையா, இரண்டு தடவையா, நான்கு தடவையா...? பல தடவைகள் ராமானுஜர் திரும்பத் திரும்ப திருக்கோஷ்டியூர் நம்பியிடம் போனபோதும் இதே பதில்தான் கிடைத்தது.

கடைசியாக, பதினெட்டாவது தடவை ராமானுஜர் திருக்கோஷ்டியூர் நம்பியைத் தேடிப் போனார். இந்த முறை நம்பிகள்

மனம் கனிந்து அஷ்டாக்ஷர திருமந்திரத்தின் ஏற்றத்தையும் சரம ச்லோகத்தினுடைய பொருளையும் ராமானுஜருக்கு உபதேசித்தார். அதை ராமானுஜர் கேட்டுக்கொண்டார்.

மேற்கொண்டு திருக்கோட்டியூர் நம்பிகள் சொன்னார்: ''நீ யாருக்கேனும் இந்த அர்த்தத்தைச் சொல்ல வேண்டுமென்றால், நான் எவ்வளவு உன்னைக் கஷ்டப்படுத்தி விட்டுக் கொடுத்தேனோ, அதன்படி தேர்ந்த சீடர்களுக்கு மட்டுமே, பக்குவப்படும்வரை காத்திருந்து சொல்ல வேண்டும். மற்றவர்களுக்குச் சொல்லக்கூடாது'' என்று விதித்தார்! ராமானுஜரும் இதற்கு இசைந்தார்.



✱ நம்பியின் வீடு உள்ள வீதி...

ஆனால் நடந்ததுதான் வேறு. அங்கேயிருந்து புறப்பட்டு வந்தவர், நேரே திருக்கோட்டியூர் சௌம்யநாராயண பெருமாள் ஆலயத்துக்கு வந்தார். அதன் கோபுரம் நெடிதுயர்ந்தது - அஷ்டாங்க விமானம் என்று சொல்வார்கள். விமானத்திடம் வந்து நமஸ்கரித்தார் ராமானுஜர். அந்த விமானத்தின் பக்கத்திலேயே நின்றுகொண்டு, ஓரளவு விஷயம் தெரிந்து, ஆசையும் உள்ளவர்களையெல்லாம் அழைத்தார். அவர்கள் அனைவருக்கும் மிக எளிதாக பகவத்கீதை சரம ச்லோகத்தின் அர்த்தத்தைச் சொல்லி விட்டார்!

இதைக் கேள்விப்பட்ட திருக்கோஷ்டியூர் நம்பிகள், தம் இல்லத்திலிருந்து வேகமாக வெளியே வந்தார். ''ராமானுஜரே! இதற்காகவா உமக்கு இவ்வளவையும் சொல்லிக் கொடுத்தேன்? நான் எவ்வளவோ சொல்லியும், நீர் விதியை மீறிவிட்டீர். குருவின் சொல்லை மீறினால் நரகம் கிடைக்கும் என்பது உமக்குத் தெரியாதா?'' என்று கடிந்துகொண்டார்.

ராமானுஜர் அவர் காலில் விழுந்து நமஸ்கரித்து மன்னிப்புக் கேட்டார். ''நன்றாகத் தெரியும். ஆயினும், நான் ஒருத்தன் நரகத்துக்குப் போனாலும் இவர்கள் இத்தனை பேருக்கும் முக்தி கிடைக்கும் என்பதால், அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறேன்'' என்றார்.

அப்போதுதான் உதித்தது திருக்கோட்டியூர் நம்பிக்கு. 'இவரன்றோ ஜகதாசார்யன்! இவரல்லவோ எம்பெருமானார்!' என்று ராமானுஜரை ஆரத் தழுவிக்கொண்டு எம்பெருமானார் என்ற பட்டத்தையும் அளித்தார்.

இராமானுஜர், ''திருக்கோட்டியூர் நம்பிகளுடைய திருமாளிகை எங்கே இருக்கிறது என்று விசாரித்தார்.''

அப்பேர்ப்பட்ட மகத்தான திவ்யதேசம் திருக்கோட்டியூர்! ஸ்ரீமத் ராமானுஜர் உபதேசம் பெற்ற இடம்; அதனை ஊரறியச் சொல்லி, பட்டமும் பெற்ற தலம். இதன் பெருமையை மேலும் சற்று பார்ப்போம் - அடுத்த வாரம்.

(தேடுவோம்)

படங்கள்: **ஸ்ரீஹரி**

சித்திரம்: **வேதா**

சமாதானம்

சீதாராம்

"எனக்குக் கொட்டை வேண்டாம்! பூர்ணிமா நீயே எடுத்துக்கோ!"

"எனக்கும் வேண்டாம் ராஜா! நீயே எடுத்துக்கோ!"

மாம்பழச் சண்டை குழந்தைகளிடம் தொடங்கியிருந்தது.

"நான் நாளைக்கு ஆஃபீஸ்லேந்து வரும்போது நிறைய வாங்கி வர்றேன். இப்ப சண்டை போடாம இந்த ரெண்டை, நாலுபேரும் எடுத்துப்போமே!" அலுவலகத்திலிருந்து வந்த களைப்பில் சலிக்காமல், ஜெயராம் குழந்தைகளைச் சமாதானப்படுத்தத் தொடங்கினான்.

"எனக்கு கொட்டை வேண்டாம்!" இரண்டு குழந்தைகளும் மறுபடியும் பூசலைத் தொடங்கின.

"உங்க ரெண்டு பேருக்கும் கொட்டையோட அருமையே தெரியல. சதுப்பை மத்தவங்ககிட்ட தள்ளிட்டு, கொட்டையக் கையில பிடிச்சுச் சாப்பிடும்போது கெடைக்கிற ருசியே அலாதி!" அவர்களைச் சமாதானப்படுத்தியபடியே ஜெயராம் வழிகாட்டலானான். மாம்பழக் கொட்டையை ருசிக்கும் அப்பாவை, குழந்தைகள் இருவரும் அதிசயத்துடன் பார்க்கத் தொடங்கினர்.

"மத்தவங்க பொதுவா விரும்பறதை விட்டு, நம்ம வேற மாதிரி இருந்தா போட்டியே இருக்காது, தெரியுமா? நான் சின்ன வயசிலேந்து அப்படித்தான் இருந்தேன்! ஹோட்டல்ல காஃபி குடிக்கும்போது டம்ளரைவிட்டு டவரால குடிப்பேன்! ஏன்னா, அதுல யாரும் சூப்பி குடிச்சிருக்க மாட்டாங்க! இரயில்ல போறப்பகூட சைடு பர்த்தை வேணும்னு கேப்பேன். அது தனியா இருக்கும். எல்லாம் நம்ம மனசுல இருக்கு. வேற மாதிரி இருக்கப் பழகிக்கணும்!" குழந்தைகள் சமாதானமாகி, மீதி இருந்த கொட்டையைப் பார்க்கத் தொடங்கினர்.

வெற்றிக்களிப்புடன் தான் தின்ற கொட்டையைக் குப்பையில் போட சமையல் அறைப்பக்கம் ஜெயராம் விரைந்தான். மனைவி சரஸ்வதி 'உம்' மென்றிருந்தாள்.

"அடி அசடே! என்னாச்சு?"

"என்னை உங்களுக்கு எப்படிப் புடிச்சு கல்யாணம் செஞ்சுக்கிட்டீங்கன்னு இப்பத்தான் தெரியுது" என்றாள்.

இந்தப் பெரிய குழந்தையை எப்படி சமாளிப்பது என்று யோசித்தபடியே ஆதரவாக அணைத்தான் ஜெயராம். ○





★ சத்யோஜதா

லட்சுமி தரு

இந்த ஆண்டு ஜூலை மாதம் தொடங்கி அக்டோபர் வரையிலான நான்கு மாத காலத்தில், உலகமெங்கும் பத்து கோடி மரங்களை நட்டு, சுற்றுச் சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது, ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரின் 'ஆர்ட் ஆஃப் லிவிங்' அமைப்பு. அதனைச் செயல்படுத்த தமிழகத்துக்கு வந்திருந்தார் சுவாமி சத்யோஜதா. அவருடன் ஒரு சந்திப்பு...

''ஈஷாவுடன் போட்டியா?'' என்றோம்.

''சமூக அக்கறையுடன் செய்யப்படும் பணிகளில் யாருக்கும் யாரும் போட்டி கிடையாது. ஒவ்வொருவருக்கும் ஓர் இலக்கு இருக்கிறது. அதை நோக்கி அனைவரும் சென்றுகொண்டிருக்கிறோம்.

'ஆர்ட் ஆஃப் லிவிங்' அமைப்பு, ஆன்மிகப் பணியுடன் சமூக சேவையிலும் மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. சமூகம் சந்தித்துக்கொண்டிருக்கும் பெரிய பிரச்னைகள் குறித்து, உலக மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதுதான் இதன் நோக்கம். அடுத்து வரும் தலைமுறைக்கு நாம் அளிக்கும் மிகச் சிறந்த பரிசு, வாழ்வதற்கேற்ற தூய்மையான பூமியைத் தவிர வேறு எதுவும் இல்லை.''

''ஸ்ரீஸ்ரீ குருஜி, 'லட்சுமி தரு' என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளாரே...? அது என்ன?''

''சிமரூபா என்ற பெயர் கொண்ட மரத்துக்குத்தான் ஸ்ரீ ஸ்ரீ, 'லட்சுமி தரு' என பெயரிட்டிருக்கிறார். இது மத்திய அமெரிக்க நாடுகளில் வளரும் ஒரு மரமாகும்.

சிமரூபா மர விதைகளில் அறுபது முதல் எழுபத்தைந்து சதவிகித அளவு எண்ணெய்த் தன்மை உள்ளதால், ஒரு ஹெக்டேர் நிலப்பரப்பில் இதனைப் பயிரிட்டால், ஆண்டுக்கு ஆயிரம் முதல் இரண்டாயிரம் கிலோ வரை எண்ணெய் கிடைக்கும். இதில் உடலுக்கு ஊறு விளைவிக்கும் கொழுப்புகள் இல்லை. மேலும், குளியல் மற்றும் சலவை சோப்புகள், வார்னிஷ், அழகு சாதனப் பொருட்கள், மருந்துகள் தயாரிக்கவும் இந்த எண்ணெய் பயன்படுகிறது. இதன் புண்ணாக்கில் நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாஷ் ஆகியவை இருப்பதால் தாவரங்களுக்குச் சிறந்த இயற்கை உரமாகிறது.

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் இதனை தரிசு நிலங்களில் பயிரிடுவதற்குப் பெரும் முயற்சி செய்கிறார். அவரது வாழும் கலை அமைப்பின் மூலமாக இதுவரை ஆறு லட்சம் லட்சுமி தரு கன்றுகள் வினியோகமாகி இருக்கின்றன.''

– எஸ்.சந்திரமௌலி

தராசு

● கருப்பம்புலம் சித்திரவேலு, நெய்விளக்கு

? தமக்கு ஏழை மக்கள் மேல் பைத்தியம்; உண்மை மேல், நியாயத்தின் மேல் பைத்தியம் என்கிறாரே விஜயகாந்த்?

! அவர் காரியங்கள் பைத்தியக்காரத்தனமானவை என்ற விமர்சனத்துக்கு, அவர் அளித்த பதில் இது என்னும்போது ஏற்கலாம்தான். இங்கே 'பைத்தியம்' என்பதை 'பற்றுதல்' என்ற அர்த்தத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

● கி.துரைசாமி, மங்கலப்பட்டி

? மூன்றில் ஒரு பங்கு நிலம்தான் பூமியில். அதிலேயே இத்தனை விதமான வளங்கள், உயிரினங்கள். ஒரு பங்கு நீர், மூன்று பங்கு நிலம் என்று இருந்திருந்தால்...?

! கோடம்பாக்கத்துக்காரர்கள் நுங்கம்பாக்கத்துக்குத் தண்ணீர் தர மாட்டோம் என்று அடம் பிடிப்பார்கள். பச்சை என்ற நிறத்தை வண்ணப் படத்தில் மட்டுமே பார்த்திருப்போம். இரண்டாயிரம் வருடங்களைத் தொட்டிருக்க மாட்டோம்.

● என். பாலகிருஷ்ணன், மதுரை

? 'இந்தியாவையும் சரி, இந்தியாவின் மாநிலங்களையும் சரி... தனித்து ஆளும் தகுதி, எந்தக் கட்சிக்குமே இல்லை' என்கிறாரே டாக்டர் ராமதாஸ்?

! மருத்துவர் நோயைக் கண்டறிந்து கூறிவிட்டார்; நிவாரணம் என்ன என்று சொல்லவில்லை பார்த்தீர்களா! பா.ம.க


குசேலன் வெற்றிக்காக மண் சோறா?

நீங்கள் கேட்டவை

போன்ற ஏராளமான மாநில கட்சிகள், தேசிய நீரோட்டத்தில் சேர்ந்து, பிரிட்டன் - அமெரிக்கா போல இரு



* கல்லாத பாடம்


★ நாரத ப்ரிஸ்க்ரிப்ஷன்

கட்சி ஜனநாயகத்துக்கு வழி வகுக்கலாமே. எவ்வளவோ நன்மைகள் விளையுமே!

● **எஸ்.பக்கிரிசாமி, திருவாரூர்**

? *'ரஜினி கன்னடர்களிடம் கேட்ட மன்னிப்பு சுயநலம் மிகுந்தது' என்று சரத்குமார் கூறியுள்ளது பற்றி...?*

! 'பாடம் கற்றுக்கொண்டேன்' என்கிறார் ரஜினி. அவர் கற்றுக்கொள்ள வேண்டிய முதல் பாடம்: ரஜினி எதைச் சொன்னாலும் அது விமர்சனத்துக்கு உள்ளாகும் என்பதே. எனவே, அவர் அவசரப்பட்டோ உணர்ச்சிவசப் பட்டோ வார்த்தைகளை விடவும் வேண்டாம்; அப்புறம் அவஸ்தைப் பட்டு நெளியவும் வேண்டாம்! குசேலனுக்கு கர்நாடகாவில் எதிர்ப்பு இருக்கக்கூடாது என்பது ரஜினியின் சுயநலமெனில், ரஜினியை விமர்சித்து செய்தியில் இடம் பெறுவது சரத்குமாரின் சுயநலம். சரத்குமாரின் விமர்சனத்தை இவ்வாறு விமர்சிப்பது தராசின் சுயநலம்!

● **ரகு வெங்கட், திருநகர்** ★

? *இந்திய கிரிக்கெட் இலங்கையில் சொதப்புவது ஏன் ஸார்?*

! சொதப்பினது சொப்பனம் என்கிற அளவுக்கு அடுத்த மேட்சில் சொல்லி அடிக்கத்தான்!

● **கே.கே.வெங்கடேசன், வேலூர்**

? *மீண்டும் முதலமைச்சர் ஆகும் ஆசை இல்லை என்கிறாரே கருணாநிதி?*


! சென்ற தேர்தலின்போதே சொன்னார். ஆனால், கட்சி சூழல் அவரது பிரதிக்ஞை நிறைவேற அனுமதிக்கவில்லை. இப்போது அந்தச் சூழல் மேம்படுவதற்குப் பதிலாக, மேலும் சிக்கலாகியுள்ளது. எனினும் முதல்வரின் ஆசை... ஸாரி, ஆசையின்மை இம்முறையாவது நிறைவேற பிரார்த்திப்போம்!

● **கருப்பம்புலம் சித்திரவேலு, நெய்விளக்கு**

? *'ம.தி.மு.க.வினர் கவுன்சிலர் பதவிக்குக்கூட ஆசைப்படுவதில்லை' என்கிறாரே வைகோ?*

! இப்படிச் சொல்வது, 'சீச்சி! இந்தப் பழம் புளிக்கும்' கதைதான். இதில் பெருமை இல்லை. கவுன்சிலர், எம்.எல்.ஏ. பதவிகளை வெல்வோம். நாடு - நகரங்களுக்கு நல்லது செய்வோம்' என்பதல்லவா ம.தி.மு.க.வினரின் ஆசையாக இருக்க வேண்டும்! இல்லாது போனால் கட்சி எதற்கு? கலைத்து விடலாமே!


★ கசப்பான...


★ ... முணுமுணுப்பு...

● **டி.முருகேசன், திருவாரூர்**

? *குசேலன் படம் ஓட வேண்டும் என்பதற்காக மதுரை பக்கம் உள்ள ரசிகர்கள் மண் சோறு சாப்பிட்டது பற்றி?*

! மண் சோறு செரிக்குதோ இல்லியோ, ரஜினிக்கு முக்கியத்துவம் தரப்படாததை அவரோட தீவிர ரசிகர்களால் ஜீரணிக்க முடியுமா? அதில்தான் அடங்கியிருக்கு

❒ ரூ.100/- பரிசு பெறுபவர்:
இரா. சக்கரபாணி, மதுரை - 7


படத்தோட வெற்றி; ஆனா கதாசிரியர், இயக்குநர் ஏற்கெனவே ஜெயிச்சாச்சு!

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? தமது ஆட்சிக் காலத்தில், தம் மீது வழக்குகள்



* அர்த்தமுள்ள பைத்தியம்!



* நிறைவேறாத ஆசை(யின்மை)!

தொடரப்பட்டபோது, 'நீதிமன்றத் தீர்ப்பு வரட்டும்' என்ற ஜெயலலிதா, இப்போது இரு தி.மு.க. அமைச்சர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டிருப்பதால், அவர்கள் பதவி விலக வேண்டும் என்கிறாரே?

! அரசியல்வாதிகள் எப்போதும் அப்படித்தானே! தங்களுக்கொரு நீதி, எதிர்க் கட்சிக்கு மற்றொன்று. ஆனால், ஒரே கட்சிக்குள் பூங்கோதை ஆலடி அருணாவுக்கு ஒரு நியாயம்; சுரேஷ் ராஜன், என்.கே.கே.பி. ராஜாவுக்கு மற்றொன்று என்பது, அக்கட்சிக்குள்ளேயே கசப்பு மிகுந்த முணுமுணுப்புகளுக்கு இடமளித்துள்ளது.

● பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? தொடர்ந்து 25 ஆண்டுகளுக்கு தி.மு.க. ஆட்சி செய்தால்தான் தமிழகத்தில் சமூக மாற்றம் ஏற்படும் என்கிறாரே அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி?

! நீண்ட கால தி.மு.க. ஆட்சியினாலோ, வேறு கட்சி ஆட்சியினாலோ விளையக் கூடியது அல்ல சமூக மாற்றம். அது பல்வேறு சக்திகளின் சேர்க்கையால்தான் நிகழ முடியும். முக்கியமாக மனித நேயமும் அன்பும் தழைக்க வேண்டும். கல்வியும், நல்ல வாசிப்பும் வேண்டும். அதற்கு இன்றைய அரசியல் கட்சிகள் எதுவும் கைகொடுக்கக் கூடியதாகத் தெரியவில்லை. அடுத்த கேள்வியைப் படியுங்கள்.

● இரா. சக்கரபாணி, மதுரை - 7

? டாஸ்மாக் கடைகளை இரவு பதினொரு மணி வரை செயல்பட அனுமதித்த தமிழக அரசு, தாலுகா, தலைநகர நூலகங்களை மட்டும் மாலை ஆறு மணிக்கே பூட்ட அனுமதித்திருப்பது நியாயமா?

! ஒருவேளை நூலக ஊழியர்கள் டாஸ்மாக் கடைகளுக்குப் போக நேரமில்லாமல் போய்விடப் போகிறதே என்ற அக்கறையோ என்னவோ!

● பி.சிவா, பாளையங்கோட்டை

? நிகழ்காலம் - எதிர்காலம் - எது முக்கியமானது?

! எதிர்காலத்தின் மீது ஒரு கண்ணை எப்போதும் வைத்துள்ள நிகழ்காலம்.



* கால்நூற்றாண்டு கணக்கு!

* ரூ.50/- பரிசு பெறுபவர்:

ரகு வெங்கட்,

திருநகர்

திக்திக் தொடர்கதை 3

"என்ன இருந்தாலும் அந்த குரு, அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது. பவித்ரா பாவம். ஏற்கெனவே நொந்து போயிருந்தா'' என்று வேதனையுடன் கூறினாள் புவனேஸ்வரி அம்மாள்.

"அவர் கோணத்திலே யோசிச்சுப்பாரு. அவரைப் பொருத்தவரை அவர் மனைவி செத்துப்போனதற்கு...'' ஈஸ்வரன் பாதியில்



வாக்கியத்தை நிறுத்திக்கொண்டார். '............... பவித்ராதான் காரணம்' என்று வெளிப்படையாகக் கூறி வாக்கியத்தை முடிக்க அவருக்கு மனம் வரவில்லை.

"ஏங்க, பவித்ரா வெளியே போயிட்டு ரெண்டு மணி நேரத்துல வந்துடுவேன்னு சொல்லிட்டுப் போனா. எங்கேன்னு சொல்லலே. நானும் கேட்கலே. உங்ககிட்டயாவது போகும் இடத்தைச் சொன்னாளா?''

"விக்ரமைப் பார்க்கப் போயிருக்கா. அவன் வரச் சொன்னானாம்.''

முதலில் புரியவில்லை. யார் இந்த விக்ரம்? பிறகு நினைவு வந்தது. பவித்ராவுடன் கல்லூரியில் படித்தவன். அவனுக்கு ஒரு வருடம் சீனியர். இப்போது போலீஸ் இன்ஸ்பெக்டர்.

"போலீஸ் ஸ்டேஷனுக்கா போயிருக்கா?'' என்று கவலையுடன் கேட்டாள் புவனேஸ்வரி அம்மாள்.

அருண் சரண்யா

''அதை நான் கேட் கல்ல.''

''என்ன விஷயமாம்?'' கேட்கும்போதே அதற்கான விடை கணவரிடம் இப்போதைக்கு இருக்காது என்று தோன்றினாலும், அவளின் மனக் கவலை அப்படி கேள்வியாக வெளியானது.

கொண்ட புன்னகையுடன்.

அதாவது ஒரு இன்ஸ்பெக்டர் என்ற வகையில் தன்னை விசாரிக்கப் போவதில்லை என்கிறான்.

பிறகு அவன், ''விபத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட கொஞ்ச

நில்... கவனி... ~~செல்!~~ கொல்!

''தெரியல்ல'' என்ற ஈஸ்வரன் சில நொடிகளுக்குப் பிறகு மெதுவாக, ''ஷிப்ரா செத்துப் போனாளே அந்தப் பகுதி போலீஸ் ஸ்டேஷனில்தான் விக்ரம் இப்போ இன்ஸ்பெக்டரா இருக்கானாம்'' என்றார்.

''ஆக ஷிப்ரா செத்ததுக்கு நான்தான் காரணம் விக்ரம்'' என்று முடித்தாள் பவித்ரா.

அந்தப் பெரிய ஹோட்டலின் மூலையில் இருந்த நாற்காலிகளில் எதிரெதிராக உட்கார்ந்திருந்தனர் பவித்ராவும் விக்ரமும். இருவருக்கும் எதிரே வைக்கப்பட்டிருந்த காப்பி ஆறிக்கொண்டிருந்தது. சந்திப்பின் நோக்கம் அது அல்லவே!

பவித்ரா கூறியதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த விக்ரம் சட்டென பதிலளித்தான். ''நீ சொன்னதையெல்லாம் நான் ரப்பர் போட்டு அழிச்சிட்டேன்'' என்றான் வலுக்கட்டாயமாக வரவழைத்துக் நேரத்திலேயே அந்த லெவல் க்ராஸிங் பகுதிக்குப் போனேன். ஷிப்ராவின் கைப்பையும் குடையும் அங்கே கிடந்தன. ஆனா, அவளோட செல்ஃபோன் அங்கே இல்லையே!'' என்றான்.

கூறிவிட்டு மௌனமானான். போஸ்ட் மார்ட்டத்துக்கு அனுப்பப்படுவதற்கு முன் அவன் கண்ட பவித்ராவின் உடல், அவனுள் இன்னமும் சோகத்தை உண்டாக்கிக்கொண்டிருந்தது. அவன் தொழிலில் பிணங்களைப் பார்ப்பது அரிதில்லை. ஆனால் அவனுக்கு ஏற்கெனவே அறிமுகமான ஒருத்தி, மண்டை ஓடு பிளந்த நிலையில் இறந்திருந்த கோலத்தை அவனால் எளிதில் மறக்க முடியவில்லை. அவளது கவனமின்மைக்குக் காரணமாக இருந்தது தான்தான் என்று இப்போது கூறுகிறாள், தான் ஒரு காலத்தில் காதலித்த பவித்ரா.

''ஷிப்ரா இறந்தது மட்டுமில்லே, வேறொண்ணும் என் மனசை வாட்டுது



விக்ரம்.''

'என்ன?' என்பது போல் புருவங்களைச் சுருக்கினாள் விக்ரம்.

''நான் சிங்கப்பூருக்குப் போனதிலே யிருந்தே ஷிப்ராவின் நடவடிக்கைகளிலே நிறைய மாறுதல். என்னை எதற்காகவோ அவ தவிர்த்தா.''

''ஃபோன்லே பேசினதா சொன்னியே. அப்போ அதைப் பத்தி எதுவும் சொல்லலியா?''

''இல்லை. அடுத்த செவ்வாயிலே சந்திக்கலாம்னு சொன்னா.''

அதாவது அன்றிலிருந்து ஐந்து நாட்கள் கழித்தா! விக்ரமுக்கு வியப்பாக இருந்தது. உள்ளூரிலேயே இருக்கும் ஒரு நெருங்கிய தோழியை ஏன் அவ்வளவு நாள் கழித்துச் சந்திக்க வேண்டும்? அதுவும் சில மாதங்கள் இருவரும் சந்தித்திராத நிலையில்!

அவன் சிந்தனையைப் புரிந்துகொண்ட பவித்ரா, ''அதுதான் எனக்கும் ஆச்சரியமா இருக்கு விக்ரம்'' என்றாள்.

சிறிது நேரம் மௌனத்தில் கழிந்தது. ஷிப்ராவைத் தவிர வேறெதைப் பற்றியும் நினைக்கும் மனநிலையில் பவித்ரா இல்லை என்பது புரிய, விக்ரம் ''வேறே காப்பி ஆர்டர் செய்யவா?'' என்றான்.

''வேணாம் விக்ரம். எனக்கும் உங்ககூட ஷிப்ரா பத்திப் பேசணும் போல இருந்தது. அதனால்தான் நீங்க கூப்பிட்டவுடனே வந்தேன்'' என்றாள்.

''தாங்க் யூ பவித்ரா, ஷிப்ரா இறந்திருக்க வேணாம்தான். அதுக்கு உன்னையும் ஒரு கருவியாகக் கடவுள் பயன்படுத்திட்டிருக்க வேணாம்தான். ஆனா, அதையே நினைச்சுக் கிட்டிருந்தா எப்படி? ஷிப்ரா இறந்தது எனக்கும் அதிர்ச்சிதான். அதுவும் இந்த நிலையிலே அவ இறந்திருக்க வேணாம். இருந்தாலும் நீ மனசைத் தேத்திக்கிட்டுத் தான் ஆகணும்.''

விக்ரம் எழுந்திருக்க, பவித்ராவும் எழுந்தாள்.

''நேரே வீட்டுக்குத்தானே? நான் ட்ராப் செய்யவா?'' என்று கேட்டான் விக்ரம்.

''வீட்டுக்குத்தான். நானே போயிடுவேன்'' என்றாள் பவித்ரா.

ஆனால் விக்ரம் நகர்ந்த அடுத்த நொடிகளிலேயே அவளது திட்டம் மாறியது.

ஷிப்ரா இறந்த இடத்துக்குச் செல்ல முடிவெடுத்தாள். பிரிந்த உயிர் அந்த லெவல் க்ராஸிங் அருகேயே சுற்றிக் கொண்டிருக்குமோ?

லெவல் க்ராஸிங் மூடியிருந்தது. ரயில்கள் பாட்டுக்குத் தாளகதி மாறாமல் நேரத்துக்கு, இருபுறமுமாகச் சென்று கொண்டிருந்தன. மக்கள் அவரவர் வேலையில் மூழ்கியிருந்தனர். சற்றுத் தள்ளி சிறு கூடையொன்றைச் சுமந்தபடி வேர்க்கடலையை ஒருத்தி விற்றுக்கொண்டிருந்தாள். சிறுமி ஒருத்தி, ''நான்தான் முதலில் போவேன்'' என்றபடி லெவல் க்ராஸிங்கை நெருங்க, பின்னாலிருந்து அவள் அம்மா, ''பார்த்துப் போடி. ரயில் வரப்போகுது'' என்று கத்தினாள்.

தன்னிச்சையாக பவித்ரா அந்தச் சிறுமியைப் பிடித்துக்கொண்டாள். ''ரயில் வர்ற இடம். பார்த்துப் போக வேணாமா? கேட்டைத் திறந்தபிறகு போகக் கூடாதா?'' என்று கடிந்துகொண்டாள். ''நல்லாச் சொல்லுங்க'' என்றபடி அங்கு வந்த அந்தத் தாய், மகளின் கையை இறுகப் பற்றியபடி நகர்ந்தாள்.

பவித்ரா தன்னெதிரே கிடந்த தண்டவாளங்களை வெறித்துப் பார்த்தாள். இதோ இந்த இடத்தில்தான் ஷிப்ராமீது ரயில் ஏறியிருக்கும். பவித்ராவின் உடல் நடுங்கியது. 'ஷிப்ரா, நீ எதுக்காகடீ செத்துப் போனே? அதற்கு என்னை ஏண்டி ஒரு காரணமாக்கிக் கிட்டே?' என்று அரற்றினாள். விக்ரமும் இதேபோல் கூறி, தன்னைச் சமாதானப் படுத்தியது நினைவுக்கு வந்தது. கூடவே அவன் கூறிய வேறொரு வாக்கியமும் நினைவுக்கு வர, பரபரப்பானாள். உடனடியாக விக்ரமை தன் கைபேசியில் தொடர்பு கொண்டாள்.

''சொல்லு பவித்ரா, என்ன விஷயம்?''

''ஷிப்ராவைப் பத்தி பேசும்போது 'இந்த நிலையிலே அவ இறந்திருக்க வேணாம்'னு சொன்னீங்களே. எதை மனசிலே வைச்சுக்கிட்டு அப்படிச் சொன்னீங்க?''

''போஸ்ட்மார்ட்டத்திலே கண்டுபிடிச்ச விவரத்தை வைச்சுதான். சாகும்போது ஷிப்ரா முழுகாம இருந்திருக்கா. ரெண்டு மாச கர்ப்பம்.''

தொலைபேசியின் இணைப்பைத் துண்டித்த பிறகும், பிரமை பிடித்தவள் போல் நின்றாள் பவித்ரா. 'நீ ஷிப்ராவை மட்டும் சாகடிக்கலே' என்று குரு கூறியது நினைவுக்கு வந்தது.

(திக் திக்)



''நம் இளவரசர் போர்ப்பயிற்சி எடுத்து வருகிறாரா, எப்படி?''

''முதன்முதலாக எறும்பைப் பிடிக்க சர்க்கரை வியூகம் அமைத்துக்கொண்டிருக்கிறார்!''

- சாயம் வெ.ராஜாராமன்

வாழ்த்துகள்

மாக்ஸேஸே ஜோடி!

"என் அப்பா இப்போது உயிருடன் இருந்திருந்தால், அவர் பெரிதும் மகிழ்ந்திருப்பார். இது எனக்கும் என் மனைவிக்கும் மட்டும் தரப்பட்ட விருதாக நான் நினைக்கவில்லை. என்னுடன் கூடவே இருந்து இந்த ஆதிவாசி மக்களின் வாழ்க்கைத் தரம்



மேம்படுவதற்காக உழைத்துக்கொண்டிருக்கும் அனைவருக்குமானதாகவே நினைத்து மகிழ்கிறேன்'' என்கிறார் டாக்டர் பிரகாஷ் ஆம்தே. ஆசியாவின் நோபெல் பரிசு என்று பெருமைப் படத்தக்க, ரமோன் மாக்ஸேஸே விருதுக்குரியவராக டாக்டர் பிரகாஷ், அவரது மனைவி மந்தாகினி இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

பிரகாஷ் ஆம்தே, பிரபல சமூகத் தொண்டரும் காந்தியவாதியுமான பாபா ஆம்தேயின் மகன். பாபா ஆம்தேக்கு 1985 ஆம் ஆண்டில் ரமோன் மாக்ஸேஸே விருது வழங்கப்பட்டது. தந்தை பெற்ற மாக்ஸேஸே விருதை, மகனும் பெறுவது இதுவே முதல் முறை.

நாக்பூருக்கு அருகில், வரோரா என்ற ஊரில், பெரிய நிலச்சுவான்தார் குடும்பத்தில் பிறந்தவர் பாபா ஆம்தே. அவர், தம் வீட்டுக் கிணற்றில் தலித் மக்களைத் தண்ணீர் எடுத்துக்கொள்ள அனுமதித்தபோது, ''நீ என்ன பெரிய புரட்சிக்காரனா?'' என்று உறவினர்கள் சீறினார்கள். பாபா ஆம்தே அசரவில்லை.

ஒரு மழைக்கால மாலையில் சாலை ஓரத்தில் சாகக் கிடந்த தொழுநோயாளியை அரவணைத்து, சாகும்வரை அன்புடன் பராமரித்தார் பாபா ஆம்தே. 'தொழுநோயாளிகள் முன்பிறவியில் பாவம் செய்தவர்கள்; அவர்கள் அருகில் இருந்தாலே நமக்கும் தொழுநோய் தொற்றிக்கொண்டுவிடும்' என்று தொழுநோயாளிகள், சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட காலம் அது. அவரால் தொழுநோயாளிகளுக்காகத் துவக்கப்பட்ட கிராமம்தான் ஆனந்தவனம்.

"ஆதிவாசி மக்கள், தொழுநோயாளிகளைவிட மோசமான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களை ஒதுக்கிவிட்டு இந்தியாவின் வளர்ச்சி பற்றிப் பேசுவது அபத்தம். மிகப்பெரிய அணைகள் கட்டப்படும்போது அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். முடிவில், ஆதிவாசி மக்கள் நகர வீதிகளில் பிச்சை எடுக்கும் அவல நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்'' என்று கூறி, ஆதிவாசிகள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் திட்டம் வகுத்தார் பாபா ஆம்தே.

அதன்படி துவக்கப்பட்டதுதான் மகாராஷ்டிரா மாநிலம் விதர்பா பகுதியில் கத்சிரோலி மாவட்டத்தில் உள்ள ஹேமல்காசா இல்லம். அங்கே ஆதிவாசி மக்களுக்காக ஒரு பள்ளிக்கூடமும், 40 படுக்கைகள் கொண்ட மருந்துவமனையும் நடத்தி

வருகிறார்கள் பிரகாஷ் - மந்தாகினி டாக்டர் தம்பதி. இவர்களின் பள்ளியில் படித்த ஆதிவாசி மாணவர்களில் ஐந்து பேர் இன்று டாக்டர்களாகிவிட்டனர்.



✱ டாக்டர் பிரகாஷ் - மந்தாகினி

விருது பெற்ற டாக்டர் பிரகாஷ் ஆம்தேக்குப் பாராட்டு தெரிவிக்க, அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டோம். பேசமுடியவில்லை. ஆனந்தவனத்தில் உள்ள அவரது சகோதரரும் பாபா ஆம்தேயின் மூத்த மகனுமான டாக்டர் விகாஸ் ஆம்தேயிடம் பேச முடிந்தது. "கோதாவரி நதியில் வெள்ளம்; அங்கே களப் பணிக்குச் சென்றுள்ளார்கள். ஹேமல்காசா பகுதியில் கடந்த சில நாட்களாக மின்சாரம் கிடையாது. டெலிஃபோன் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. அவருடன் தொடர்புகொள்வது இப்போதைக்குச் சாத்தியமில்லை" என்றார்.

விருதுக்குப் பாராட்டு தெரிவித்தபோது, "விதர்பா பகுதியில் விவசாயிகள் தற்கொலை அதிகரித்துக்கொண்டிருக்கிறது. ஆனால், அந்தப் பகுதியைச் சார்ந்த தொழுநோயாளிகள் இன்று மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அப்பா துவக்கி வைத்த பணியைத் தொடர்கிறோம். அது எங்களுக்குப் பெரும் ஆத்ம திருப்தி" என்றார்.

– எஸ்.சந்திரமௌலி



கிரேஸியைக் கேளுங்கள்

● வளர்மதி,
திருப்பூர்

மரணம் வருவது முன்கூட்டியே தெரியுமா...?

தெரியாது... மரணம் ஒரு மாய மான். வாழ்க்கையின் ஒரு பகுதி என நினைத்து, நாம்தான் அதைத் துரத்திப் பிடிக்கிறோம். zen கதை போலத் தோன்றிய என் கதை ஒன்று சொல்கிறேன்.

''குருவே! தாங்கள்தான் எனக்கு வழி காட்ட வேண்டும்.''

''சிஷ்யா, என்னைப் பின் தொடர்ந்து வா...''

''அய்யோ! இது நரகமல்லவா. உங்களை நம்பி மோசம் போனேனே. நீங்கள் zen இல்லையா?''

''இல்லை... yamaha...''

● பிச்சுமணி,
பெரம்பூர்

உங்களை ஔவையாராக நினைத்துக் கேட்கிறேன். எது கொடிது?

''கொடிது கொடிது இல்லாமை கொடிது... அதனினும் கொடிது கடை விரித்தும் கொள்வாரில்லை... அதனினினினும் கொடிது போயும் போயும் என்னை ஔவையாராக நினைத்தது.''

● எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி

இழந்த நாட்களில் ஒன்றைப் பெற முடியுமென்றால், நீங்கள் எந்த நாளைப் பெற விரும்புவீர்கள்...?

நேற்றைப் பெற்று அதை இன்றாக்கி, இன்றை நாளையாக்கி, நாளையை நேற்றாக்கி விடுவேன். நான் பெற விரும்பும் நேற்று, ஞாயிற்றுக் கிழமையாக இருக்கும்படி பார்த்துக் கொள்வேன். வாரத்தில் எல்லா நாட்களும் ஞாயிறு போற்றுதுமாகி விடும். அப்பால எனக்கு டெய்லி டிராமா... ஹவ் ஈஸ் இட்...!

● ஜகதீசன், மயிலாடுதுறை

ஆத்திகமும், நாத்திகமும் சந்தித்துக் கொண்டால் என்ன பேசிக் கொள்ளும்?

எது அழகு?

பிரிந்தவர் கூடினால் பேசவும் தோன்றுமோ!

● ஜே.துரைராஜ், சென்னை

ஜோஸியர்களை மாற்றினால் நல்ல பலன் கிடைக்குமா?

விஞ்ஞானிகள் இல்லாது போயிருந்தால், புவிஈர்ப்பு இல்லாமல் போயிருக்குமா?

● கே.ஜகந்நாதன், சேலம்

மழைக்காலம், குளிர்காலம், இலையுதிர்காலம்... இப்படி கற்பனைக்கு ஏற்ற காலம் எது...?

பொல்யூஷன் அகத்தத்தால் பஞ்சர் ஆகிக்கொண்டி-



ருக்கும் பூகோள சுற்றுப்புறச் சூழலைப் பார்த்தால், காலமே கற்பனை ஆகிவிடப் போகிறது இன்னும் கொஞ்ச காலத்தில்!

● ராஜேஸ்வரி சுப்பிரமணியன், வளசரவாக்கம்

மனைவி அமைவதெல்லாம் இறைவன் தந்த வரம் என்றால், கணவன் அமைவதெல்லாம் யார் தந்த வரம்?

தமயந்திக்கும், சகுந்தலைக்கும் சுயம் வரம் தந்த வரம். பாஞ்சாலிக்கோ ஐவரம். ஆண்டாளுக்கு அரங்கனே வரனாக வந்த வரம். இந்நாளில் கணவன் அமைவது 'காலம்' தந்த வரம். அதாவது matrimonial - 'column' தந்த வரம்!

● ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன் புதூர்

எதை 'அழகு' என்று சொல்வீர்கள்?

பொய்க் கோபத்தில் செல்லமாக 'அழகு காட்டுவது' அழகு!

● த.சத்தியநாராயணன், அயன்புரம்

கோயிலில் தோப்புக்கரணம் போடுவதற்கும், பள்ளிக்கூடத்தில் போடுவதற்கும் என்ன வித்தியாசம்...?

பரீட்சைக்கு முன் கோயிலில், பாஸாக 'தோப்புக்'கரணம். பரீட்சைக்குப் பின் பள்ளியில், ஃபெயிலாகி 'தோற்புக்'கரணம். கோயிலில் பிள்ளையாருக்கு. பள்ளியில் பிள்ளை வாத்தியாருக்கு!

உமறு புலவரும்... உலக நாயகனும்..!

மதுரை, ஒரு கோயில் மாநகரம்.

''இங்கு எப்போதும் எல்லா கோயில்களிலும் பக்தர்கள் கூட்டம் நிறைந்து வழியும்'' என்று சில மதுரைக்காரர்கள் நல்ல பிள்ளை போல் மதுரை பெருமையை உயர்த்திக் கூற நீங்கள் கேட்டிருக்கலாம். உடனே உங்களுக்கும் மதுரையில் எல்லோரும் நெற்றியில் பட்டையோடு, கையில் கீதையோடு, சாமி பாடல்கள் ஒலிக்க, அமைதியான புன்முறுவலோடு குறுக்கும் நெடுக்குமாக நடந்து போவது போன்ற விஷுவல் ஞாபகத்துக்கு வந்திருக்கலாம். அது தவறு!

அவ்வளவு சீக்கிரமாய் மதுரை மக்களின் கேரக்டரை நீங்கள் விஷுவலில் கொண்டு வர முடியாது. கோயிலில் மட்டுமா கூட்டம்? அல்வா கடை, நகை கடை, புரோட்டா கடை, டாஸ்மாக், போலீஸ் ஸ்டேஷன், மார்ச்சுவரி... என தாறுமாறாக கல்லா கட்டி ஏறும் அளவுக்கு கூட்டம். சுருக்கமாகச் சொன்னால் மதுரை மக்களை 'என்ஜாய்' பண்ணுபவர்கள் எனலாம். அவரவருக்குப் பிடித்த ஏதோ ஒன்றை அனுபவித்துப் பண்ணுவார்கள். அது கலையாக இருந்தாலும் சரி; கொலையாக இருந்தாலும் சரி!

இதில் பட்டிமன்றம் மட்டும் மற்ற எந்த ஊரிலும் இல்லாதபடி, மதுரையின் கலாசாரத்தில் இரண்டற கலந்தது. பட்டிமன்றம் என்றால் ஜனம் குவியும். மதுரையின் இன்றைய பட்டிமன்றங்களின் நட்சத்திர நாயகர் பேச்சாளர் கு.ஞானசம்பந்தன், எனக்குக் கல்லூரி புரொஃபசர். நகைச்சுவையின் வகைகளை ஆழ்ந்து உணர்ந்தவர்.

மதுரை தியாகராசர் கல்லூரியில் எனக்கு தாவரவியல்தான் முக்கிய பாடம். முக்கிமுக்கி படித்தாலும் தடுமாற்றம்தான். மேஜர் வகுப்புகள் என்றால் முழி பிதுங்கித் தொங்கும். ஹாஃலியான் தல் அனுவல். லேட்டுக்கா சட்டைவா என சாதாரண செடிகளுக்குக்கூட ஹாலிவுட் ஆக்ஷன் படங்கள் போல பேர் வைத்து மிரட்டுவார்கள். வழி தெரியாத எலி நடு ஹாலில் சிதறி ஓடுவது போல், ஆளுக்கொரு பக்கம் ஓடி மறைவோம். தமிழ், ஆங்கில வகுப்பில்தான் ரிலாக்ஸ்!

'ஐயா' எங்களுக்கு தமிழ் பேராசிரியராக வருவார். (கு.ஞானசம்பந்தத்தை நாங்கள் அப்படித்தான் அழைப்போம்.) மேஜர் வகுப்பு முடிந்து, அவர் வந்ததும் ''என்ன மாரத்தான் ஓடிட்டு வந்த மாதிரி முகமெல்லாம் தொங்கிப் போயிருக்கு. கொஞ்ச நேரம் தூங்குறீங்களா?'' என சீரியஸாகவே கேட்பார். அவர் பேச

இயக்குநர் சிம்புதேவன்

என்னை இயக்கிய ஹீரோக்கள் - 3

ஆரம்பித்தால் திகட்டத் திகட்ட சிரிக்க வேண்டியிருக்கும். கட் அடித்துவிட்டுப் போய் விடுபவர்கள்கூட, இவர் வகுப்புக்கு மட்டும் வந்து விடுவார்கள்.

இயல்பாக பேசுவார் ''காலைல பஸ் ஸ்டாண்டுல இறங்கி நடக்கும்போது உட்கார்ந்திருந்த ஒரு பாட்டி என் மேல எச்சித் துப்பிருச்சு. நான் பேச ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடி 'ஏம்பா பாத்துப்போக கூடாதா?'னு அந்தக் கிழவி அதட்டுது. நான் அதிர்ச்சில முழிக்க அதுக்குள்ள அந்தப் பாட்டி தொடர்ந்து பேசி 'என் எச்சிக்கு நடுவுல நீ எப்படிடா குறுக்க வரலாம்?'ங்கற மாதிரி பஞ்சாயத்தைக் கூட்ட... நான் பதறிப் போய் வந்துட்டேன்பா'' என்பார்.

படம் போட்ட பின் சிலர் தியேட்டருக்குள் நுழையும் அனுபவத்தை விவரிப்பார். சைக்கிள் மிதித்து அவதி அவதியாய் உள்ளே நுழைபவனுக்குக் கண் தெரியாது. பின்பக்கம் பார்த்து 'சினிமாவைக் காணோம்' என கத்துவான். ''யோவ் ஸ்கிரீன் அந்தப் பக்கம் இருக்கய்யா!' என்று குரல் வரும். அடுத்து தட்டுத் தடுமாறி படம் பார்த்துக்கொண்டே, உட்கார சீட் தேடுவான். ஒரு சீட் அருகே போய் தடவிப் பார்க்க, உட்கார்ந்திருப்பவரின் மூக்குத் தட்டுப்படும். உடனே ''இங்க ஆள் இருக்கீங்களா?' என்று கேட்பான். 'என்னய்யா கொடுமை இது? மூக்கு இருந்தா ஆள் இருக்க மாட்டாங்களா?' என்பார் உட்கார்ந்திருப்பவர்!

பார்வையில்தான் நகைச்சுவை இருக்கிறது. யாரையும் புண்படுத்தாமல், இயல்பு வாழ்க்கையில் காமெடிகளைக் கண்டுபிடிப்பதை அவரிடம்தான் கற்றுக்கொண்டேன்.

கல்லூரி வெளியிடும் 'தியாகராசர் செய்தி மடலின்' ஆசிரியர் அவர்தான். அதற்காகத்தான் முதலில் அவரைச் சந்தித்தேன். ''நான் ஓரளவு டிராயிங் வரைவேன் ஏதாவது பண்ணட்டுமா?'' என்றேன் தயக்கமாக. 'இது உங்களுக்கான பத்திரிக்கைப்பா! நீங்கதான் பண்ணணும். வரைஞ்சு கொண்டு வா!'' என்றார். ரெனால்ட்ஸ்



பேனாவில் வரைந்து ஓவியங்களை காண்பித்தேன். அருகில் இருந்த மற்ற புரொஃபஸர்களிடம் காண்பித்தார். ''பாருங்க நாமெல்லாம் பேனாவால எழுதுவோம்; அழுக்கெடுப்போம்; காது குடைவோம். இவரு எப்படி வரைஞ்சுருக்காரு பாருங்க! பிரமாதம்பா!'' என்ற அவரின் பாராட்டு எனக்குப் பெரும் ஊக்கமாக இருந்தது. தொடர்ந்து புரொஃபசர் சண்முகசுந்தரத்திடம் என்னை அறிமுகப்படுத்தினார்.



அவர் மூலம் மாநில அளவிலான பல போட்டிகளில் கலந்துகொண்டேன்.

ஐயா மூலம், தியாகராசர் செய்தி மடல் எனக்கான நல்ல களமானது. நிறைய எழுதினேன். பத்திரிகை என்றால் என்ன என பிடிபட்டது. ''நீ கொஞ்சம் ஓவராவே வரையுற. அடுத்த ஸ்டெப் போகணும் வா'' என பேராசிரியர் தொ.பரமசிவத்திடம் அறிமுகப்படுத்தினார். பல ஓவியங்களைப் பார்த்த அவர், அதிலிருந்த ஒரு கார்ட்டூனைப் பார்த்துவிட்டு, 'கார்ட்டூன் ஐடியா உனக்கு ஸ்ட்ராங்கா இருக்கு. இந்த ரூட்ல நிறைய வரை. MAD புத்தகம் பாரு. ஆர்.கே.லக்ஷ்மணனை நல்லா ஸ்டடி பண்ணு'' என்றார். அந்தப் பயிற்சிக்குப் பின் நான் வரைந்த கார்ட்டூன்களைப் பார்த்து வாய் விட்டுச் சிரித்த ஐயா, உடனே 'திருமலை' என்ற ரிப்போர்ட்டரிடம் அறிமுகம் செய்து, தினமலரில் பாதி பக்கம் எனது செய்தியும் கார்ட்டூன்களும் வெளியாகும்படி செய்தார். எந்தப் பிரதிபலனும் இன்றி என்னைப் பிடித்து மேலே உந்தித் தள்ளியவர். வெறும் களிமண்ணாக இருந்த எனக்கு உருவம் கிடைக்கக் காரணமானவர்.

தமிழ் வகுப்புகளில் மாணவர்கள் யாரும் நோட்ஸ் எடுக்க மாட்டார்கள். நான் ஆர்வ மிகுதியில் நோட்ஸ் எடுப்பேன். பரீட்சை நேரங்களில் மொத்தக் கல்லூரியே (மற்ற துறை மாணவர்களும்) எனது நோட்ஸை ஜெராக்ஸ் எடுத்துப் படித்து எழுதுவார்கள். ஒருமுறை உமறு புலவரைப் பற்றிய குறிப்பில் அவர் பெயர், வாழ்ந்த இடம், காலம், குடும்பம், இனம் எழுதிய நூல் என்ற நீண்ட பயோடேட்டா வின் இறுதியில் விரும்பிப் பார்ப்பது - கமலஹாசன் படங்கள் என ஜாலியாய் ஒரு வார்த்தைச் சேர்த்துவிட்டேன். படித்த எல்லோரும் சிரித்தார்கள்.

ஜோக் புரியாத ஒரு கூமுட்டை நபர். செமஸ்டர் தேர்வில் போய் உமறுபுலவர் கமலஹாசன் படங்களைத்தான் மாணசீகமாக விரும்பிப் பார்ப்பார் என ஆதாரபூர்வமாக எழுதிவிட்டான்! பெரும் பூகம்பமே வெடித்து விட்டது. உமறுபுலவர் கால

மென்ன? கமலஹாசன் காலமென்ன? அடிப்படையை அவன் யோசித்திருக்க வேண்டாமா? தமிழ் துறை கடும்கோபமாகி அவனை அழைத்துக் கேட்க, ''நான் இங்கிலீஷ் மீடியத்துல படிச்சவன்; தமிழ் புரியாது. நோட்ஸ்ல இருந்ததை எழுதிட்டேன்'' என அப்பாவியாக முடித்துக் கொண்டான். புலன்விசாரணை தொடங்கியது. கடைசியில் குற்றவாளி கூண்டில் நான் போய் நின்றேன். ''தப்புக்குத் தூண்டிய நீதான் பெரிய குற்றவாளி. ஓவியம் வரைய தெரியும்ங்கற மண்ட கனமா?'' என அப்போதைய தமிழ்துறை H.O.D கத்தி தீர்த்துவிட்டார். நான்கு நாள் என்கொய்ரி. உமறுபுலவரே அந்த நோட்ஸை பார்த்திருந்தால்கூட புன்முறுவலோடு விட்டிருப்பார். ஏதோ நான் சர்வதேச தீவிரவாதி போல் பின்னி பெடல் எடுத்துவிட்டார்கள். கடைசியில் ஐயாதான் வந்து காப்பாற்றினார். ''ஏதோ வெளையாட்டா பண்ணிட்டாங்க. இந்த ஒருமுறை மன்னிச்சுடுங்க'' என என்னை பெயிலில் எடுத்து கேஸையும் முடித்து வைத்தார்.

மாணவ எடிட்டர்' திட்டத்தில் வெற்றி பெற்று - கல்லூரி முடிந்து விகடனில் வேலைக்குச் சேர்ந்தேன். எனது ஒவ்வொரு வார ஜோக்கையும், கார்ட்டூனையும் ஒப்பனாக விமர்சிப்பார். படைப்பு எளிமையாகப் புரிய வேண்டுமென்பார். மனசில் ஒட்டாத விஷயங்களைச் சுட்டிக் காட்டுவார். அவர் சென்னை வரும்போது பல இரவுகள் மணிக்கணக்காகப் பேசுவோம். புத்தகங்கள் தருவார்.

ஐயா எப்போதும் இளமையானவர். சிரித்த முகத்தோடு எல்லாவற்றையும் எடுத்துக்கொள்வார். அதுதான் அவர் ப்ளஸ் பாய்ண்ட். அவர் எழுதிய முதல் புத்தகத்தில் தொடங்கி இன்றுவரை எல்லாவற்றிற்கும் நான்தான் அட்டைப் படம் போடுகிறேன். மதுரையில் ஹியூமர் கிளப் தொடங்கினார். பின் பிஸியாக உலகம் முழுவதும் பேச்சாளராகச் சுற்ற ஆரம்பித்தார். எல்லா பிஸியிலும் அவரைச் சுற்றி உள்ள சிலருக்காகத் தவறாமல் நேரம் ஒதுக்குவார்.

சினிமாவுக்குச் செல்ல முடிவெடுத்த போது - நல்ல கார்ட்டூனிஸ்ட் வேலையை விடணுமா என்ற நெருக்கடி வந்த நேரம் ஒரு காஃபி ஷாப்பில் அவரைச் சந்தித்துப் பேசினேன். ''உன் உள்ளுணர்வு என்ன சொல்லுதோ அதைச் செய்! என்னால் முடிஞ்ச உதவியை நான் செய்றேன்!'' என்றார் சுருக்கமாக.



* கு. ஞானசம்பந்தத்துடன்...

''இம்சை அரசன் 23-ம் புலிகேசி படம் ரிலீஸான போது ஆத்மார்த்தமாக பாராட்டினார் நிறைய விமர்சித்தார். எங்கள் கல்லூரிக்கு வர வைத்துப் பாராட்டு விழா நடத்தினார். என் துறை புரொஃபசர்கள் உள்ளிட்டு அங்கிருந்த எல்லா மாணவர்களும் சந்தோஷப்பட்டார்கள். நான் இன்னும் போக வேண்டிய தூரம் நிறைய உள்ளது. இருந்தாலும் இந்த இடத்தில் - என் கல்லூரியில் எனக்குக் கிடைத்த கைதட்டலுக்கு நான் காரணமல்ல. என் கல்லூரியும்... என் ஐயாவும்தான்!

நல்ல ஆசிரியர் அமைவதும் இறைவன் கொடுக்கும் வரம்தான்! **(பேசுவேன்)**

படம்: **ஸ்ரீஹரி**

ஆகஸ்ட்-15, ஸ்ரீ அரவிந்தர் பிறந்தநாள்

சக்தி தரும் 'சாவித்ரி'

"ஸ்ரீ அரவிந்தர் - சுதந்திரப் போராட்ட காலகட்டத்தில், பாரதி போன்ற அக்னி கவிக்குயில்களுக்கு, பாண்டிச்சேரியின் வேடந்தாங்கலாக விளங்கியவர். சுதந்திரப் போராட்டத்தில் காட்டிய அதே தீவிரத்தை, சுதந்திரமடைந்த பிறகு ஆன்மிகப் பணிகளுக்கு மடைமாற்றினார். அதன் உச்சம்தான் 'சாவித்ரி'என்கிற உன்னத படைப்பு" என்கிறார் மேற்கு மாம் பலம், ஸ்ரீ அரவிந்த அன்னை தியான மையத்தின் நிர்வாகி ஸ்ரீ அன்னை அடிகள்.

"ஸ்ரீ அரவிந்தரின் அன்றாட ஆன்மிக அனுபவங்கள்தான் சாவித்ரி. இவ்வுலகின் திருவுரு மாற்றத்துக்கான அமானுஷ்ய பார்வையின், அதி உன்னத வெளிப்பாடு இது. 'சாவித்ரி'யைச் சரியான நிலையில் வாசிக்கறபோது, இறைவனே நம் கையைப் பிடித்து, நம் உயர்ந்த இலட்சிய இலக்கு நோக்கி அழைத்துச் செல்வது போன்ற உணர்வினைக் கொடுக்கும். இந்தக் காவியத்தின் கவிதை வரிகளின் வார்த்தைகள் ஒவ்வொன்றும், 'ஓம்' என்ற மந்திரத்தை ஒத்திருக்குமாறு வடிவமைக் கப்பட்டுள்ளது.

மனம் சோர்வடைகிற சமயங்களில், செய்யும் செயல்களெல்லாம் தோல்வியில் முடிகிறபோது, 'சாவித்ரி'யை வாசித்தால் மனம் உந்தப்பட்டு உள்ளுணர்வு சக்தி யுடன், ஆழ்ந்த தொடர்பு ஏற்படுவதை உணர முடியும். 'யோகம் புரிவதற்கான ஒரு சிறந்த மீடியேட்டராக சாவித்ரி இருக் கிறது' என்று ஸ்ரீ அரவிந்த அன்னையே திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார்" என்கிறார் ஸ்ரீ அன்னை அடிகள்.

ஸ்ரீ அரவிந்தர் பரோடாவிலிருந்து பாண்டிச்சேரிக்கு வந்த பிறகுதான் சாவித்ரியை எழுத ஆரம்பித்தார். கிட்டத் தட்ட நாற்பது ஆண்டு கால உழைப்பில் உருவான இக் காவியத்தை, தம்முடைய ஆன்ம விழிப்பு நிலைக்கேற்ப பலமுறை மாற்றி எழுதியிருக்கிறார்.

'சாவித்ரி' பற்றி அரவிந்தர் கூறும் போது, "நான் 'சாவித்ரி'யை மனத்தளவில் துவக்கினேன். ஒவ்வொரு முறையும் நான் மேனிலை அடையும்போதும் அந்த நிலையிலிருந்து திருத்தி எழுதினேன்" என்கிறார்.

"சாவித்ரியை வாசிப்பதும் தியானிப் பதும் யோகம் புரிவதற்கு ஒப்பான செயல்" என்கிறார் ஸ்ரீ அரவிந்த அன்னை.

ஸ்ரீ அரவிந்தர் அவதரித்த ஆகஸ்ட் மாதத்தின் முதல் தேதி முதல், இறுதி தேதி வரை, சென்னை மேற்கு மாம்பலம் அயோத்தியா மண்டபம் அருகேயுள்ள ஸ்ரீ அரவிந்த அன்னை தியான மையத்தில், காலை முதல் மாலை வரை 'சாவித்ரி' காவியம் வாசிக்கப்படுகிறது!

ஆகஸ்ட் 15 அன்று காலை 6:30 மணிக்கு ஸ்ரீ அன்னையின் பால்கனி தரிசனமும் உண்டு.



– கனகவேல்



Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG s Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.